
இரட்டை மனிதன்
ஆசிரியர்:
கு.ப.ராஜகோபாலன்
ரூ.
2/4
K.R. SARMA

# காஞ்சனமாலை

**கு. ப. ராஜகோபாலன்**

*சிறந்த சரித்திர நவீனம். தமக்கே உரிய நடையில் தந்திருக்கிறார் கு. ப. ராஜகோபாலன்.*

*தமிழ்நாட்டின் பத்திரிகைகளின் சிறந்த மதிப்புரைகளைப் பெற்றது*

**விலை ரூ. 2-8-0**

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

# இரட்டை மனிதன்

[டாக்டர் ஜெகிலும் மிஸ்டர் ஹைடும்]

ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன்

தமிழாக்கம்

கு. ப. ராஜகோபாலன்

நவயுகப் பிரசுராலயம்

காரைக்குடி :: சென்னை

முதற் பதிப்பு : 1938
இரண்டாம் பதிப்பு : 1947

விலை ரூ. 2–4–0

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

உரிமை பதிவு

Printed at KABEER PRINTING WORKS, Madras. Ms. 524
Published by Navayuga Prachuralayam, Karaikudi R.68-A

# உள்ளே போகும் வழி

## 1. கதை சொல்லுகிறவர்

ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன், ஒரு மிகச் சிறந்த ஆங்கில எழுத்தாளர். வசன நடை மன்னர்களில் ஒருவர் என்று விமர்சகர்கள் அவரை ஏகமனதாகப் போற்றுகிறார்கள். அவருடைய வாக்கு புடம்போட்ட சொக்கத் தங்கம் என்று செஸ்டர்ட்டன் ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்.

ஸ்டீவன்ஸனுடைய வசன நடை அவ்வளவு வேலைப்பாடு கொண்டது. சிற்பியைப்போல அவர் வாக்கியங்களைச் செதுக்கி வைத்து, சலாகை மெருகிட்டு வேலை செய்து வெற்றி பெற்றிருக்கிறார். அவருடைய எழுத்துக்களில் சரியான வார்த்தை, சரியான இடத்தில், உம்மிசத்தில் கல்போலப் பொருந்தி அமைந்திருக்கும். வார்த்தையின் மூர்ச்சனை ஸ்தானத்தை அறிந்து, அதை முழு அர்த்த புஷ்டியுடன் இடமறிந்து பிரயோகம் செய்வதில் அவர் நிகரற்ற தேர்ச்சி பெற்றவர். அவர் பதித்திருக்கும் ஒரு வார்த்தையை எடுத்து விட்டு மற்றொரு வார்த்தையை அவ்விடத்தில் வைக்க முடியாது. கம்மல் கட்டிடத்தில் வைரம் அமைந்தது போல இருக்கும் சொற்களெல்லாம். ஆங்கில இலக்கிய ஸாம்ராட்டுகளில் கடைசியாகத் தோன்றியவர் என்று அவரைப் புகழ்கிறார்கள். அதாவது அவருக்குப் பின் வசன நடையை—பாஷையையே—எவரும் அதற்கு மேற்பட்ட சிறப்புடன் அலங்கரிக்க முடியாது என்று அர்த்தம். ஆகையால் அவருடைய நாவல்களும், சிறு கதைகளும், கட்டுரைகளும் அதிக நீளமில்லாமல் வாக்கியச் செட்டு கொண்டிருக்கின்றன. 'வதவத' என்று எழுதிக் குவிக்கும் வகுப்பைச் சேர்ந்த

எழுத்தாளர் அல்லர் ஸ்டீவன்ஸன். இதனால் அவர் வெறும் கட்டிட வேலைக்காரர், திறமை யுடையவர், மேதையல்லர் என்று அர்த்தமன்று. ஸ்டீவன்ஸன் முதலில் மேதை— பிறகுதான் திறமை படைத்தவர். நடை வன்மையும் கருத்து உருக்கமும் அவருடைய மேதையின் இரு சிறகுகள்.

அவருடைய எழுத்துக்கள் எல்லாவற்றிலுமே அடிப் படை ஆதாரமாக, நின்று விளங்குவது, முக்கியமாக, மனோதத்துவ ஆராய்ச்சி என்று சொல்லலாம். மனிதனின் மனோ நிகழ்ச்சிகளிலுள்ள விபரீதப் போக்குகளை நடை யுடை பாவனைகளில் பார்த்துப் பார்த்து அதிசயம் கொள்ளுகிறார். அவைகளின் நுட்பமான நூல் பிரிவு களைப் பிரித்து அலசி ஆராய்ந்து பார்க்கிறார்; பார்ப்ப துடன், பார்த்ததைப் பார்த்தவாறே கொஞ்சங்கூடப் பொருள் குன்றாமல் இலக்கிய மெருகுடன் பிறருக்குச் சொல்லுகிறார். இந்தச் சொல்லின் வேகம்தான், அவ ருடைய நூல்களில், முதலிலிருந்து முடிவு வரை, படிப்ப வனுக்கு, ஒரு இடை விடாத திகைப்பாகவும், தித்திப்பாக வும், இருக்கிறது.

## 2. நோயுற்ற வாழ்வு

மனிதனின் மனோதத்துவத்திலும்கூட வாழ்க்கையின் பிரதம அம்சமாக இருக்கும் துவந்துவ பாவமே அவ ருடைய மனதிற்குகந்த விஷயம். இயற்கையே, ஸத்து அஸத்து என்று நமது வேதாந்தம் வகுக்கும் இரண்டு பிரிவுகளின் ஒட்டு. நல்லது கெட்டது என்பன இரவு பகல் போலவும் சுக துக்கம் போலவும், ஆண் பெண் போலவுமே உயிரின் இரண்டு இன்றியமையாத பாதிகள். ஸ்டீவன்ஸனின் நூல்கள் எல்லாமே இதன் விளக்கம் என்று சொல்லி விடலாம்.

அவருடைய வாழ்க்கையே ஒருவிதமான விபரீதத் துவந்துவம். அவர் வாழ்நாள் பூராவும் நோயாளி; ஆனால் நிகரற்ற மனோதைரியத்தின் மூலம் அந்த உடம்பை வைத்துக்கொண்டே, வாழ்க்கையின் லீலையைப் பரிபூர்ணமாகக் கண்டு களித்தார். உடம்பு அதிகமாகச் செயலற்றுப் போனதால், மனது அதன் வேலையையும் சேர்த்துச் செய்ததுபோல, தெளிவும் தேர்ச்சியும் பெற்று அவரைச் சதா ஆனந்த நிலையில் நிறுத்தி யிருந்தது.

அவர் 1850-ம் வருஷம் ஸ்காட்லாந்து தேசத்து எடின்பரோ நகரத்தில் பிறந்தார். அவருடைய முன்னோர்கள் கடற்கரைகளில் தீபஸ்தூபிகள் கட்டும் தொழிலைச் செய்தவர்கள். ஆனால், ஆதிமுதலே ஸ்டீவன்ஸன் சரீர சௌக்கியம் குன்றியிருந்ததாலும், அவருக்குக் கலையில் அதிகப் பற்றுதல் இருந்ததாலும், அவர் தமது பெரியோர்கள் தொழிலைப் பின்பற்றவில்லை. ஆரோக்கியத்திற்காக அவர் அடிக்கடி வெளி நாடுகளில் பிரயாணம் செய்தார். ஸ்விட்ஸர்லாந்து, போர்ன்மத், அமெரிக்கா முதலிய இடங்களில் வாசம் செய்தார். ஆரோக்கியத்திற்காகப் போன இடங்களில் அவர் ஆரோக்கியத்தை மட்டும் கவனித்துக் கொண்டிருக்கவில்லை. இடைவிடாமல் எழுதிக்கொண்டே இருந்தார். பாரிஸிலும் அமெரிக்காவிலும் சந்தித்துப் பழகிய ஒரு அமெரிக்க மாதை (கணவரிடம் விவாக ரத்து பெறும் சமயத்தில்) ஸ்டீவன்ஸன் அமெரிக்கா சென்று மணந்தார். அவருடைய மனைவி அவருக்கு இலக்கிய வேலையில் நிரம்ப உற்சாகம் அளித்தார். கடைசியாக, ஸமோவாத் தீவில் வைலிமா என்ற இடத்தில் நிரந்தரமாகக் குடியேறினார். அங்கே, அவருடைய சுவாசாசயத்திற்கு ஒருவிதக் கெடுதலுமின்றிக் காலம் கழிந்தது. அந்நாட்டு மக்கள் அவரை மிகவும் அன்புடன் நேசித்தார்கள். அவரை “கதை சொல்லுகிற

வர்" என்று பெயர் வைத்துப் போற்றினர்கள். திடீ ரென்று நாற்பத்தி நாலாவது வயதில் அவர் காலமானர்.

அவருடைய நூல்கள் அநேகமாக எல்லாம் அவர் உயிருடன் இருந்தபொழுதே வெளிவந்து விட்டன. 'புதையல் தீவு' (Treasure Island) என்ற அவருடைய நாவல் மிகவும் பிரக்கியாதி பெற்றது. அநேக உருக்க மான சிறு கதைகளும் எழுதியிருக்கிறர். அவருடைய நூல்களில் பின்வருவன முக்கியமானவை :—

**காவியங்கள் :—** குழந்தைகள் செய்யுட்சோலை, 'அண் டர்வுட்ஸ்' கதைகள்.

**நாவல்கள் :—** புதையல் தீவு, ஆட்டோ இளவரசன், (டாக்டர் ஜெகிலும் ஹைடும்) இரட்டை மனிதன், களவு போனது, மாஸ்டர் அப் பாலன்ட்ரீ, ரெக்கர், காட்ரி யோனு முதலியன.

**கட்டுரைகள்:—** உள்நாட்டுப் பிரயாணம், புது அரா பிய இரவுக் கதைகள், வைலிமா கடிதங்கள் முதலியன.

## 3. கதையின் பிறப்பு வளர்ப்பு

ஸ்டீவன்ஸன் எழுதிய 'டாக்டர் ஜெகிலும் மிஸ்டர் ஹைடும்' என்ற நூலை ஒரு நவீனம் (நாவல்) என்கிறர்கள்; ஆனல் நீளம் குறைவாக இருப்பதால் அதை ஒரு (நீண்ட) சிறுகதை (Long Tale) என்று கூறலாம். அநேக அம்சங் களில் அது அவருடைய நூல்களிலேயே மிகவும் விசேஷ மானது. அதில் மனிதனின் முயற்சிக்கு மீறிய ரசாயன சக்திகளால் ஏற்படும் விபரீதங்கள் கதைப்போக்கை நிர் ணயிக்கின்றன. துப்பறியும் கதை என்று சொல்லும்படி யாகவும் மர்மக்கதை என்று சொல்லும்படியாகவும் அதில் ஆவலைத் தூண்டும் விஷயங்களும் திடுக்கிடும் சம்பவங் களும் இருக்கின்றன. கதையே இம்மாதிரி மனேதத்துவ ஆராய்ச்சி நிறைந்த ஒரு இலக்கிய சிருஷ்டி என்பதுமட்டு

மல்ல; ஆழ்ந்த வேதாந்தப்பொருள்கொண்ட ஒரு தத்துவ நூல் இந்த இலக்கிய அலங்காரத்துடன் எழுதப்பட்டிருக்கிறதென்பதும்கூட.

ஸ்டீவன்ஸன் ஜீவிய காலம் பூராவும் ஒரு நோயாளியாக இருந்தாரென்றாலும், அவர் ஒரு சமயம் படுத்த படுக்கையாயிருந்த பொழுது, அதிகமாக மனத்தைச் சிரமப் படுத்தக் கூடாதென்று வைத்தியரின் கட்டுப்பாடு ஏற்பட்டிருந்த பொழுது—இந்தக் கதை உற்பத்தியாயிற்று. அது அவருடைய கனவில்தான் முதன் முதலாக உருப்பெற்றது. பிறகு மூன்றுநாள் இடைவிடாமல் உட்கார்ந்து அதை எழுதி முடித்தாராம். மற்றொரு விசேஷமென்னவெனில், அவர் எழுதிய முதல் பிரதி அவருக்குத் திருப்திகரமாக இல்லாமற் போய்விட்டதால், அப்படியே அதை நெருப்பில் போட்டுவிட்டு, மறுபடியும் மூன்றுநாள் முனைந்து, இப்பொழுது இருக்கும் கதையை எழுதி முடித்தாராம்!

இந்தக் கதை அவருடைய இலக்கியப் பாணியின் ஒரு உயர்ந்த உதாரணமாக இருக்கிறது. நடையழகும் கருத்தழகும் ஒருங்கே சேர்ந்து அதற்கு வலுவும் உயிரும் வாரிக்கொட்டி யிருக்கின்றன. இந்தக் கதையில் இருப்பது போன்ற ஒருவித 'ஜீவு' அவருடைய வேறெந்த நூலிலும் கிடையாதென்று கூடச் சொல்லலாம். ஆங்கில இலக்கியத்திலேயே இதை ஒரு இணையற்ற நூல் என்கிறார்கள்.

கதை மிகவும் சுருக்கமானதுதான். கதையின் போக்குக்கு மனோதத்துவ ஆராய்ச்சிதான் வழிகாட்டியாகவும் தூண்டுதலாகவும் இருக்கிறது. கப்பலின் போக்குக்குப் பாய்மரம் எப்படியோ, அப்படி இதற்கு மனோதத்துவம் என்று சொல்லலாம். காதல் கிடையாது. நாவல் என்றது இம்மாதிரி இருப்பதே ஒரு விசேஷமல்லவா? பொறுக்காக நாலைந்து பாத்திரங்கள்தான். கதை பூராவும் லண்

டன் நகரிலேயே சில மாத காலத்துக்குள் நடை பெறுகிறது.

## 4. கதை என்ன ?

டாக்டர் ஜெகில் என்பவர் லண்டனில் ஒரு பிரபல வைத்தியர். நல்ல சொத்துடையவர். அழகான வாட்ட சாட்டமான மனிதர். வைத்தியத்தைக் காட்டிலும் அவருக்கு சாஸ்திர (விஞ்ஞான) ஆராய்ச்சியில்தான் பைத்தியம் அதிகம். அத்துடன், உலகத்தில் பெரிய மனிதன், அப்பழுக் கற்றவன் என்று பெயர் வாங்க வேண்டுமென்ற வெறியும் பிடித்தவர். ஆகையால் முதலிலிருந்தே அப்பேர்ப்பட்ட உயர்தர வாழ்விற்குப் பொருந்தாத சபலங்களை எல்லாம் கெடுதல் என்று கருதி மறைத்து அநுபவிக்க ஆரம்பித்தார். மனித இயற்கை வலிமை மிக்கதாகையால், அவைகளை அநுபவிக்காமல் விட முடியவில்லை அவரால். தமாஷ், குஷால்தனம் எல்லாம் உயர் வாழ்விற்கு விரோதம் என்று கருதினர்; ஆகையால் அவர் வாழ்க்கையில் முரண்கள் ஏற்பட்டன. உலகத்தின் முன் உத்தமராக அவர் நடத்திய வாழ்வு ஒன்று; மறைவாக, அவரே இழிவானதெனக் கருதிய இன்பங்களை அநுபவித்தவாழ்வு மற்ருென்று. ஒன்று நல்லது; மற்ருென்று கெட்டது.

இப்படி அவர் வாழ்க்கையில் ஒரு துவந்துவ (இரட்டை) நிலைமை, நாளடைவில் ஏற்பட்டது. நன்னெறி தவருமல் நடந்து பெரியவனுக வேண்டுமென்ற இச்சைதான் அதற்குக் காரணம்; தீமை, கெட்டது என்ற எண்ணம் அல்ல. அதனுலேயே, எல்லோரிடமும் காணப்படும் நன்மை தீமை அம்சங்கள் அவரிடம் அதிகமாக வேறுபட்டுத் தென்பட்டன. மனிதத்தன்மையின் இந்த இரண்டு அம்சங்களையும்—அவனுக்குள்ளே இருக்கும்

நற்குணம் தீயகுணம் இவை யிரண்டையும்—தனித் தனியே பிரிவினையாகாத குடும்பமாக (இப்பொழுது அவிபக்த குடும்பமாக தேவாசுரர்கள் போன்று தாயாதி களாக மனிதனுக்குள் வசிக்கின்றன) பிரித்துவிட்டால் என்ன என்ற எண்ணம் அவருக்குத் தம் சொந்த வாழ்க் கையின் அநுபூவங்களிலிருந்து தோன்றலாயிற்று. இவ் விரண்டின் இடையற்ற போரைப்பற்றி, அவர் தம் நன்மை தீமை உணர்ச்சி மூலம் யோசித்துக்கொண்டிருக் கும் பொழுது, அவருடைய விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலமும் அதற்குத் தூண்டுதல் அதிகமாயிற்று. மனிதன் உண்மையில் ஒருவனல்லன், இருவர் என்ற தத்துவத்தை விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் நிரூபிக்கலாம் என்று கண்டார். சில மருந்துகள் மனித உருவத்தையே மாற்றும் சக்திகொண் டிருந்தன என்று அவருடைய ரஸாயன ஆராய்ச்சிகளிலிருந்து புலப்பட்டது. அம்மாறுதலால், சாதாரணமாக மருந்து சாப்பிடும்பொழுது, மனிதனுக்குள் ஓங்கி இருக்கும் அம்சம் மறைந்து, அடங்கிக் கிடக்கும் அம்சம் தலையெடுக்கும் என்று ஊகித்தார். ஆகையால் நல்லகுணம் ஓங்கியிருக்கும்பொழுது மருந்து உண்டால், கெட்டகுணம் புது உருவத்தில் தலை விரித்தாடும். அப் பொழுது மருந்தை மறுபடியும் உட்கொண்டால் கெட்ட குணம் குலைந்துபோய் நற்குணம் மேலோங்கும்; முதல் உருவமும் திரும்பும். அவருடைய ஆராய்ச்சிகளின் மூலம் இது தெளிவாயிற்று.

அதைத் தாமே பரீட்சை பார்க்கவேண்டுமென்று தீர்மானித்தார். ஆனல் அந்தத் தீர்மானம் செய்தபொழுது சுயநலமும் அதில் சேர்ந்துவிட்டீது. தாம் தீச்செயல்கள் (தம் சபலங்களைத் திருப்தி செய்வதன்மூலம்) செய்வதற்கு உருமாற்றம் சௌகரியமாக இருக்குமென்ற கெட்ட எண்ணம் ஏற்பட்டது. டாக்டர் ஜெகில் என்று யாரும்

கண்டுகொள்ள முடியாத மாறுவேஷத்தில், தம் கியாதிக்கும் பெயருக்கும் ஒரு பங்கமுமின்றி, தம் இஷ்டப்படி இன்பம் அநுபவித்துக்கொண்டு தாராளமாக இருக்கலாமென்று தோன்றிற்று.

மருந்தைச் சாப்பிட்டார். சொல்ல முடியாத வேதனைகள் அநுபவித்தபிறகு உருமாறிற்று. முதன்முதலில் அவர் மனப்போக்கே மாறுவதை அறிந்தார். அடக்கியே வைக்கப்பட்டிருந்த தீமை அந்தப் புது உருவத்தில் பூரண ஆக்ரோஷத்துடன் வெளி வந்தது. அப்புது உருவந்தான் ஹைடாக மாறின ஜெகில்—அதாவது ஜெகில் ஹைடாக மாறினபோது உண்டான ஆசாமி. தீமையின் பெருமிதமே அவன் உருவைக் குட்டையாக்கி, ஒரு விபரீதமான சித்திரக் குள்ளன்போலச் செய்துவிட்டது என்பது ஜெகிலின் அபிப்பிராயம். மருந்து சாப்பிட்ட நேரத்தில் அவருக்கு உயர் எண்ணங்கள் தோன்றியிருந்தால், உருமாற்றத்திலிருந்து ஒரு தேவதாம்சம் பொருந்தினவனுக வெளியேறி இருக்கலாம் என்று பின் பச்சாத்தாபப்பட்டார்! ஆனல் அது ஒரு நிமிஷந்தான். எப்பொழுது பார்த்தாலும் ஆராய்ச்சியும் வேலையும் செய்ததிலிருந்து திரும்பி, கொஞ்சம் உல்லாசமாக இருந்தால் நல்லதல்லவா என்ற எண்ணம் வலுவாயிருந்தது. ஆகையால் அடிக்கடி ஹைட் உருவத்தைப் பெற்று காலங்கழிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்தார். தனியாக ஹைட் இருப்பதற்காக ஒரு வீடு வாடகைக்கு வாங்கினர். ஹைட் என்பவனுக்குத் தம் வீட்டில் பூரண அதிகாரம் உண்டு என்று தம் வேலையாட்களிடம் சொல்லி வைத்தார். அவர்களுக்குப் பழக்க மாவதற்காக அடிக்கடி அந்த உருவத்துடன் வீட்டிற்கு வந்து போய்க்கொண்டிருந்தார். ஹைடைத் தம் வாரிசாக நியமித்து ஒரு உயிலையும் தயாரித்தார். டாக்டர் ஜெகிலுக்கு எதிர்பாராத ஆபத்து

ஏற்பட்டு விட்டாலும் ஹைட், சொத்து நஷ்ட மேற்படாமல் தப்பலாமல்லவா?

இந்த உயில் தயாரிப்பதில் டாக்டர் ஜெகில் தம் நண்பன் அட்டர்ஸன் என்னும் வக்கீலை யோசனை கேட்டார். அவருக்கு அது கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. டாக்டர் ஜெகில் உண்மையை அவரிடம் கூற முடியாததால், அட்டர்ஸன் அது மிகவும் பைத்தியக்காரத் தனமான உயில் என்று கருதினார்.

இப்படியாக டாக்டர் ஜெகில் அடிக்கடி மருந்தை உபயோகித்து ஹைட் உருவத்தைப் பெற்று, இழிவான இன்பங்களை அநுபவிக்க ஆரம்பித்தார். ஹைடின் துர்க் குணம் மேலிட்டு அவ்வின்பங்கள் இன்னும் விபரீத மாகவும், கோரமாகவும் மாறின. மறுபடியும் (மருந்தின் மூலம்) ஜெகிலாக மாறினதும், ஹைட் செய்த அநியாயங் களையும் அட்டூழியங்களையும் நினைத்துப் பார்த்து அவரே திகைத்துப் போவார். (இரு உருவங்களுக்கும் ஞாபக சக்தி இடையறுமல் ஒன்ருக இருந்தது.) ஆனல் அது ஜெகில் அல்ல, ஹைட்தானே என்று ஒரு விபரீதமான ஆறுதல் கொள்ளுவார்; ஜெகில் உருவத்தில், அதற்குப் பதிலாக நல்ல காரியங்கள் செய்துவிட்டால், சரியாய்ப் போய் விட்டது என்று மனச்சாட்சியை ஏமாற்றிக் கொள் ளுவார்.

இம்மாதிரி மருந்தை அடிக்கடி உபயோகித்துக் கொண்டேயிருந்ததில், மருந்தின் அளவு சில சமயங்களில் உருமாற்றத்திற்கு வேண்டிய வேகம் இல்லாததாய்ப் போயிற்று. இரண்டு மடங்கு மருந்து சாப்பிட வேண்டிய தாயிற்று. அது மட்டுமன்று. ஒரு நாள் இரவு வெளியே போய்விட்டு வெகு நேரம் கழித்து ஜெகில் வீட்டிற்கு வந்து படுத்துக் கொண்டார். மறுநாட் காலையில் அவர் எழுந்திருந்தபொழுது ஹைடாக மாறியிருந்தார்! அவ

ராகவே வரவழைத்துக் கொண்ட துன்பம் (ஹைட்) அப்பொழுது அவரது சக்திக்கு மீறிப் போவதாகக் கண்டார். மருந்தின் உதவியின்றியே ஹைட் உருக்கொள்ள ஆரம்பித்ததிலிருந்து ஒரு வேளை ஹைடின் உருவமே நிரந்தரமாகி ஜெகில் உருவற்றுப்போய் விடுவாரோ என்ற திகில் அவரைக் பற்றிக் கொண்டது. கொஞ்சம் கொஞ்சமாக, நல்ல அம்சம் தோல்வியடைந்து மங்கிக்கொண்டு வந்ததென்றும், கெட்ட அம்சம் தலையெடுத்து, அதிகமாகப் பிரவர்த்திக்க ஆரம்பித்த தென்றும் கண்டார்.

அப்பொழுது தம் நிலைமையை ஆராய்ச்சிசெய்து பார்த்தார். இரண்டு சுபாவங்களுக்கும் (ஜெகில், ஹைட்) ஞாபக சக்தி பொதுவாக இருந்தது. மற்றெல்லாப் புலன்களும் ஏறக்குறைய அவைகளிடையே பிரிந்து காணப்பட்டன. ஜெகில் ஹைடின் இன்பங்களில் ஈடுபட்டு அவனிடம் ஒரு ஆதரவு காட்டினார். ஹைடோ ஜெகிலைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஜெகில் ஹைடை ஒரு தகப்பனின் ஆதரவுடன் கவனித்தார்; ஹைட் ஒரு பிள்ளையின் உதாசீனத்துடன் ஜெகிலைப்பற்றி எண்ணினான். துரத்திவருபவர்களிடமிருந்து பதுங்க ஒரு கொள்ளைக்காரன் எப்படி மலைக் குகையை உபயோகித்துக் கொள்ளுவானோ அம்மாதிரியே ஹைட் ஜெகிலை உபயோகித்துக் கொண்டான். ஆனால், ஜெகில் ஹைடை விடமுடியவில்லை. ஜெகில் அம்சம்தான் உயர்ந்தது என்று அறிந்த போதிலும் ஹைடைப் புறக்கணித்து ஜெகிலாகவே இருக்க அவருக்கு மனோதிடம் போதவில்லை.

இது மனித சுபாவம்தானே! நாம் நல்லது இன்னது, கெட்டது இன்னது என்று அறிகிறோம்; நல்லதையே போற்றுகிறோம். ஆனால், அதே தீர்மானத்தில் நிலையாக நின்று கெட்டதைச் செய்யாமலிருக்கும் மனோதிடம் இருக்கிறதா?

ஆகையால், ஹைடை இனிமேல் வெளியேற்றுவதே இல்லை என்று தீர்மானம் செய்திருந்த டாக்டர், மறுபடியும் கொஞ்சகாலம் கழித்து, மனச்சாட்சி மங்கிய ஒரு கணத்தில், மறுபடியும் மருந்தைச் சாப்பிட்டார். அன்றிரவு ஹைட் வெளியில் சென்றபொழுது, ஸர் டான்வர்ஸ் கார்யூ என்ற ஒருகிழவர் தன்னைத் தற்செயலாக வழியில் சந்தித்துச் சொன்ன குற்றமற்ற ஏதோ சில வார்த்தைகளில் கோபாவேசங்கொண்டு, அவரைக் கைப்பிரம்பால் அடித்துக்கொன்றான். கொன்ற நிமிஷம் ஆபத்தை உணர்ந்து ஸோஹோவில் வாடகைக்கு அமர்த்திய விடுதிக்குச் சென்று காகிதங்களையெல்லாம் எரித்துவிட்டு வெளியேறினான். ஜெகில் உருவம் பெற்றதும் அவர் கண்ணும் கண்ணீருமாகக் கடவுளை வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். ஹைட் இனிமேல் கிடையாது என்று உணர்ச்சி ஏற்பட்டதும் (அவன் தோன்றினால்தான் தூக்குமேடை தயாராயிருக்குமே!) ஒருவித நிம்மதி அடைந்தார். உடனே நற்கருமங்களிலும் தான தருமங்களிலும் ஈடுபட்டுப் பரோபகாரத்தொழில் செய்ய ஆரம்பித்தார்.

ஒருநாள் பார்க்கில் உட்கார்ந்துகொண்டிருக்கும் பொழுது உள்ளே பதுங்கிக் கிடந்த காட்டுமிருகமான துர்க்குணம் 'நினைவின் மாமிசத் துண்டங்களை நக்கி ருசி பார்த்து மகிழ்ந்தது.' திடீரென்று, மருந்து சாப்பிடும் பொழுது ஏற்படும் வேதனைகளும் குமட்டலும் ஏற்பட்டன. ஜெகில் ஹைடாக மாறிவிட்டார்! ஒரு நிமிஷத்திற்குமுன் கண்ணியம் வாய்ந்த ஜெகில்; மறுநிமிஷம் டான்வர்ஸ் கொலை சம்பந்தமாகப் போலீஸார் தேடித் திரியும் ஹைட்!

ஹைடின் புலன்கள் அப்பொழுது வெகு தீக்ஷண்யமாக வேலை செய்தன. ஹைட் உருவத்திற்கு இருந்த

ஆபத்தை உணர்ந்துவிட்டான். ஆனால், மருந்து வீட்டில் இருந்தது. அதை எப்படி அடைவது? ஹைட் உருவத்துடன் வீட்டிற்குப் போகமுடியாது. வழியில் தப்பினாலும் தன் சொந்த வேலைக்காரர்களே அவனைப் பிடித்துப் போலீஸாரிடம் கொடுத்து விடுவார்கள். அதற்காக ஒரு யுக்தி செய்தான்.

டாக்டர் லான்யன், டாக்டர் ஜெகிலின் பழைய நண்பர்; நல்ல வரும்படியுள்ள பிரபல வைத்தியர்; ஜெகிலின் விஞ்ஞான ஆராய்ச்சிகளில் அவருக்கு நம்பிக்கை கிடையாது; ஆனாலும் ஜெகிலிடத்தில் ரொம்ப அன்பு கொண்டவர். ஹைட் அவருக்கு ஒரு கடிதம் எழுதினான். டாக்டர் லான்யன் தன் (ஜெகிலின்) வீட்டிற்குச் சென்று மாடியில், குறித்த அலமாரியிலிருக்கும் மருந்து டிராயரை எடுத்துக்கொண்டு திரும்பிவிடவேண்டியது. நள்ளிரவில் லான்யன் வீட்டில் வந்து கதவைத் தட்டும் ஒரு மனிதனை லான்யனே உள்ளே வரச்சொல்லி அந்த டிராயரை அவனிடம் ஒப்புவிக்கவேண்டும். இந்த விநோதமான கடிதம் தன் நண்பன் ஜெகில் கையெழுத்தில் (ஹைடுக்கு அந்தக் கையெழுத்தில் எழுதும் சக்தி இருந்தது) இருந்ததால் லான்யன் அதன்படியே செய்து முடித்தார். சொன்னபடியே இரவில் ஹைட் (அந்த ஆள் அவன்தான்) லான்யன் வீட்டிற்குச்சென்று அவர் முன்னிலையிலேயே மருந்தைச் சாப்பிட்டு, ஜெகிலாக மாறினான். அந்த காட்சியைக் கண்ட லான்யன் (அவர் ஒருவர் தான் அதைக் கண்டது) திக்பிரமை கொண்டார்; அதன் காரணமாகவே திகில்கொண்டு, உணவு உறக்கமற்று இறந்தும் போனார்.

அப்பொழுது முதல் ஜெகிலுக்கு ஹைட் உருவம் அடிக்கடி தானாகவே வர ஆரம்பித்தது. வீட்டை விட்டு வெளியில் போகாமல் தம் வேலைக்காரர்கள் கண்ணில் கூடப் படாமல் காலங்கழிக்க வேண்டியதாயிற்று.

அறைக்குள் இருந்தபடியே வேலைக்காரர்களுக்கு எழுத்து மூலம், உத்திரவுகள் கொடுத்தார். சாப்பாடுகூட அதற்குள்ளேயேதான். நண்பர் அட்டர்ஸன் வந்து பார்க்க வேண்டுமென்று கேட்டபொழுது பார்க்க முடியாதென்று சொல்லி விட்டார்.

இப்படிப் பல நாளாக எஜமானன் வெளியிலே வராமல் மறைந்துகொண்டு இருப்பது வேலைக்காரர்களுக்குச் சந்தேகமாக இருந்தது. பூல் என்னும் பட்லர் ஒருநாள் ஜெகிலின் அந்தரங்க அறையருகே சென்று உற்றுக் கேட்ட பொழுது காலடிச் சத்தங்கள் வேறு தினுசாக இருந்தன. ஒவ்வொரு சமயத்தில் கேள்விக்குப் பதில் சொன்னபொழுது, குரலும் வேறு தினுசாக இருந்தது. ஆகையால் ஜெகில் கொலை செய்யப்பட்டு விட்டாரென்றும் வேறு யாரோ அங்கிருப்பதாகவும் அவன் தீர்மானித்தான். ஒருநாள் தற்செயலாக ஆளையும் பார்த்து விட்டான். அது ஹைட் என்று அவனுக்குத் தெரிந்தது.

இதற்குள் ஜெகில் உருமாற்றத்திற்காகத் தயாரித்திருந்த மருந்து செலவழிந்துவிட்டது. புதிதாக வாங்கிக்கொண்டு வரச்சொன்ன மருந்து முன்போல வேலைசெய்யவில்லை. முன் மருந்தில் இருந்த ஏதோ ஒரு விசேஷ குணம் பின்வந்த மருந்தில் இல்லை. இதற்காக லண்டன் பூராவும் பூலை அனுப்பித் தேடிப்பார்த்தார். மருந்து கிடைக்கவில்லை. ஆகையால் கடைசியில் மருந்து தீர்ந்து போனவுடன், ஜெகில் ஹைடாக மாறி நிரந்தரமாக (உயிர் இருக்கும்வரை) அவ்வுருவுடன்தான் இருக்க வேண்டும் என்றது அவருக்கு நிச்சயமாயிற்று. உடனே தம் வரலாறு பூராவையும் எழுதி வைத்துவிட்டு ஹைட் உருவம் கொள்ளத் தயாரானர்; கடைசியாக மிஞ்சியிருந்த மருந்தும் காலியாகிவிட்டது.

ஹைட் உருவம் பெற்று கலங்கினர் ஜெகில்; ஒரு நாள் பூலுக்கு உள்ளே யாரோ அழுவதுபோல் சத்தம் கேட்டது. அவனால் நிலைமையைத் தாங்கமுடியவில்லை. வக்கீல் அட்டர்ஸனிடம் சென்று விவரங்களைச் சொன்னான். அவரும் பூலுமாக ஜெகிலின் அறையண்டை வந்து பலாத்காரமாக உள்ளே பிரவேசிப்பது என்று தீர்மானித்தார்கள். அதற்கு முன்னதாகவே அட்டர்ஸன் வெளியே நின்றுகொண்டு தம் நண்பனைப் பெயர் சொல்லி உரக்கக் கூப்பிட்டு, "உடனே கதவைத் திற, இல்லாவிட்டால் கதவை உடைப்பேன்!" என்றார். "அட்டர்ஸன் அப்படிச் செய்யாதே! தயவுசெய்; என்னைக் காப்பாற்று!" என்று ஹைடின் குரல் கேட்டது. அது ஜெகிலின் குரல் அல்ல எனக் கண்டதும் அவர்கள் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே சென்றார்கள். ஹைட் விஷம் குடித்துத் தற்கொலை செய்துகொண்டு கீழே கிடந்தான்.

ஜெகில் எழுதிவைத்திருந்த ஜீவிய வரலாற்றையும் டாக்டர் லான்யன் தாம் கண்ட காட்சியைப்பற்றி எழுதிவைத்திருந்த வரலாற்றையும் படித்த பிறகுதான் வக்கீல் அட்டர்ஸனுக்கு ஜெகிலினுடைய உயிலின் அர்த்தம் புரிந்தது. விஷயம் பூராவும் விளங்கிற்று.

## 5. மனிதனுக்குள் அமர-அரக்கர்

இதுதான் கதையின் சாராம்சம்.—இதை மாங்கொட்டைபோல வைத்துக்கொண்டு ஸ்டீவன்ஸன் மந்திரவாதஞ் செய்து மாஞ்செடியைச் சிருஷ்டித்துக் காட்டுகிறார்.

அட்டர்ஸனும் என்பீல்டும் உலாவப் போகும்போது ஹைடின் துர்க்குணத்தைப்பற்றி என்பீல்ட் சொன்ன

வரலாற்றிலிருந்து கதை ஆரம்பமாகிறது; பிறகு சிறுகச் சிறுக கதை விஸ்தாரமாகிறது. இடையிடையே மின்னல் பாய்வது போன்ற வர்ணனைத் துணுக்குகள் நடையைப் பளிச்சென்று விளக்கிக் காட்டுகின்றன. பாத்திரங்களின் சம்பாஷணை இயற்கையாகவும் சுருக்கமாகவும் அமைந் திருக்கிறது. பாத்திரங்களே சிலர்' தான்.

வக்கீல் அட்டர்ஸன், சரஸகுணமே அற்றவராஞலும் எப்படியோ நாம் அவரை ரொம்ப நேசிக்கிறோம். நன் னெறிக்கும் நேர்மைக்கும் பாடுபடுகிறவர், பரோபகாரி. டாக்டர் லான்யன் நல்ல சரஸி; ஆனல், தொட்டால் சுருங்கிபோல ஜெகில் காண்பித்த உருமாற்றத்தைக் கண்டு மனம் கலங்கி, சேதனை குன்றிச் சாகிருர்; அவரது உணர்ச்சியின் விபரீதம் கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கிறது. அவர் ஏன் அதைப்பற்றி அவ்வளவு கவலைப் பட்டுச் சாகவேண்டு மென்பது நமக்குப் புலப்படவில்லை. பூல் நம் கண்முன் நிற்கிருன். விஞ்ஞானப் பித்தன் ஜெகில் அரைகுறை ஆராய்ச்சிக்குப் பலியாகிருர். கடைசி யாக அசுரப்பிரகிருதியான ஹைட்! அவனை நாம் இதற்கு முன் கண்டதில்லை. இனியும் காணமாட்டோம். அவன் ஒரு அமானுஷப் பிறவி. இந்தச் சிருஷ்டிகள், எல்லோ ரும், உயிர் நிறைந்து, தனித்தனி குணவிசேஷங்கள் கொண்டிருக்கிருர்கள்.

டாக்டர் ஜெகிலின் மனேதத்துவத்தை ஆராய்ச்சி மேஜையின் 'மேல்வைத்துப் பரிசோதனை செய்கிருர் விஞ்ஞானப்பித்துக் கொண்ட ஸ்டீவன்ஸன். இலக்கியம் தான் மேஜை. ஆராய்ச்சிக் கருவிகள் அவருடைய தெள்ளிய கருத்தும் இணையற்ற நடையும்; அட்டர்ஸன், பூல், என்பீல்ட், லான்யன் முதலியவர்கள் பாத்திரங்கள். முடிவில் அவர் கண்டுபிடிக்கும் உண்மை இது:

மனிதன் உண்மையில் ஒருவனல்லன், இருவர்! நன்மை தீமை இரண்டும் மனித சுபாவத்தின் இரண்டு அம்சங்களானபோதிலும், தீமை எக்காலத்திலும் தனியாக நிற்க முடியாது. நன்மை பெரியது; தீமை சிறியது. தீமையைப் பெரிதாக்கினால் ஆத்ம நாசம்தான். மனிதன் இருவர் என்பது மட்டுமல்ல; அவ்விருவரும் முடிவில் ஒருவன் என்பதுதான் திட்டமான உண்மை. ஹைட் உயிர் துறந்தபொழுது ஜெகிலும் சேர்ந்து மறைகிறார். ஹைடின் செய்வினை அவரை விடவில்லை. ஒன்றின் செயல் மற்றொன்றைப் பாதிக்காமல் விடாது; ஆகையால் இரண்டும் தனி என்ற எண்ணமே பிசகு; இரண்டும் தனியாக்கப்படுவதும் இயலாத காரியம். அத்தகைய ஆபரேஷனால் இரண்டு பாகங்களும் நிச்சயம் உயிரிழக்கும். மனிதன் ஒரு கர்மத்தைச் செய்தானானால் அதன் பயனை அவன் அநுபவிக்காமல் தவிர்க்க இயலாது. ஹைடின் தீச்செயல்களின் பலனை ஜெகில் அநுபவிக்காமல் தப்பமுடியாது. அதிலிருந்து தப்ப ஜெகில் உருமாற்றத்தை ஒரு போர்வையாக ஏற்படுத்திக்கொண்டார். வாழ்க்கையில் தவிர்க்க முடியாமல் மனிதன் தலையில் சுமத்தப் பட்டிருக்கும் நன்மை தீமைகளின் பலன் என்ற சுமை இரட்டிப்பு வேகத்துடன் ஜெகிலை அமுக்கிக் கொன்றது.

ஆனால் ஜெகிலின் வீழ்ச்சி மகத்தானது. அது மனித சுபாவத்தின் வீழ்ச்சியாகும். அப்பேர்ப்பட்ட வீழ்ச்சியை ராவணன், பாஸ்ட், மாக்பத், ஆண்டோனி முதலியவர்கள் அடைந்தார்கள். மனிதனது உள்ளத்தில் அவன் இயற்கையின் இரண்டு பாகஸ்தர்களான நல்லது கெட்டது என்றவைகளின் போர், தேவாசுரர்களின் போர், போல இடைவிடாமல் நடக்கிறது. அசுரனின் தற்காலிக வெற்றிகள் தேவனின் உயரிய அம்சத்தைத்

தூண்ட ஒரு காரணமாக இருக்க வேண்டும். தேவதையின் சிறப்பு விளங்க வேண்டுமானால் அசுரன் மிகவும் அவசியம். அவன் உதவி சில சமயங்களில் (அம்ருதம் வந்தபொழுது போல) நல்லதாகவே இருக்கிறது. ஆனால் அவனுக்கு ஆதிக்கம் இருக்கக்கூடாது; அவனுக்கு ஆதிக்கம் ஏற்பட்டால், தேவாசுரர்கள் இருவரும் நசித்துப் போய் விடுவார்கள். அசுரன் எந்நாளும் இளைய மகன் போல் பட்டத்திற்குரியவனல்லன்; கீழே தான் இருக்க வேண்டும். மனிதனின் ஆத்ம சிம்மாசனத்தில் அவன் உட்கார முடியாது.

ஜெகில் என்ற தேவதை ஹைட் என்ற அசுரனுக்குப் பணிந்து கொடுத்ததால், ஜெகில்-ஹைட் (தேவாசுரர்கள்) இருவரும் மாண்டார்கள். இருவரும் ஒரு தகப்பனின் மக்கள்—பங்காளிகள். அவர்களுக்குள் பாகப்பிரிவினை செய்ய முயலுவது குடும்ப நாசமாகும். இயற்கை விசித்திரமாக உயிர்வாழும் சையாம் இரட்டைச் சகோதரிகள் போல அவர்கள் இணைபிரியக் கூடாதவர்கள். ஆனால் சதா போரிடுபவர்கள்; பிரிவும் கொள்ளமாட்டார்கள்; போரையும் நிறுத்த மாட்டார்கள்; ஆனால் இயற்கையின் விதிப்படி தேவதையே முன்னேறுவான்; அவனுக்குத் தான் விஷ்ணு மோகினியாக வந்து அமிர்தம் அளிப்பார்; அவனைத்தான் அமரனுக்குவார்.

அசுரன் தான் செய்த உதவிக்கு எந்நாளும் பதில உதவி பெறமாட்டான்; ஏனெனில் அவன் எண்ணம் கெட்டது. ஏமாற்றம் அடைவான். ஆலகாலத்தின் முன் நின்று சமுத்திரத்தைக் கடைவதில் மும்முரித்தாலும் அமிர்தம் அவனுக்கில்லை. தீமைக்கு அழியாத ஆனந்தம் கிடையாது.

## 6. என் வேலை

இத்தகைய ஆழ்ந்த உயிர்க்கருத்துக் கொண்ட இந்த நூலின் வேகம் பூராவையும் மொழிபெயர்ப்பில் கொண்டு வருவது மிகவும் கஷ்டம். அதிலும் ஸ்டீவன்ஸன் நடையை அதே சாயலுடன் தமிழில் கொடுப்பது எளிதன்று. அவருடைய ஆணித்தரமான வார்த்தைகளுக்கு நிகரான வார்த்தைகளை மற்றொரு பாஷையில் பொறுக்கிப் பிணைப்பதென்பது மிகவும் சிரமமான காரியம். ஆனாலும், கூடிய வரையில், ஆசிரியரின் கருத்து மங்காமலும், நடை சீர்குலையாமலும் மொழிபெயர்ப்பைச் செய்து முடிக்க முயற்சி செய்திருக்கிறேன். ஆங்கில மூலத்தை, வேண்டுமென்றே, அநேகமாக, அப்படியே பின்பற்றியிருக்கிறேன். என்னுடைய குற்றங் குறைகளை நானே நன்றாக அறிகிறேன். ஆனால் இவ்வேலையை யாராவது எப்பொழுதாவது செய்யவேண்டியதுதானே? இப்பேர்ப்பட்ட நூல்கள் தமிழில் இருக்க வேண்டியது அவசியமல்லவா?

மொழிபெயர்ப்பே ஒரு முறையில் கடினமான இலக்கிய வேலை; அது முதல் நூல் எழுதுவதைக் காட்டிலும் அதிகமான தொல்லை கொடுப்பது. சீமை ஓட்டைப் பிரித்துவிட்டு கீற்று வைக்கும் வேலைபோன்றது. ஒரு கட்டுக்கோப்பைக் கலைத்து மற்றொரு கட்டுக்கோப்பை ஏற்றுவதில் எப்பொழுதுமே பூரண வெற்றி கொள்ளமுடியாது. அடிக்குஅடி நிர்ப்பந்தம். எல்லைக்கோட்டைத் தாண்டினால் மொழி பெயர்ப்பில்லை, வியாக்கியானம்! தாண்டாமல் வார்த்தைக்கு வார்த்தை போட்டால் கருத்து விளங்குவதில்லை; நடையும் சரளமாவதில்லை. இவைகளின் நடுவில் நீந்திக்கொண்டு போய்க் கரையேற வேண்டும்.

பெயர்கள் உச்சரிப்பைப்பற்றிச் சில வார்த்தைகள். ஜெகில் என்பதில் இருக்கும் 'க', கனவு என்ற வார்த்தை

யிலிருக்கும் 'க', வின் சத்தம் கொண்டது. ஹைட், என்பீல்ட் என்பதில் 'ட்', குடம் என்ற வார்த்தையில் 'ட' விற்கு இருக்கும் சத்தம் கொண்டது.

ஸ்டீவன்ஸனது இந்தக் கதையை மொழிபெயர்க்க வேண்டுமென்று எனக்கு வெகுநாளாக ஆசை; அதற் கொரு சந்தர்ப்பத்தை நவயுகப் பிரசுராலயம் அளித்த தற்காக அவர்களுக்கு என் மனப்பூர்வமான வந்தனம்.

இந்த மொழிபெயர்ப்பைப் படித்துத் திருத்தங்கள் செய்ததற்கு நான் ஸ்ரீ வ. ரா. அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை,
30-9-'38.

கு. ப. ராஜகோபாலன்.

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அந்தக் கதவு! | ... | 1 |
| 2. | ஹைட் எங்கே? | ... | 16 |
| 3. | ஜெகிலின் விருந்து | ... | 33 |
| 4. | கொலை செய்தது யார்? | ... | 40 |
| 5. | அது யார் கையெழுத்து? | ... | 51 |
| 6. | டாக்டர் லான்யனுக்கு விபரீதம் | ... | 63 |
| 7. | ஜன்னலில் கண்ட காட்சி | ... | 73 |
| 8. | கடைசி இரவு | ... | 77 |
| 9. | லாயன் கண்ட அதிசயம் | ... | 106 |
| 10. | ஜெகில் எழுதிவைத்த வரலாறு | ... | 123 |

# 1

# அந்தக் கதவு!

**வ**க்கீல் அட்டர்ஸனின் முகத் தோற்றம் கடுகடுப்பானது. அதில் புன்சிரிப்பே தென்படாது. பேச்சிலும் சரஸம் கிடையாது; அதிகம் பேசவும் மாட்டார்; பேசுகிற பொழுதும் என்னமோ தர்ம சங்கடப்படுவது போலத்தான் பேசுவார். அவருடைய அமைப்பில் உணர்ச்சி அம்சம் என்பது ரொம்பக் குறைவு. ஒல்லியாய் உயரமாக இருக்கும் அவர் தேகம்; பிறரை வசீகரம் செய்யும் சக்தியே அவருக்குக் கிடையாது; ஆனால், எப்படியோ, யாரும் ரொம்பப் பிரியப்படக்கூடிய மனுஷ்யர் அவர். நண்பர்கள் கோஷ்டியில்—அதுவும் மது கொஞ்சம் அவர் மனத்திற்குப் பிடித்ததாயிருந்தால் போதும்—

இன்னதென்று எடுத்துரைக்க முடியாத, ஏதோ ஒரு ரொம்ப சகஜமான சரஸ குணம் அவருடைய கண்களில் ததும்பும். அவர் பேச்சிலே சாதாரண மாக அது தட்டுப்படவே படாது. ஆனல் மேற் சொன்ன மாதிரி, லேசான போதையில், அவ ருடைய பேச்சில் மட்டுமின்றி, அவருடைய நடத்தை யிலுங்கூட, அதிகமாகப் பகிரங்கமாகவே தோன் றும். தாம் சம்பந்தப்பட்ட மட்டில் அட்டர்ஸன் கண்டிப்பான நியமத்துடன் தம் வாழ்க்கையை நடத்தினர். தனியாக இருக்கும்போது, நல்ல உயர்ந்த சாராயம் சாப்பிடவேண்டும் என்ற சபலம் ஏற்படும் போதெல்லாம், அதைப் போக்கடிக்க, மட்டமான சரக்கைக் குடிப்பார். நாடகம் என்ருல் அவருக்கு அசாத்தியப் பைத்தியம்; என்ருலும் சென்ற இருபது வருஷங்களில் அவர் ஒரு கொட்டகையில்கூடக் காலெடுத்து வைத்ததில்லை. ஆனல் பிறருடைய சபலங்களையும் தவறுகளையும் அவர் ரொம்பவும் சகித் துப் போவார் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஆச்சரியப்பட்ட மாதிரி, அவர்களுடைய கெட்ட நடத்தையிலுள்ள உணர்ச்சி வேகத்தை அவர் அசூயை கொண்டவர் போலக் கவனிப்பார். அவர் களுக்கு ஏதாவது அவதி ஏற்பட்டால், உதவி செய்வாரே ஒழிய, கண்டிக்கவே மாட்டார். ‘அவன வன் எப்படியாவது போகட்டுமே!’ என்பார். இந்த முறையில், கெட்ட நடத்தை யுள்ளவர்களுக்கு, அவர்கள் அதி வேகமாக வழுக்கிவிழும் காலத்தில்,

அவர்தான் கடைசியான கௌரவத் தோழராக இருப்பார். அவர்கள் எந்த ஸ்திதியில் தம் வீட்டிற்கு வந்தாலும் அவர்களை வரவேற்பதில் அவர் கொஞ்சங்கூட வித்தியாசம் காட்டுவதில்லை.

அந்த வித்தை அவருக்கு ரொம்பச் சுலபம். ஏனெனில், அவர் ஒன்றையும் வெளியில் சொல்லுவதில்லை; இந்த விசால புத்தியால்தான் அவருடைய நட்புக்களும் ஸ்திரமானவையாகத் தென்பட்டன. எல்லோரும் அவருக்குத் தோழர்கள்தான் ; ஏனென்றால் அவருடைய கருணைக் கடலான உள்ளத்தில், யாருக்கும் இடம் உண்டு. ஒரு அடக்கமான மனிதன், சந்தர்ப்பம் ஏற்படும் இடத்தில்தான் தன் நண்பர் கூட்டத்தை விருத்தி செய்து கொள்ளுகிறான். அது தான் வக்கீலின் முறையும். அவருடைய நெருங்கிய பந்துக்கள்தான் அவருக்கு நண்பர்கள்; அல்லது அவருக்கு ரொம்பக் காலமாகப் பரிச்சயமானவர்கள். அவருடைய அன்பே நாளாவர்த்தியில் விருத்தியாவதுதான்; எல்லா இடங்களிலும் அவ்வன்பு பொருத்தமானது என்று அர்த்தமில்லை. ரிச்சர்டு என்பீல்ட் என்ற தூர பந்துவிடம் அவருக்கேற்பட்டிருந்த பற்றுக்கு இதுதான் காரணம்—சந்தேகமில்லை. இந்த இரண்டு பேர்களுக்கும் நடுவே நட்பு எப்படி நிலைக்கக்கூடும் என்பது பலருக்கு ஒரு புதிர். எவ்விதமான விஷயத்தைப்பற்றி அவர்கள் ஒத்துப் பேசக்கூடும் என்பது யாருக்கும் விளங்கவில்லை. அவர்கள் சேர்ந்து ஞாயிற்றுக்கிழமை ஞாயிற்றுக்

கிழமை உலாவப் போகும் போது, பார்த்தவர்களுக்கு இதுதான் தெரிந்தது: அவர்கள் ஒருவருக்கொருவர் ஒன்றும் பேசிக்கொள்வதே இல்லை; மூன்றாவது மனிதன் வந்தால், பரஸ்பரம் தோழமையில் சலித்துப்போனவர்கள் போல, அவனை ஆவலுடன் வரவேற்பார்கள். அப்படியிருந்தும் இந்த உலாத்தலில் அவர்கள் மிகவும் கருத்தாக இருந்தார்கள்; ஒவ்வொரு வாரத்திலும் அது இன்றியமையாத — தவிர்க்க முடியாத — இன்பம் எனக் கருதினார்கள். அதற்காக, இதர வேடிக்கைகளை மட்டுமல்ல, முக்கியமான அலுவல்களைக்கூட, ஒத்திப் போட்டு விடுவார்கள்; அதன் இன்பத்தை இடையறாது அனுபவிக்க வேண்டுமாம்!

இந்த மாதிரி ஒரு தரம் சுற்றி அலைந்து கொண்டு வரும்பொழுது, அவர்கள் லண்டனில் மிகவும் ஜன நடமாட்டமான ஒரு பாகத்தின் சந்து ஒன்றின் வழியாகப் போக நேர்ந்தது. அது ஒரு சின்னத் தெரு. அமைதியானதென்றே சொல்லலாம். ஆனால் வாரம் பூராவும், வேலை நாட்களில், நல்ல வியாபார ஸ்தலம். அதில் வசிப்பவர்கள் வியாபாரத்தில் முன்னேற்றம் அடைந்து வந்தார்கள் என்று தெரிந்தது; மேன்மேலும் அபிவிருத்தி அடைவதிலேயே கருத்துடையவர்கள் என்றும் தெரிந்தது. தாங்கள் அடைந்த லாபத்தின் மிச்சத்தைப் பகட்டாகப் பரப்பிக் காட்டினார்கள். ஆகையால்தான் தெரு முழுதும் கடை வரிசைகள்,

விற்பனை செய்யும் கடைப்பெண்கள் போல, கண்ணைக் கவர்ந்தன. பகட்டை அதிகமாக வெளிக் காட்டாத ஞாயிற்றுக்கிழமைகூட அது பிரகாச மாகத்தான் இருந்தது. சுற்றியிருந்த இருள் பிர தேசத்தில், அது காட்டின் நடுவே தெரியும் தீயைப் போல, 'எடுத்து'க் காட்டிற்று. புதிதாக வர்ணம் வைத்த ஜன்னல் கதவுகளும், தேய்த்துப் பளபள வென்றிருந்த பித்தளைப் பிடிகளும்—மொத்தத்தில் அழகும் வேடிக்கையும், பார்ப்பவனின் கண்ணை உடனே கவர்ந்து களிப்பூட்டின.

ஒரு மூலை திரும்புகிற இடத்தில், இரண்டு வீடு தள்ளிக் கிழக்குப் பக்கம் இடது கைப்புறத் தில், ஒரு வீட்டின் முன் பாகம் தெருவில் நீட்டிக் கொண்டிருந்தது. அது ஒரு விகாரமான கட்டிடம். அதில் இரண்டு மாடி. ஜன்னலே இல்லை. கீழே ஒரு வாசற் கதவு—மேலே பூச்சுப் போன ஒரு சுவர்; முன்புறம் ஜன்னல் கிடையாது. ரொம்பக் கால மாகக் கவனிக்கப்படாததின் அடையாளம், அதன் ஒவ்வொரு பாகத்திலும் இருந்தது. மணியோ, கதவு தட்டும்வசதியோ இல்லாத கதவு, வர்ணம் போய், திட் டுத் திட்டாக அழுக்கடைந்து இருந்தது. போக்கிரிகள் அதன் நிழலில் பதுங்கினார்கள்; அதன் அடைப் புக்களில் நெருப்புக் குச்சி கிழித்தார்கள். படிகளில் குழந்தைகள் கடைகள் வைத்தார்கள். கடைசல் பிடித்த பாகங்களில் பள்ளிப்பையன் தன் கத்தியின் கூர்மையைப் பரீக்ஷை செய்து பார்த்திருந்தான்.

வெகுகாலம் வரை, ஒரு தலைமுறைக்கு மேல், இந்த அகிருத்தியங்களைக் கண்டிப்பாருமில்லை, கட்டடத்தைப் பழுது பார்ப்பாருமில்லை என்று தெரிந்தது.

என்பீல்டும் வக்கீலும் தெருவின் எதிர்ப் பக்கத்தில் இருந்தார்கள். வாசலுக்கு நேராக வந்து கொண்டிருக்கும் பொழுது என்பீல்ட் தம் கைப் பிரம்பைத் தூக்கிச் சுட்டிக் காட்டினர்.

"அந்தக் கதவை நீ எப்பொழுதாவது கவனித்திருக்கிறாயா?" என்று கேட்டார். நண்பர் "கவனித்ததுண்டு" என்றதும், "அது சம்பந்தமாக விசித்திரமான கதை ஒன்று இருக்கிறது" என்றார்.

"அப்படியா!" என்று அட்டர்ஸன் கொஞ்சம் ஆச்சரியத்துடன் கேட்டார். "அதென்ன?"

"நான் ஒரு நாள் காலை மூன்று மணிக்கு, எங்கிருந்தோ வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தேன். அது பனிக்காலம்; இரவு ஒரே இருட்டு; தெருக்களில் தெருவிளக்குகளைத் தவிர வேறொன்றுமில்லை. அவைகள் வழியாக நடந்து செல்லவேண்டியிருந்தது. ஜனங்கள் 'அசந்த' தூக்கத்திலிருந்தனர். ஒவ்வொரு தெருவும் ஏதோ ஒரு ஊர்வலத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்தது போலத் தோன்றிற்று. ஆனல் காக்காய் குருவிகூடக் கிடையாது. 'போலீஸ்காரன் கண்ணில் தென்படமாட்டானா?' என்று காலடிச் சத்தத்திற்கு ஏங்கும் மனநிலை எனக்கு வந்துவிட்டது.

திடீரென்று எனக்கு முன்னல் இரண்டு

உருவங்கள் தென்பட்டன. ஒன்று, ஒரு குட்டையான ஆள்; வேகமாகக் கிழக்கே போகிறவன்; மற்றொன்று, ஏழு எட்டு வயதுள்ள சிறுமி; ஒரு குறுக்குத் தெருவில் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருந்தாள். என்ன ஆயிற்றுத் தெரியுமா? தெரு மூலையில் இருவரும் ஒருவர் மேல் ஒருவர் மோதிக்கொண்டனர். அதில் ஒன்றும் விசேஷமில்லை; அது எதிர் பார்க்க வேண்டியதுதானே? பின்னல் நடந்தது தான் மகா கோரமானது; அந்த மனுஷன் ரொம்பச் சாவதானமாகக் கீழே காலடியில் விழுந்த அந்தக் குழந்தையை மிதித்துக்கொண்டு போனன்! குழந்தை அவன் காலின் கீழ் அலறிற்று! சொல்லுகிறபோது ஒன்றும் தெரியவில்லை; ஆனல், அப்பா! அதைப் பார்ப்பது ரொம்பக் கஷ்டமாயிருந்தது. அவன் மனிதன் மாதிரியே நடந்து கொள்ளவில்லை. நான் உரக்கக் கத்திக்கொண்டு ஓடி, அவனைப் பிடித்துக்கொண்டேன். குழந்தை அழுதுகொண்டிருந்த இடத்தில் அதற்குள்ளேயே கூட்டம் கூடிவிட்டது. அவனை அங்கே கொண்டு வந்தேன். ரொம்ப அமைதியுடன் இருந்தான், தப்பியோடவே முயலவில்லை! ஆனல் அவன் என்னைப் பார்த்த பார்வை—அதன் கொடூரம்—என் உடம்பு ஜலமாய்ப் போச்சு. வியர்த்து வெலவெலத்துப்போனேன். அங்கு வந்திருந்தவர்கள் குழந்தையைச் சேர்ந்தவர்கள்தான். டாக்டரும் (அவரை அழைக்கத்தான் அக் குழந்தை அவ்வளவு வேகமாக ஓடினது) வந்து சேர்ந்தார்.

நல்ல வேளையாகக் குழந்தைக்கு ஒன்றும் ஆபத்தில்லை. ரொம்பப் பயந்து போனாள், பாவம்! விஷயம் இதோடு போயிருக்கலாமல்லவா? ஆனால் ஒரு விசேஷ மிருந்தது. அந்த ஆளைப் பார்த்த நிமிஷத்திலிருந்தே எனக்கென்னமோ அவனிடத்தில் ஒரு வெறுப்புத் தோன்றிவிட்டது. அந்தக் குழந்தையின் சொந்தக்காரர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டதும் சகஜம். ஆனால் டாக்டர் நிலைதான் ஆச்சரியமாயிருந்தது. அவர் சாதாரணமான டாக்டர் குணங்கள் பூராவும் பொருந்தினவர்; உணர்ச்சி யென்பதே அற்றவர். தோல் துருத்திக்கு எவ்வளவு உணர்ச்சியோ அவ்வளவு உணர்ச்சிதான் அவருக்கு உண்டு. அப்படிப்பட்டவர் எங்கள் மாதிரியே தவித்தார். கைதியைப் பார்க்கும்போதெல்லாம் டாக்டர் முகம் வெளுத்தது; அவனைக் கொன்றுவிட வேண்டும் என்ற எண்ணம் உதிப்பதுபோ லிருந்தது அவர் முகத்தோற்றத்தில். அவர் மனத்திலிருந்தது எனக்குத் தெரிந்தது. நானும் அதைத்தான் எண்ணினேன் என்பதை அவரும் அறிந்தார். கொலை செய்வதென்பது நடக்காத காரியமாதலால், அதற்கடுத்தபடியாக, அவனைப் பயமுறுத்தினோம். அவன் செய்கையைப் பற்றி வம்பு கிளப்பி, லண்டன் பூராவும் அவன் பெயர் நாறும்படியாகச் செய்துவிடுவோமென்றோம். அவனுக்கு நண்பர்களோ செல்வாக்கோ இல்லாமல் செய்துவிடுவோமென்றோம். இம்மாதிரி நாங்கள் சுடச்சுடக் கொடுத்துக்கொண்

டிருக்கும்போதே, ஸ்திரீகள் அவனை வைது கொட்டி விட்டார்கள். அவர்கள் அவனை நெருங்காமல் பார்த்துக்கொள்வதே சங்கடமாய்ப் போய்விட்டது. சுற்றி நின்ற எல்லோர் முகத்திலும் வெறுப்பும் கோபமும் நிறைந்திருந்தன. இவற்றிற்கெல்லாம் நடுவில், அந்த மனிதன் மௌனமாக, 'உங்களால் என்ன முடியும்?' என்று சொல்வதுபோன்ற அமைதியுடன் இருந்தான்; ஆனால் கொஞ்சம் பயந்தும் போனான். அது அவன் முகத்திலேயே தெரிந்தது. "இதை வைத்துக்கொண்டு நீங்கள் பிரமாதப்படுத்துவது என்று ஆரம்பித்தால் நான் என்ன செய்ய முடியும்? கௌரவமான எந்த மனிதனும் ரஸாபாஸத்தில் அகப்பட்டுக்கொள்ள விரும்பமாட்டான். சரி. நான் எவ்வளவு தரணும் சொல்லிவிடுங்கள்!" என்றான். குழந்தையின் குடும்பத்துக்கு நூறு பவுன்கள் கொடுக்க வேண்டுமென்று பேரம் பேசினோம். "மாட்டேன்!" என்று சொல்லத்தான் பார்த்தான்; ஆனால் நாங்கள் இருந்த மாதிரியைப் பார்த்து விஷமத்திற்குப் பயந்து, கடைசியாக ஒப்புக்கொண்டான். அடுத்தபடியாக, பணம் வரவேண்டுமே?

அவன் எங்களை எங்கே கூட்டிக்கொண்டு வந்தான் என்று நினைக்கிறாய்? இந்தக் கதவுக்குத்தான். பையிலிருந்து ஒரு சாவியை எடுத்துக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனான். சற்று நேரத்திற்கெல்லாம் பத்துத் தங்கப் பவுன்களையும் பாங்கிக்கு ஒரு செக்கையும் கொண்டுவந்தான். 'செக்' கூட்ஸ்

பாங்கிக்குக் கொடுக்கப்பட் டிருந்தது. அதில் கையெழுத் திட்டிருந்த பெயரை நான் சொல்ல முடியாது. ஆனால் அது பிரபலமான பெயர்தான். கையெழுத்து நன்றாயிருந்தது. அவன் செய்தது பூராவும் ஒரு மூடுமந்திரம் போலிருந்த தென்று அவனிடமே சொன்னேன். உண்மை வாழ்க்கையில், ஒரு மனிதன், காலை நாலுமணிக்கு ஒரு அறைக்குள் சென்று மற்றொருவன் கையெழுத்திட்ட பெருந் தொகைச் செக்கை எடுத்துக்கொண்டு வருவதில்லை என்று சுட்டிக் காட்டினேன். ஆனால் அவன் அமைதியுடனே பதில் அளித்தான். 'உங்களுக்கேன் சந்தேகம்? பாங்கி திறக்கும்வரை உங்களுடன் இருந்து, நானே செக்கை மாற்றிப் பணம் வாங்கித் தருகிறேன். அவ்வளவு தானே' என்றான். நாங்கள் எல்லோரும்—டாக்டர், அந்தக் குழந்தையின் தகப்பன், அந்தப் பேர்வழி, நான்—பாக்கி இரவை என் வீட்டில் கழித்தோம். காலையில், சிற்றுண்டி யானதும், எல்லோருமாகப் பாங்கிக்குப் போனோம். நான்தான் செக்கைக் கொடுத்தேன். அது நிச்சயம் தப்புக் கையெழுத்திட்டது என்று நினைத்தேனே! இல்லை. அது உண்மையான செக்!

"சீ, சீ!" என்றார் அட்டர்ஸன்.

"அதே மாதிரித்தான் எனக்கும் தோணுகிறது. ரொம்ப மோசமான சமாசாரம் தான். அந்தப்பேர் வழியோடு ஒருவரும் சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியாது—கொலைபாதகன். செக்கில் யார் பேர்

இருந்ததோ, அந்த ஆளோ, மிகவும் மரியாதையான மனுஷ்யர், நல்ல பேருங்கூட உடையவர்—அதில் இன்னும் ஒரு விசேஷம்—நல்லது செய்கிறோம் என்று சொல்லிக் கொள்ளும் கூட்டத்தில் ஒருவர். அவரை இந்த ஆள் ஏதாவ தொரு விதமாகப் பய முறுத்தி இந்தச் செக்கைப் பெற்றிருக்க வேண்டும். பாவம்! அந்த மனுஷ்யரின் சிறு பிள்ளை விளை யாட்டு ரகசியம் ஏதாவது ஒன்று இவன் கையில் அகப்பட்டிருக்கும். அதற்காகப் பணம் கொடுக் கிறார். ஆகையால், இந்த வீட்டை நான் 'பயமுறுத் தும் வீடு' என்கிறேன்." என்பீல்ட் இப்படி முடித்து விட்டு, யோசனையிலாழ்ந்தார்.

அட்டர்ஸன் திடீரென்று கேட்ட கேள்வியால் மறுபடியும் ஞாபகம் வந்தது அவருக்கு. "செக்கில் கையெழுத்திட்ட ஆள் இங்கு வசிக்கிறாரா என்பது உனக்குத் தெரியாதோ?"

"இருக்கலாம், ஏன்?—ஆனால் நான் அவர் விலாசத்தைப் பார்த்திருக்கிறேன். வேறெங்கோ இருக்கிறார்."

"நீங்கள் இந்த வீட்டைப்பற்றி மேலே விசா ரிக்க வில்லையோ?" என்று அட்டர்ஸன் கேட்டார்.

"இல்லை. அதில் எனக்குக் கொஞ்சம் சங் கோசம். கேள்விகள் கேட்பதைப்பற்றியே எனக்கு ஆட்சேபனை உண்டு. நாம் ஒன்று கேட்க, அதன் பயன் விபரீதமாகி, வேறொன்றாக முடிகிறது. நீ ஒரு கேள்வியைக் கேட்பது மலையிலே இருக்கிற

பாறுங்கல்லை இடத்தைவிட்டுக் கிளப்புவது போல. மலை உச்சியில் நீ பத்திரமாக இருக்கிறாய். நீ புரட்டின கல் கீழே உருளுகிறது; தன் வழியில் வேறு அநேக கற்களையும் பெயர்த்துக்கொண்டு வருகிறது; திடீரென்று, நீ எதிர்பாராத வண்ணம், ஒரு அப்பாவி மனிதன் தலையில் விழுகிறது. அவன் தீர்ந்து போகிறான். நான் கேள்வி கேட்கிறதில்லை. அது என் வழக்கம். அதிலும் விஷயம் கொஞ்சம் விசித்திரமாக இருந்தால் நான் அதைப் பற்றிக் கேள்வி கேட்டு அதில் தலையிடுவதே இல்லை."

"அது ரொம்ப நல்லது" என்றார் அட்டர்ஸன்.

"ஆனால் அந்த இடத்தை நான் ரொம்பக் கவனித்துப் பார்த்திருக்கிறேன். அது வீடே இல்லைபோலிருக்கிறது. வேறு கதவு கிடையாது. அதன் வழியாக யாரும் போவதைக் காணோம். என்றைக்காவது ஒரு நாள், என் "நண்பன்"—அந்தப் பேர்வழிதான்—வந்து போவான். முன் பக்கத்தில் மூன்று ஜன்னல்கள் முதல் மாடியில் இருக்கின்றன. கீழே ஒன்றும் கிடையாது. ஜன்னல்கள் சதா சாத்தித்தான் இருக்கின்றன. ஆனால் சுத்தமாக இருக்கின்றன. புகைப்போக்கி ஒன்று இருக்கிறது; அதன் வழியாக சாதாரணமாக புகை வெளியேறிக் கொண்டேதான் இருக்கும். ஆகையால் யாரோ உள்ளே இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் நிச்சயமாகவும் சொல்ல முடியவில்லை. ஏனெனில், அந்தப் பக்கம் கட்டிடங்கள் எல்லாம் கிட்டக்கிட்ட நெருங்கி யிருப்ப

தால், ஒன்று எங்கே முடிகிறது, மற்றொன்று எங்கே ஆரம்பிக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதே கஷ்டமாயிருக்கிறது."

இருவரும் கொஞ்ச தூரம் மௌனமாகவே நடந்து சென்றார்கள். "என்பீல்ட், உன்னுடைய நியதி ரொம்ப நல்லது!" என்றார் அட்டர்ஸன்.

"ஆமாம்! நல்லதென்றுதான் நினைக்கிறேன்."

"ஆனாலும், ஒரு விஷயம் எனக்குக் கேட்க வேண்டும்போலிருக்கிறது. அந்தக் குழந்தையை மிதித்துக்கொண்டு போனானே அவன் பெயரென்ன என்று தெரிந்து கொள்ளலாமோ?"

"அதனால் என்ன ஆபத்து நேரிடும்? அவன் பெயர் ஹைட் என்று தெரிந்தது."

"சரி, பார்ப்பதற்கு அவன் எப்படி இருக்கிறான்?"

"அவனை வர்ணிப்பது சுலபமன்று. அவனுடைய தோற்றத்திலேயே என்னமோ கோளாறு இருக்கிறது—ஏதோவொன்று பிடிக்காதது, வெறுக்கத்தக்கது. நான் இதுவரையிலும் யாரையும் இவ்வளவு வெறுத்தது கிடையாது. ஆனால் அந்த வெறுப்பு ஏன் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. எவ்விதத்திலோ அவன் அங்கஹீனன்—வளர்ச்சி குன்றினவன்—நிச்சயம். அவனைப் பார்த்தாலே அது நன்றாகத் தெரிகிறது. ஆனால் எவ்விடத்தில் குறைவு என்பதுதான் தெரியவில்லை. அவன் பார்வைக்குச் சாதாரண மனிதன் போலவே இல்லை.

ஆனால் அவனிடத்தில் என்ன விபரீதம் என்று சொல்லத் தெரியவில்லை. இல்லை, எனக்கு விஷயம் ஒன்றும் விளங்கவில்லை. அவனை என்னால் வர்ணிக்க முடியவில்லை. ஆனால் அதன் காரணம் நான் அவனை மறந்து விட்டேன் என்பதில்லை; ஏனெனில் இந்த நிமிஷங்கூட அவன் உருவம் என் முன் நிற்பது போலவே இருக்கிறது."

அட்டர்ஸன் இன்னும் கொஞ்ச தூரம் மௌன மாகவே நடந்தார்—ஏதோ ஆழ்ந்த யோசனையி லிருந்தார். "அவன் சாவிகொண்டுதானே கதவைத் திறந்தான்; அது நிச்சயந்தானே?" என்று கேட்டார் கடைசியாக.

"அதென்ன, அப்படிக் கேட்கிறாய்?...."என்று என்பீல்ட் மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டார்.

"ஆமாம். எனக்குத் தெரியும். இது விசித்திர மாகத் தோன்றுமென்று எனக்குத் தெரியும். விஷயம் என்ன தெரியுமா? செக்கில் கையொப்ப மிட்டிருந்த ஆளின் பெயரை ஏன் நான் கேட்க வில்லை, தெரியுமா? அந்தப் பெயர் எனக்குத் தெரியும்! நண்பா, உன் வரலாறு எனக்கு நன்றாக விளங்கிவிட்டது. அதில் ஏதாவது லேசாகத் தப்பிச் சொல்லியிருந்தால், திருத்திவிட்டால் நல்லது."

"முன்பே சொல்லக்கூடாதோ? எச்சரிக்கை யுடன் இருப்பேனே! ஆனால் நான் மிகவும் 'கணக் காக'ச் சொல்லியிருக்கிறேன். அந்தப் பேர்வழி யிடம் சாவி யிருந்தது. இன்னும் அவனிடம்தான்

இருக்கிறது. ஒரு வாரத்திற்கு முன்கூட அவன் அதை உபயோகித்ததைப் பார்த்தேன்."

அட்டர்ஸன் பெருமூச்சு விட்டார்; வாய் பேசவில்லை. "பார்த்தாயா? ஒன்றும் சொல்லக் கூடாதென்பதற்கு இதே ஒரு உதாரணம். இனி மேல் இதைப் பற்றி நாம் பேச்சே எடுப்பதில்லை என்று ஒப்பந்தம் செய்துகொள்வோமா?" என்றார் என்பீல்ட்.

"ஆட்சேபனை இல்லை. கைகொடு" என்று அட்டர்ஸன் கூறினார்.

# 2

# ஹைட் எங்கே?

அன்றிரவு அட்டர்ஸன் வீட்டிற்குத் திரும்பினபொழுது, அவருக்கு எதிலும் புத்தி ஓடவில்லை. சாப்பாடுகூடச் சரியாகச் சாப்பிடவில்லை. ஞாயிற்றுக்கிழமை தோறும் இரவு சாப்பாடு முடிந்ததும், கணப்பின் அருகில் உட்கார்ந்து, பக்கத்து மாதா கோவில் மணி பன்னிரண்டு அடிக்கும் வரை, ஏதாவது ஒரு மதநூலைப் படித்துவிட்டுப் படுக்கப்போவது அவர் வழக்கம். ஆனால், அன்றிரவு சாப்பிட்டு முடிந்ததும், விளக்கை யெடுத்துக்கொண்டு தம் காரிய அறைக்குச் சென்றார். இரும்புப் பெட்டியைத் திறந்து அதன் அந்தரங்க அறை ஒன்றில் இருந்த தஸ்தவேஜி ஒன்றை எடுத்தார். அதன் கவரின் மேல் "டாக்டர்ஜெகிலின் உயில்" என்று குறித்திருந்தது. அதைப் படிக்க ஆரம்பித்தார்.

அது ஸ்வஹஸ்த லிகிதமானதாக இருந்தது. ஏனெனில், அட்டர்ஸன், எழுதி முடிந்த பிறகு, அதைக் காப்பாற்றி வைக்க முன்வந்தாரே தவிர, அதை எழுத ஒரு உதவியும் செய்ய முடியாதென்று மறுத்து விட்டார். "ஹென்ரி ஜெகில்,

எம். டி., டி. ஸி. எல்., எல். எல். டி., எப். ஆர். எஸ்., காலமான பிறகு அவர் சொத்துக்கள் யாவும் அவருடைய நண்பரும் உபகாரியுமான எட்வர்ட் ஹைடுக்குச் சேரவேண்டியது" என்று அதில் கண்டிருந்தது. அது மட்டுமில்லை. ஜெகில் திடீரென்று மறைந்து போனாலோ அல்லது மூன்று மாதம் காரணமின்றிக் காணவிட்டாலோ, ஹைட் ஜெகிலின் சொத்தை அடைய வேண்டியது. ஜெகிலின் வீட்டிலிருந்த சிலருக்குச் சில சில்லறைத் தொகைகள் பட்டுவாடாச் செய்ய வேண்டியதைத் தவிர, வேறு யாருக்கும் கொடுக்க வேண்டியது ஒன்றும் கிடையாது என்றும் அதில் ஷரத்து இருந்தது. ரொம்ப காலமாக இந்தத் தஸ்தவேஜு வக்கீல் அட்டர்ஸனின் கண்களை உறுத்திக்கொண் டிருந்தது. வக்கீல் என்ற முறையிலும் அது அவருக்குப் பிடிக்கவில்லை; வாடிக்கையான வழிகளில் போகிற லௌகிகன் என்ற முறையிலும் இந்தக் கிறுக்குத்தனம் அவருக்குப் பிடிக்கவில்லை. இதுவரையிலும் ஹைட் என்பது யார் என்று அட்டர்ஸனுக்குத் தெரியாதிருந்தது அவருக்குக் கோபமாயிருந்தது. இப்பொழுது திடீரென்று அவன் யாரென்று தெரிந்ததால் அதிகக் கோபம் ஏற்பட்டது. ஆள் யாரென்று தெரியாமல் அது வெறும் பெயராக இருந்தபோதே அவர் ஹைடைப் பற்றிக் கெட்ட அபிப்பிராயம் கொண்டுவிட்டார்; இப்பொழுது ஆளின் குணவிசேஷங்களைக் கேள்விப்பட்டு விட்ட பிறகு, கேட்க வேண்டுமா?

இதுவரை அவருக்கு முன் மூடுபனி போல் உருவற்றிருந்த இடத்தில் ஹைட் திடீரென்று ஒரு பேய்போலத் தோன்றிக் காட்சியளித்தான்.

" இது பைத்தியக்காரத்தனம் என்று நினைத்தேன். ஆனால் அவமானத்திருப் பயந்து செய்த காரியம் என்று இப்பொழுது நினைக்க ஆரம்பிக்கிறேன் " என்று தாமே சொல்லிக்கொண்டு, தஸ்தவேஜை மறுபடியும் ஜாக்கிரதையாக உள்ளே வைத்துப் பூட்டினார்.

உடனே விளக்கை அணைத்துவிட்டு, மேற்சட்டை யணிந்து வெளியே புறப்பட்டார். வைத்தியர்கள் அதிகமாக வசிக்கும் 'காவெண்டிஷ் ஸ்கொய'ரை நோக்கிச் சென்றார். அங்குதான் பிரசித்தி பெற்ற டாக்டர் லான்யன் வசித்தார். நல்ல வருமானமுள்ளவர். நோயாளிகள் அவரிடம் சிகிச்சைக்குத் திரள் திரளாக வந்தார்கள். " இவ்விஷயம் யாருக்காவது தெரியுமென்றால், அது லான்யன்தான் " என்று அட்டர்ஸன் தமக்குள் சொல்லிக்கொண்டார்.

லான்யனது பட்லருக்கு அட்டர்ஸனைத் தெரியும். அவன் உடனே அவரை வரவேற்று, தாமதமின்றி டாக்டரிடம் அழைத்துச் சென்றான். சாப்பாட்டு அறையில் லான்யன் தனியாகச் சாராயம் அருந்திக்கொண்டிருந்தார். அவர் ஒரு குஷிப் பேர்வழி; செக்கச்செவேலென்றிருந்த முகம்; காலத்துக்கு முன் நரைத்துவிட்ட தலைமயிர்; அவர் பேசுகிற மாதிரியில் கலகலப்பும் தீர்மானமும் இருந்தன.

அட்டர்ஸனைப் பார்த்ததும் நாற்காலியிலிருந்து குதித்தெழுந்து, அவரை மனப்பூர்வமாக வரவேற்ருர். அந்தக் கலகலப்பில் கொஞ்சம் படாடோபமும் நடிப்பும் இருந்தாலும், உணர்ச்சியும் கூட இருந்தது. இரண்டு பேரும் பழைய சிநேகிதர்கள். பள்ளியிலும் காலேஜிலும் சேர்ந்து படித்தவர்கள். ஒருவரை யொருவர் ரொம்ப மதிப்பவர்கள்; இன்னும் முக்கியமானது என்னவென்ருல், பரஸ்பரம் சகவாசத்தையும் சம்பாஷணையையும் ரொம்ப விரும்பியவர்கள்.

லோகாபிராமமாக ஏதோ வேறு சில சமாசாரங்களைப் பற்றிக் கொஞ்ச நேரம் பேசிவிட்டு, வக்கீல் தம் மனத்தில் • உழன்றுகொண்டிருந்த விஷயத்திற்கு வந்தார்.

"லான்யன், நாம் இரண்டு பேர்தான் டாக்டர் ஜெகிலின் இரண்டு பழைய நண்பர்கள், அல்லவா?" என்ருர்.

"நண்பர்கள் இளைஞர்களாகவே இருக்கக் கூடாதா என்று நினைக்கிறேன். ஆமாம்! நாம்தான். அதற்கென்ன இப்பொழுது? அவன் இப்பொழுது அதிகமாகத் தென்படுவதுகூட இல்லையே!"

"அப்படியா! உங்கள் இரண்டு பேருக்கும் சம்பந்தம் ஜாஸ்தி என்றல்லவா நினைத்தேன்!"

"இருந்தது, வாஸ்தவம்தான். ஆனல் பத்து வருஷத்துக்கு மேலாகிவிட்டது அது விட்டுப்போய். அவன் போக்கு ரொம்ப குயுக்தியாகப் போய்

விட்டது. அவன் கெட்டுப்போக ஆரம்பித்துவிட்டான்—மனத்தில். ஆனால் இன்னும் அவன் விஷயத்தில் எனக்குச் சிரத்தை இல்லாமலில்லை. ஆளைத் தான் அதிகமாகப் பார்க்க முடியவில்லை. அம்மாதிரி சாஸ்திர விரோதமான ரசாயன ஆராய்ச்சியின் கற்றுக்குட்டித்தனம் எப்பேர்ப்பட்ட நண்பர்களிடையேயும் வெறுப்பு ஊட்டிவிடும்.”

இது கொஞ்சம் அட்டர்ஸனுக்கு ஆறுதலாக இருந்தது. ஏதோ இருவரும் சாஸ்திர ஆராய்ச்சி விஷயத்தில் மட்டும் அபிப்பிராய பேதம்கொண்டிருக்கிறார்களென்று நினைத்தார். “அவ்வளவு தானே!” என்றார். லான்யன் அமைதி யடைவதற்குக் கொஞ்சம் சாவகாசமளித்து, தாம் கேட்க வந்திருந்த கேள்வியைப் போட்டார்.

“டாக்டர் ஜெகிலின் ‘வளர்ப்பு’ ஹைட் என்ற பேர்வழியை உனக்குத் தெரியுமோ?”

“ஹைடா, அது யார்? இல்லையே! இதுவரையில் நான் கேள்விப்பட்டதுகூட இல்லையே!”

வக்கீல் வீட்டுக்குத் திரும்பும்போது அவருக்குக் கிடைத்த தகவல் இவ்வளவுதான். வீட்டுக்கு வந்து விடிகிறவரை படுக்கையில் புரண்டார். ஒன்றும் தெரியாத இருட்டில் தவித்துத் திண்டாடிக்கொண்டிருந்த அவர் மனத்திற்கு அன்றிரவு ஓய்வு ஏற்படவில்லை.

அருகிலிருந்த மாதா கோவிலில் மணி ஆறு அடித்தது. அப்பொழுதும் அவர் மனதில்

கேள்விகள் உதித்துக்கொண்டே இருந்தன. இது வரை அந்த விஷயம் அவர் பகுத்தறிவுக்கு மட்டும் பிடிக்காததாயிருந்தது. இப்பொழுது அவருடைய மனதே அதில் ஈடுபட்டுவிட்டது. படுக்கையில் படுத்துக்கொண்டிருந்த அவர் முன், இரவின் இருளில், என்பீல்ட் சொன்ன கதையின் சம்பவங்கள் ஒளிப் படங்கள்போல, வரிசையாகத் தோன்றின. இரவின் இருளில் மூழ்கிக் கிடந்த ஒரு நகரம்; அதில் தெரு விளக்குகளின் வரிசைகள்—தெருக்கள்; ஒரு மனிதன் வேகமாக நடந்து போகிறான்; ஒரு சிறுமி டாக்டர் வீட்டிலிருந்து திரும்பி ஓடிவருகிறாள்; இருவரும் சந்தித்து மோதிக் கொள்கிறார்கள். அந்த மனிதன் அவள் அலறலைக் கவனியாமல் அவளைக் காலின் கீழ் மிதித்துக்கொண்டு போகிறான்!.....இல்லாவிட்டால், செல்வம் பெருகியிருந்த தன் வீட்டில் நண்பன் ஜெகில் தூங்குகிறான். அறையின் கதவு திறக்கப் படுகிறது. ஒரு மனிதன் அவனை வந்து எழுப்புகிறான். அவனுக்குப் பூரா அதிகாரம் இருந்தது. அவன் சொன்னபடியெல்லாம் நண்பன் ஆடினான். இரவு பூராவும் இவ்விரண்டு இடங்களிலுமாக அந்த ஆள் உருவம் அவர் மனத்தில் தோன்றித்தோன்றித் துன்புறுத்தியது. கொஞ்சம் கண்ணயர்ந்த பொழுது, அந்த உருவம். இன்னும் கொஞ்சம் திருட்டுத்தனமாக ஜனங்கள் உறங்கும் வீடுகளிலெல்லாம் நுழைந்து செல்வதுபோல் தென்படும். அல்லது, வெகு வேகமாக, விளக்குகள் ஏற்றப்

பட்டிருந்த பல தெருக்கள் வழியாகச் சென்று, ஒவ்வொரு தெரு மூலையிலும் ஒரு குழந்தையைக் காலின் கீழ் மிதித்து அலறும்படி விட்டுச் செல்வது போலத் தோன்றும். ஆனால் அந்த உருவத்தின் முகம் தெரியவில்லை; ஆகையால் அதை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. கனவுகளிலுங்கூட அதற்கு முகம் இல்லை; அல்லது அந்த முகம் அவரை ஏமாற்றி மறைந்தது. இதிலிருந்து அட்டர்ஸனுக்கு ஒரு அசாதாரணமான ஆவல் அடக்க முடியாமல் எழுந்தது. உண்மையான ஹைடின் உருவத்தை யும் முகத்தையும் பார்க்கவேண்டுமென்று அந்த ஆவல் அவர் மனத்தில் பூர்ண பலங்கொண்டது. ஒரு தரம் அவனைப் பார்த்து விட்டாலுங்கூட இந்த மர்மம் நீங்கிச் சாதாரண விஷயமாகிவிடும். தம் நண்பன் ஏன் அப்படி அவனிடம் விபரீதமான பற்று வைத்திருக்கிறான் அல்லதுபயந்திருக்கிறான் என்பது விளங்கலாம்; உயிலின் திடுக்கிடச் செய்யும் ஷரத்து களுக்குக்கூட ஒரு காரணம் அகப்படலாம். எப்படி யானாலும் அது அவசியம் பார்க்கவேண்டிய முகம் தான். இரக்கம் என்ற பொருளே சரீரத்தில் இல்லாத ஒருமனிதனின் முகம். எதையும் அதிகம் கவனிக்காதவன் என்பீல்ட்; அவன் மனத்திலேயே ஒரு தரம் பார்த்தவுடனேயே, நிரந்தரமான வெறுப்பை யுண்டாக்கிய முகத்தைப் பார்க்கவேண்டும், கட்டாயம்—இவ்வாறெல்லாம் எண்ணினார் அட்டர்ஸன்.

அது முதல் அட்டர்ஸன் அந்தச் சிறு கடை

வீதியில், அந்தக் கதவண்டை, அடிக்கடி சென்று கவனிக்கலானார். காலையில் ஆபீஸுக்குப் போவதற்கு முன்பும், மத்தியானமும், இரவில் மூடுபனியால் மறைந்த நகரத்துநிலவிலும், எல்லா வெளிச்சத்திலும், எல்லாக் காலங்களிலும், நிசப்தமான தனிமையிலும், கூட்டத்திலும், அந்த இடத்தில் அவர் சதா தென்பட்டார்.

"அவன் ஹைட் (ஒளிகிறவன்) ஆனால் நான் ஸீக் (தேடுகிறவன்) ஆகிறேன்" என்று சொல்லிக் கொண்டார்.

கடைசியாக அவருடைய பொறுமைக்குப் பலன் ஏற்பட்டது. ஒரு நாள் குளிரற்ற இரவு. வானத்தில் லேசாகப் பனி; தெருக்கள் நாட்டிய மேடைகளைப் போலப் பரிசுத்தமாக இருந்தன. காற்றில்லாததால். அலையாமல் நின்ற விளக்குஜ்வாலைகள் ஒரே தினுசான ஒளி, நிழல், வர்ணவிஸ்தரிப்பைச் செய்து கொண்டிருந்தன. இரவு பத்து மணிக்குக் கடைகள் அடைக்கப்பட்டவுடன் அந்தத் தெருவு நிசப்தமாகிவிட்டது. சுற்றியிருந்த லண்டன் நகரத்தின் ஆழ்ந்த தூரத்து உறுமலிலுங்கூட, அந்த இடம் தனிமை பெற்றுவிட்டது. சிறு சத்தங்களும் வெகு தூரம் கேட்டன. வீட்டுக்குள் வேலைசெய்யும் சத்தங் கூட தெருவின் இரண்டு பக்கங்களிலும் கேட்டது. எவனாவது ஒருவன் தெரு வழியாக நடந்துவருவது, அவன் வருவதற்கு ரொம்ப நேரத்துக்கு முன்பே தெரிந்தது. அட்டர்ஸன் அங்கே வந்து சில நிமிஷங்

கள் தானிருக்கும். ஒரு விநோதமான மெல்லிய காலடிச் சத்தம் காதில் பட்டது. பலமுறை இரவில் அவர் உலாவுவதில் இது அவருக்கு சகஜமாய்விட்டது: நகரத்தின் விஸ்தாரமான முணுமுணுப்பிலும் கூச்சலிலும், ஒரு மனிதனது காலடிச் சத்தங்கள் தூரத்தில் கேட்கும் போது ஏற்படும் விசித்திர உணர்ச்சி. ஆனால் இந்த மாதிரி எந்தக் காலடிச் சத்தமும் அவருடைய கவனத்தை இப்படிச் சட்டென்று தீர்மானமாக, என்றைக்கும், இழுத்ததில்லை. "நாம் இன்று வெற்றி யடைந்தோம்!" என்ற நிச்சய புத்தியுடன் அட்டர்ஸன் கொஞ்சம் மறைவாக நின்றார்.

காலடிச் சத்தம் வேகமாக நெருங்கிற்று. வந்தவன் தெருக்கோடி திரும்பினதும், சத்தம் அதிகமாயிற்று. அட்டர்ஸன் எட்டிப் பார்த்த பொழுது அவருக்கு ஆள் தெரிந்தது. ஆனால் அந்த ஆளின் உடல் சிறியது. சாதாரணமாகத்தான் உடை தரித்திருந்தான்; அவ்வளவு தூரத்திலேயே அவனுடைய பார்வை அட்டர்ஸனுக்குப் பிடிக்கவில்லை. அவன் தெருவைக் குறுக்கே கடந்து நேராகக் கதவண்டை வந்தான். வீட்டை நெருங்கியவன் போலச் சட்டைப் பையிலிருந்து ஒரு சாவியை எடுத்தான்.

அட்டர்ஸன், முன்வந்து, அவனைத் தோளில் கைவைத்துத் தொட்டார். "தாங்கள் தானே மிஸ்டர் ஹைட்?"

ஹைட் திடுக்கிட்டுப் பாம்பைப் போல் சீறிக் கொண்டு, பின்வாங்கினான். ஆனால் அந்தப் பயம் ஒரு நிமிஷந்தான் இருந்தது. மறு நிமிஷம் அட்டர்ஸனைப் பார்க்காமல் சாவதானமாக, "ஆமாம். உங்களுக்கு என்ன செய்யவேண்டும்?" என்றான்.

"நீங்கள் உள்ளே போகப் போகிறீர்கள் அல்லவா? நான் டாக்டர் ஜெகிலின் பழைய நண்பன்—கான்ட் தெரு அட்டர்ஸன். நீங்கள் என் பெயரைக் கேள்விப்பட்டிருக்க வேண்டும். சரியான சமயத்தில் நானும் வந்திருக்கிறதால், என்னையும் கூட்டிச் செல்வீர்கள் என்று நினைத்தேன்."

"நீங்கள் டாக்டர் ஜெகிலைக் காண முடியாது. அவர் வீட்டிலில்லை" என்று சொல்லிக்கொண்டு ஹைட் சாவியை வாயில் வைத்து உறிஞ்சினான். திடீரென்று,நிமிர்ந்து பார்க்காமல், "என்னை உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"பதிலாக, நீங்கள் ஒன்று செய்ய முடியுமா?"

"தாராளமாக! அது என்ன?"

"நான் உங்கள் முகத்தைப் பார்க்க அனுமதிப்பீர்களா?"

ஹைட், சிறிது யோசிப்பது போல் தோன்றினான். பிறகு ஏதோ திடீரென்று எண்ணியது போல், அலட்சியமாக முன்பக்கம் திரும்பினான். இருவரும் ஒருவரை யொருவர் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டார்கள்.

"நான் இனிமேல் உங்களை அடையாளம்

வைத்துக் கொள்வேன். சமயத்துக்கு உதவலாம்" என்றார் அட்டர்ஸன்.

"ஆமாம், நாம் சந்தித்தது நல்லதுதான். உங்களுக்கு என் விலாசத்தைக் கொடுக்கிறேன்" என்று ஹைட் ஸோஹோவில் ஏதோ ஒரு தெருவில் ஒரு வீட்டு நம்பரைக் கொடுத்தான்.

"ஒருவேளை அவனும் உயிலைப் பற்றித்தான் எண்ணிக்கொண்டிருந்தானோ?" என்று அட்டர்ஸன் எண்ணினார். ஆனால் வெளியில் சொல்லவில்லை.

"ஆமாம், என்னை எப்படி அடையாளம் கண்டு பிடித்தீர்கள்?"

"பிறர் சொன்ன அங்க வர்ணனையிலிருந்து."

"யார்?"

"நம் இருவருக்கும் பரிச்சயமான பொது நண்பர்கள் இருக்கிறார்கள்."

"பொது நண்பர்களா! அவர்கள் யார்?"

"ஜெகில்—உதாரணமாக!"

"அவர் சொல்லவில்லை! நீங்கள் பொய் சொல்வீர்கள் என்று நான் நினைக்கவில்லை!" என்று கோபத்துடன் கூறினான் ஹைட்.

"நீங்கள் பேசுவது அவ்வளவு மரியாதையான பாஷை இல்லையே!"

ஹைட் ஒரு முரட்டுச் சிரிப்புச் சிரித்தான். அடுத்த நிமிஷம், சாதாரணமாக அவனிடம் இயல்பாக எதிர்பார்க்கக் கூடாத வேகத்துடன், கதவைத் திறந்துகொண்டு உள்ளே மறைந்து போய்விட்டான்.

ஹைட் சென்றதும் அட்டர்ஸன் அப்படியே அமைதியின்மையே ஸ்தம்பமாக உருவெடுத்தது போல, சற்றுநேரம் நின்ருர். பிறகு மெல்லத் தெரு வழியே நடக்கலானர்; இரண்டடிக்கு ஒரு தரம் நின்று, மனக்குழப்பம் கொண்டவனைப் போல, நெற்றியைப் பிடித்துக் கொண்டார். நடந்து கொண்டே யோசனை செய்தார். ஆனல், அவர் யோசனை செய்த பிரச்னை என்றைக்கும் தீராதவை களில் ஒன்று. ஹைட் பலஹீனமாயும் குட்டை யாயும் இருந்தான்; குறித்துச் சொல்லக்கூடிய அங்கஹீனம் எதுவும் இல்லாவிட்டாலும், அவனைப் பார்க்கையில், பொதுவாக, இயற்கை வளர்ச்சி குன்றினவன் என்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவன் புன்சிரிப்பு விகாரமாயிருந்தது. அவன் பேசிய பேச்சில் பயங்கொள்ளித் தனமும் தைரியமும், கொலைகா ரத்தனமான வகையில் கலந்திருந்தன. தொண்டை கட்டினது போல 'கற கற' வென்று, உடைந்த குரலில் பேசினன். இதெல்லாம் அட்டர்ஸனுக்கு ஒன்றும் பிடிக்கவேயில்லை; ஆனல் அவர் மனத் தில் அப்பொழுது ஏற்பட்ட விபரீதமான அரு வருப்பிற்கு இவை ஒன்றும் காரணமல்ல என்று அறிந்தார். "வேறு ஏன்னமோ இருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டார். "ஏதோ வேறு ஒரு காரணம் இருக்கிறது. அது எனக்குச் சொல்ல வரவில்லை. அப்பா! இவன் மனிதன் மாதிரியே தெரியவில்லையே! குகையில் வாசம்செய்யும் ஏதோ ஒரு காட்டுமிராண்

டியா யிருக்கலாமோ? அல்லது டாக்டர் பெல்லைப் பற்றிய பழைய சமாசாரமோ? இந்த துராத்மாவின் உள்நெருப்புத்தானே இப்படி வெளியில்வீசி அவன் உருவத்தையே இப்படி மாற்றுகிறது? கடைசியாக நினைத்தபடிதான் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். நண்பா, ஜெகில், இவன் எங்கிருந்தடா உனக்கு யமனைய் வந்து முளைத்தான்? யாரையாவது சைத்தானுக்கு ஒப்பிட்டுக் கூறக் கூடுமானல் அவன் உன் நண்பனை இவன்தான்.''

அந்தத் தெருவிலிருந்து திரும்பும் மூலையை யடுத்து, சில பழைய காலத்துக் கட்டிடங்கள் சேர்ந்தாற்போல் இருந்தன. இப்பொழுது க்ஷீணதசையை யடைந்து, மாடி அறைகளும் கீழ் ஒண்டுக்குடி பாகங்களும் பலருக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தன. படம் போடுகிறவர்கள், சிற்பிகள், இரண்டுங் கெட்டான் வக்கீல்கள், சில்லறை வியாபார ஏஜண்டுகள், முதலிய பல ரகமானவர்கள் குடியிருந்தார்கள். மூலையை யடுத்த இரண்டாவது வீடு மட்டும் பூராவும் ஒரு மனிதன் அனுபோகத்தில் இருந்தது. வெளிப் பார்வைக்கே செல்வத்தையும் செருக்கையும் குறித்தது. அந்த வாசல் கதவண்டை சென்று அட்டர்ஸன் தட்டினர். நல்ல உடை தரித்த கிழட்டுச் சேவகன் ஒருவன் வந்து கதவைத் திறந்தான்.

“டாக்டர் ஜெகில் வீட்டில் இருக்கிறாரா, பூல்?'' என்று அட்டர்ஸன் கேட்டார்.

“பார்க்கிறேன், ஸார்!'' என்று சொல்லிக்

கொண்டு, சேவகன் பூல் அவரை ஒரு பெரிய ஹாலுக்குள் அழைத்துச் சென்றான். அது தாழ்ந்த கூரையுடன், அடக்கமா யிருந்தது. கீழே தளவரிசை போட்டிருந்தது. ஒரு நாட்டுப்புறத்து வீட்டைப் போல நல்ல கணப்பு ஒன்று எரிந்துகொண்டிருந்தது. விலை யுயர்ந்த தேக்கு அலமாரிகள் இருந்தன. "கணப்பின் கிட்டே இங்கு இருக்கிறீர்களா? அல்லது உள்ளே சாப்பாட்டு அறையில் விளக்குப் போடட்டுமா?" என்று பூல் கேட்டான்.

"இங்கேயே இருக்கிறேன்" என்று சொல்லி விட்டு, அட்டர்ஸன் கணப்பின் அருகே சென்று உட்கார்ந்து கொண்டார். அவர் அப்பொழுது தனியாக உட்கார்ந்திருந்த அந்த ஹால் டாக்டர் ஜெகிலுக்கு மிகவும் பிரியமானது. லண்டனிலேயே அவ்வளவு சௌகரியமான அறை கிடையாதென்று அட்டர்ஸனே அதைப்பற்றிச் சொல்வது வழக்கம். ஆனால் இன்றிரவு அவருடைய நரம்புகள் நடுங்கின. ஹைடின் முகம் அவரது மனத்தில் சதா தோன்றிக் கொண்டே இருந்தது. வாழ்க்கையின் மீதே ஒரு அதிருப்தியும் துவேஷமும் ஏற்பட்டது. இந்த மாதிரி அவருக்கு எப்பொழுதும் இருந்ததே கிடையாது. அவருடைய மனநிலையில், பளபளவென்றிருந்த அலமாரிகளின்மீது அடிக்கடி விழுந்த நெருப்பு ஒளியும், கூரையில் கிளம்பி மறைந்த நிழலும், அவரைப் பயமுறுத்துவது போலத் தோன்றின. பூல் திரும்பி வந்தபொழுதுதான் அவர் நிம்மதி

அடைந்தார் என்பதைத் தாமே அறிந்து வெட்கி ஞர். "டாக்டர் ஜெகில் வெளியே போயிருக்கிறூர்" என்று பூல் தெரிவித்தான்.

"பழைய ஆபரேஷன் ஹால் வாசல் வழியாக ஹைட் உள்ளே வருவதைப் பார்த்தேனே. டாக்டர் இல்லாதபொழுது, அவர் அப்படி வருவது வழக்கம் தானே?"

"வழக்கம்தான், ஸார்; அவரிடமே ஒரு சாவி இருக்கிறது."

"அந்த இளைஞரிடத்தில் உன் யஜமானன் ரொம்ப நம்பிக்கை வைத்திருக்கிறூப்போலிருக் கிறதே, பூல்?" என்று அட்டர்ஸன் ஏதோ யோசித்துக்கொண்டே கேட்டார்.

"ஆமாம் ஸார், ரொம்ப நம்பிக்கை, ஸார். நாங்கள் எல்லோரும் அவர் சொன்னபடி கேட்க வேண்டுமென்று உத்தரவு."

"நான் ஹைடை இங்கு சந்தித்ததே இல்லை என்று நினைக்கிறேன்" என்றூர் அட்டர்ஸன்.

"இல்லை, ஸார், இல்லை. அவர் இங்கு சாப்பிட வருவதே கிடையாது. ஏன்! அவரை நாங்களே இங்கே பார்க்கிறது ரொம்ப துர்லபம். ஆராய்ச்சிச் சாலைவரை வந்துவிட்டு அப்படியே அந்தப் பக்கமே தான் போய்விடுகிறூர்" என்றுன் பூல்.

"சரி, நான் வருகிறேன், பூல்!"

"போய் வாருங்கள், ஸார்!"

கவலை நிறைந்தவராய், அட்டர்ஸன் வீடு திரும்

பினர். வழியில் அவருக்குப் பல எண்ணங்கள் தோன்றின. "பாவம், ஜெகில்! அவன் ஏதோ ஆபத்தில் அகப்பட்டுக்கொண் டிருக்கிறான் என்பதை நினைக்க என் மனம் நடுங்குகிறது. சிறுவனா யிருக்கும்பொழுது கொஞ்சம் கெட்ட நடத்தை யுடையவனா யிருந்தான். ரொம்ப நாளைக்கு முன்தான். ஆனால் கடவுளின் சட்டத்தில் காலாவதி உண்டா? அதுதான் இப்படி—பழைய பாவத்தின் செய்வினை—மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு துர் நடத்தையின் புண் இப்பொழுது புரையோடிவிட்டது. அந்தச் செயலைப் பற்றிய நினைவே அற்றுவிட்ட பிறகு, ஆத்மாபிமானத்தால் அந்தக் குற்றத்தை அவரே மன்னித்துக்கொண்டு விட்ட பிறகு, வெகுகாலம் கழித்து, இப்பொழுது தண்டனை!"

அந்த எண்ணம் தோன்றியதுமே அட்டர்ஸன் திகில் கொண்டவராய்த் தம்முடைய பூர்வ வாழ்க்கையைப் பற்றி நினைத்துப் பார்த்தார். ஞாபகத்தின் இருட்டு மூலைகளை யெல்லாம் தேடிப் பார்த்தார்; தப்பித் தவறி ஏதாவதொரு பழைய குற்றம் அங்கிருந்து திடீரென்று உதயமாகாதா? அவருடைய பூர்வ வாழ்க்கை கூடிய மட்டும் குற்ற மற்றதாகவே இருந்தது. அவரைப் போல அவ்வளவு பயமின்றித் தங்கள் வாழ்க்கையைப் பற்றிப் பரிசீலனை செய்யக் கூடியவர்கள் சிலரே. ஆனாலும் தாம் செய்த பல சிறு குற்றங்களை எண்ணி அவமான மடைந்தார்; இன்னும் சிலவற்றைச் செய்யும் தறுவாயிலிருந்து,

நல்லவேளையாக, செய்யாமல் தப்பித்ததை எண்ணிச் சந்தோஷம் கொண்டார்.

மறுபடியும் ஞாபகம் முன்விஷயத்திற்குத் திரும்பிற்று. அவருக்கு ஒருவிதத் தைரியம் ஏற்பட்டது. "இந்த ஹைடைப்பற்றி விசாரித்தால் அவனுக்கும் சில ரகசியங்கள் இருக்கும். எல்லாம் கெட்டவையாகத்தா னிருக்கவேண்டுமென்று அவன் முகமே சொல்லுகிறது. டாக்டர் ஜெகில் செய்திருக்கக்கூடிய எந்த மோசமான குற்றமும் அதற்கு முன் நிற்க முடியாது, நிச்சயம். இப்படியே விஷயங்கள் நடந்து கொண்டு போகமுடியாது. அப்பா! இந்தப் பாவி ஜெகிலின் படுக்கை யண்டை திருட்டுத்தனமாகப் போவதுபோல என் மனத்தில் தோன்றினாலும் நான் திகிலடைகிறேன். இந்த ஹைடுக்கு அந்த உயில் இருப்பது தெரிந்தால்—அதை 'அடித்துக் கொள்ள' ஆத்திரம் கொண்டு விடுவான். ஆ, நான் சும்மா இருக்கக்கூடாது!—ஜெகில் என்னைத் தடுக்காமல் இருக்கவேண்டுமே!" மறுபடியும் அந்த உயிலின் விபரீத ஷரத்துக்கள் அவர் மனக் கண்முன் தோன்றின.

# 3

# ஜெகிலின் விருந்து

இரண்டு வாரங்களுக்குப் பிறகு, ஜெகிலைக் கண்டு பேச, அட்டர்ஸனுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது. டாக்டர் ஜெகில் நண்பர்களுக்கு ஒரு விருந்து நடத்தினர். பொறுக்காக, ஐந்தாறு நண்பர்களை வரவழைத்து அடிக்கடி விருந்து வைப்பது அவர் வழக்கம். •அவர்கள் எல்லோரும் நல்ல அறிவாளிகளும் கண்ணியமானவர்களுமாகத்தான் இருப்பார்கள். முதல் தரமான சாராயத்தை ரஸித்து அநுபவிப்பவர்கள். அன்று விருந்து முடிந்து எல்லோரும் விடை பெற்றுக்கொண்டு போன பிறகும் அட்டர்ஸன் அங்கேயே இருந்தார். எல்லோருடனும் சேர்ந்து போகாமல் அவர் இப்படிப் பின்னே தங்கித் தாமதிப்பது புதிதான ஏற்பாடல்ல. அந்த மாதிரி எத்தனையோ தடவை நடந்திருக்கிறது. நெருங்கிப் பழகின இடங்களில் எல்லாம் அட்டர்ஸனிடம் எல்லோரும் ரொம்பப் பற்றுதல் கொண்டார்கள். பொதுவாக, விருந்து நடக்கும் இடங்களிலெல்லாம் வம்பளப்பவர்களும் தமாஷ் பேர்வழிகளும் விருந்து முடிந்ததும் வீடு திரும்பி விடுவார்கள்.

760—3

அட்டர்ஸனை மட்டும் வீட்டுக்காரர்கள் நிறுத்திக் கொள்ளுவார்கள். சரஸகுணம் அவ்வளவாக இல்லை யென்றாலும், அவர்களுக் கெல்லாம் என்னமோ அட்டர்ஸனிடம் ஒரு மோகம். அவர் ஒன்றிலும் தலையிடாமல் மௌனமாகத்தா னிருப்பார்; அவர் மௌனமே அவர்களுக்கு நிம்மதியாக இருக்கும். விருந்தின் வேடிக்கைக்கும் சிரமத்திற்கும் பிறகு அவருடன் தனியாக இருப்பதே அவர்களுக்கு ஒரு ஆறுதல்.

அதே மாதிரி, டாக்டர் ஜெகிலும் அட்டர்ஸனை நிறுத்திக்கொண்டு வெகுநேரம் அவருடன் இருப்பது வழக்கம். அன்று டாக்டர் கணப்பின் அருகே உட் கார்ந்திருந்தார். நல்ல வாட்ட சாட்டமான சரீரம். வயது ஐம்பது என்றாலும் முகத்தில் ஒரு சுருங்கல் கூடக் கிடையாது. அவர் தயை தாட்சண்யம் நிறைந்தவர் என்பது அதில் நன்றாய்த் தெரிந்தது. அவர் அட்டர்ஸனிடம் கொண்டிருந்த ஆழ்ந்த அன்புகூட அப்பொழுது அதில் தென்பட்டது.

“உன்னோடு ஒரு விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டுமென்று எனக்கு ரொம்ப நாளாக ஆவல். ஜெகில்! உன் உயில் இருக்கிறதே, அது ஞாபகமிருக் கிறதா?” என்று அட்டர்ஸன் ஆரம்பித்தார்.

அந்த உயில் விஷயத்தைப் பற்றிப் பிரஸ் தாபம் செய்யவே டாக்டர் பிரியப்படவில்லை யென் பது அவர் முகத்தை அப்பொழுது யாராவது

கூர்ந்து கவனித்திருந்தால் தெரிந்திருக்கும். ஆனால் டாக்டர் தம் அதிருப்தியை அதிகம் வெளிக் காட்டாமல் பேச்சை மாற்ற முயன்றார்.

"உனக்கு நல்ல கட்சிக்காரன், நான் வந்து வாய்த்தேன்! என் உயிலைப்பற்றி நீ படுகிற கவலை! என் சாஸ்திர ஆராச்சிகளைப் பற்றி லான்யன்கூட இந்த மாதிரி, உன்னைப் போலத்தான், கவலைப்படுகிறான், பாவம்! என் ஆராய்ச்சிகள் வெறும் புரட்டாம்! முற்போக்கு மனப்பான்மையே அவனிடம் இல்லை. ஆனால் ரொம்ப நல்லவன்—நீ அதற்குள் கோபித்துக் கொள்ளாதே—என்ன செய்கிறது? அவன் படிப்பிற் கேற்ற விவேகமே அவனிடம் இல்லையே! அவன் இவ்வளவு கற்றறி மோழையாக இருப்பா னென்றே நான் நினைக்கவில்லை. ஆனால் இன்னும் அவனை அடிக்கடி சந்தித்துப் பேசவேண்டுமென்பதே என் ஆசை."

டாக்டர் சொன்னதைக் காதில்கூடப் போட்டுக் கொள்ளாமல், "உன் உயிலைப் பற்றி எனக்கு மனது சமாதானமே கிடையாது, உனக்குத் தெரியுமே!" என்றார் அட்டர்ஸன்.

"என் உயில்தானே? ஆமாம், தெரியுமே! உனக்குத் திருப்தி யில்லை யென்றுதான் என்னிடம் சொல்லியிருக்கிறாயே! எத்தனை தரம் சொல்லுவாய்?" என்று டாக்டர் கொஞ்சம் வெடுக்கென்று சொன்னார்.

"சரி, இப்பொழுது திரும்பவும் சொல்லுகிறேன். ஹைடைப் பற்றி எனக்குக் கொஞ்சம் புதிதாகத் தகவல் கிடைத்திருக்கிறது."

உடனே டாக்டர் ஜெகிலின் முகம் வெளுத்து விகாரமடைந்தது. கண்களில் கொஞ்சம் கோபக் குறிகூடத் தோன்றிற்று. "அட்டர்ஸன், அதைப் பற்றி ஒன்றும் நான் மேலே கேட்க இஷ்டப்பட வில்லை. ஹைட் விஷயமாகத்தான் நாம் இனிமேல் நமக்குள் பிரஸ்தாபிப்பதே இல்லை என்று ஏற்கெனவே தீர்மானம் செய்தோமே."

"அவனைப் பற்றி இப்பொழுது என் காதுக்கு எட்டியிருக்கும் தகவல் மிகவும் மோசமானதா யிருக் கிறதே!"

"அதனால் நமது ஒப்பந்தம் எப்படி மாறுகிறது? மேலும், என் நிலைமையை நீ அறியவில்லை—உன்னால் அறியவும் முடியாது. என் நிலைமை மிகவும் சங்கடமானது, அட்டர்ஸன்! மிகவும் விசித்திரமானது! பேச்சுப் பேசுவதினால் அதை ஒன்றும் சரிப்படுத்த முடியாது" என்று டாக்டர் கொஞ்சம் தடுமாற்றத்துடன் கூறினார்.

"ஜெகில்! என் சுபாவம் உனக்கு நன்றாகத் தெரியும். நீ என்னை நம்பு. என்ன? ரகசியமாக நிலைமையைப் பூராவும் என்னிடம் ஒளிக்காமல் சொல்லு. இந்தத் தொல்லையிலிருந்து உன்னை நான் நிச்சயம்

வெளியேற்றக்கூடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது."

"இந்தா, அட்டர்ஸன்! என்னிடத்தில் உனக்கிருக்கும் அன்பினால் நீ இப்படிச் சொல்லுகிறாய், தெரிகிறது. உன்னிடத்தில் எனக்குப் பூர்ண நம்பிக்கைதான், நிச்சயம். உன்னைக் காட்டிலும் அதிகமாக நான் வேறு யாரை நம்பப்போகிறேன்? என்னைக் காட்டிலுங்கூட அதிகமாக உன்னை நான் நம்புகிறேன் என்று சொல்லுவேன். ஆனால் நீ எண்ணுவதுபோல சங்கதி ஒன்றும் அவ்வளவு மோசமில்லை. ஆகையால் அநாவசியமாக நீ மனத்தைச் சிரமப் படுத்திக் கொள்ளாதே. ஒன்று சொல்லுகிறேன், கேள். எந்த நிமிஷமும், நான் விரும்பினால், நான் ஹைடை நிராகரித்து இந்தத் தொல்லையிலிருந்து விடுபட முடியும். உறுதியாகச் சொல்லுகிறேன், நம்பு. இன்னொரு வார்த்தையும் சொல்லுகிறேன், கோபித்துக்கொள்ளாதே. அட்டர்ஸன்! இது என் சொந்த விஷயம்—அந்தரங்கமானது—இதை நீ தயவு செய்து கிளறாதே, தெரிகிறதா?"

அட்டர்ஸன் கொஞ்ச நேரம், கணப்பைப் பார்த்துக்கொண்டே யோசனை செய்தார்.

"நீ சொல்லுகிறது ரொம்ப சரி, ஜெகில்!" என்று சொல்லிவிட்டு, எழுந்தார்.

"இனிமேல் இதைப் பற்றி நாம் பேச வேண்டாம்; ஆனால், எப்பொழுது பேச்செடுத்து விட்

டோமோ——நான் ஒரே ஒரு சமாசாரம் உன்னிடம் சொல்ல விரும்புகிறேன். ஹைடின் க்ஷேமலாபத்தில், உண்மையிலேயே, எனக்கு ரொம்பக் கவலை இருக்கிறது. நீ அவனைச் சந்தித்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியும். அவனே என்னிடம் சொன்னான். அவன் உன்னிடம் கொஞ்சம் முரட்டுத்தனமாகக்கூட நடந்துகொண்டு விட்டான் போலிருக்கிறது. ஆனால் அந்த இளைஞன் விஷயத்தில் நான் மிகவும் ஈடுபட்டுவிட்டேன். நான் ஒருவேளை போய் விட்டாலும், நீ அவனுடைய குற்றங் குறைகளைப் பொருட்படுத்தாமல், அவனுடைய பாத்தியதைகளை அவனுக்கு வாங்கித் தரவேண்டும். ஆகட்டுமென்று நீ எனக்கு உறுதி கூற வேண்டும். விவரம் பூராவும் உனக்குத் தெரிந்தால் நீ நிச்சயம் அப்படிச் செய்வாய், சந்தேகமில்லை. ஆகட்டு மென்று நீ சொல்லி விட்டாயானால் என் மனத்திலிருக்கும் பெரிய கவலை தீரும்."

"அந்த இளைஞனிடம் ஒரு நாளும் எனக்குப் பற்றுதல் ஏற்படாது. அப்படி யிருக்கும்பொழுது, பற்று ஏற்படுவதாக நான் உன்னிடம் எப்படிப் பாசாங்கு செய்ய முடியும்?"

"நீ அவனிடம் பற்றுதல் கொள்ள வேண்டாம். நியாயமானதைச் செய் என்று தான் கேட்கிறேன். நான் போய்விட்டால், எனக்காக நீ அவனுக்கு ஒத்தாசை செய்யவேண்டு மென்றுதான் நான் உன்

ளைக் கேட்டுக்கொள்ளுகிறேன், தெரியுமா?" என்று ஜெகில் நண்பனின் தோளின் மேல் கை வைத்துக் கொண்டு கெஞ்சினுர்.

அட்டர்ஸனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கடைசியாக, "ஆகட்டும்!" என்ருர். மன வருத்தத்தால் ஏற்பட்ட பெருமூச்சை அவரால் அடக்க முடியவில்லை.

## 4

# கொலை செய்தது யார்?

சுமார் ஒரு வருஷம் கழிந்தது. 18-ம் வருஷம் அக்டோபர் மாதம். லண்டனே திடுக்கிடும்படியாகக் கொடூரமான கொலை ஒன்று வெளியாயிற்று. அதற்கு முன்னால் அப்பேர்ப்பட்ட கொடிய வகையில் கொலையே நடந்ததில்லை. மேலும் கொலை செய்யப்பட்டவர் நல்ல அந்தஸ்துள்ள மனிதர்; ஆகையால் அது இன்னும் பிரபலமாயிற்று. கொலை சம்பந்தமான விவரங்கள் சிலவேயானாலும், கேட்டவர்களைத் திடுக்கிடச் செய்தன அவை—அவ்வளவு கோரமானவை.

ஆற்றங்கரைக்கு அருகே இருந்த ஒரு வீட்டில் ஒரு வேலைக்காரி தனியாக வசித்து வந்தாள். அன்றிரவு சுமார் பதினொரு மணிக்கு, படுத்துக்கொள்ள, அவள் மாடிக்குச் சென்றாள். விடியற்காலந்தான் மூடுபனி வந்து நகரத்தைச் சூழ்ந்து கொண்டதே தவிர, இரவில் முன் ஜாமங்கள் பூராவும் ஆகாயத்தில் மேகங்கூடக் கிடையாது. அவளுடைய படுக்கையறை ஜன்னல் ஒரு சந்தை நோக்கி யிருந்தது.

தெருவில் பௌர்ணமியின் நிலா பளிச்சென்று அடித்துக்கொண் டிருந்தது. அவள் மனோரஞ்சகமாகப் பகற் கனவு காணும் போக்குடையவள்போலிருக்கிறது. ஜன்னலடியி லிருந்த பெட்டியின் மேல் உட்கார்ந்து கொண்டு, ஏதோ கனவு காணும் யோசனையி லாழ்ந்துவிட்டாள். பின்னால், வாக்குமூலத்தில் அவள் கண்ணும் கண்ணீருமாகக் கூறியது இது. மனிதர்கள் நல்லவர்கள் என்றும், உலகம் ரொம்ப இனியது என்றும் அன்று மாதிரி ஒருபோதும், அவளுக்குப் பட்டதில்லையாம். அவள் அப்படி அங்கே உட்கார்ந்துகொண் டிருக்கும் பொழுது வெளேரென்று தலை நரைத்துப்போன ஒரு கிழவர் அச் சந்தின் வழியாகக் கிட்டவருவதைக் கண்டாள். வயதானவராயிருந்தாலும் ரொம்ப வசீகரமான தோற்றமுடையவராம். அவருக்கு எதிரே, சந்திக்கப் போவது போல, மற்றொரு மனிதன் வந்துகொண் டிருந்தான். ரொம்ப குட்டையான ஆசாமி. முதலில் அவனை அவள் அதிகமாகக் கவனிக்கவில்லை. ஒருவருக்கொருவர் பேசுவது போல அவ்வளவு கிட்டே வந்ததும், (அவளுடைய ஜன்னலுக்குக் கீழே, நேராக) கிழவர், மிகவும் மரியாதையாகத் தலை குனிந்து வந்தனம் செய்தார். எதிரே வந்தவனைப் பார்த்து ஏதோ கேட்டார். அவர் கேட்ட தகவல் அப்படி யொன்றும் முக்கியமானதாகத் தெரியவில்லை. அவர் செய்த ஜாடைகளிலிருந்து அவர் வழி கேட்டுக்கொண் டிருந்தாற்போல் இருந்தது.

பேசும் போது, நிலவு அவருடைய முகத்தில் நன்ருக விழுந்துகொண் டிருந்தது. அவருடைய முகத்தைக் கவனிப்பதில் அப் பெண்ணுக்கு ஒரு திருப்தி கூட ஏற்பட்டதாம். ஏனெனில் அதில் அவ்வளவு நல்ல சுபாவமும், பழைய காலத்துத் தயாளத் தன்மையும் தாண்டவமாடின; இன்னும் அதில் திருப்தியும் சுய நம்பிக்கையும் கூடக் கொஞ்சம் இருந்தது. அப்பொழுது அவளுடைய பார்வை இரண்டாம் மனிதன் மேல் விழுந்தது. உடனே அவனே அவள் அடையாளம் கண்டு கொண்டாள்; அவன் பெயர் ஹைட்; ஒரு தடவை, அவன், தன் யஜமானனைப் பார்க்க வந்திருக்கிருன்; அப்பொழுதே அவளுக்கு அவனிடம் ஒரு வெறுப்பு ஏற்பட்டது ஞாபகத்திற்கு வந்தது. அவன் தன் கையிலிருந்த கனமான பிரம்பை ஏதோ செய்துகொண்டிருந்தான். ஆனல் அவன் கிழவர் கேட்ட கேள்விக்கு, ஒரு வார்த்தை பதில் சொல்ல வேண்டுமே! வாய்திறக்கவில்லை. பொறுக்க முடியாத எரிச்சலுடன் அவன் அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தது போலத் தோன்றிற்று. இப்படி இருக்கும் பொழுதே, திடீரென்று அவனுக்கு ரௌத்திராகாரமான கோபம் வந்தது. காலால் பூமியை உதைத்துக்கொண்டு கைப் பிரம்பைச் சுழற்றினன்; பைத்தியக்காரன் போல (வேலைக்காரி சொன்னது) நடந்து கொண்டான். இந்த எதிர்பாராத செய்கையைக் கண்டு, கிழவர் ஆச்சரியமும் கொஞ்சம் கோபமும் அடைந்தார். ஒரு

அடி பின்வாங்கினர்; அதைக் கண்டதும் ஹைடின் கோபம் கட்டுக்கு மீறிப் போய்விட்டது. கிழவரைப் பிரம்பால் ஓங்கி அடித்துக் கீழே தள்ளினன். அடுத்த நிமிஷம் குரங்குத்தனமான கோபத்துடன் அவரைக் காலால் உதைத்து மிதித்து அடிகளைச் சரமாரியாய்ப் பொழிந்தான். எலும்புகள் நொருங்கின சத்தம் நன்ருய்க் காதில் பட்டது. ரோட்டில் கிடந்த உடம்பு பிரம்படிகளின் கீழ் எழும்பிக் குதித்தது. அந்தக் கோரக் காட்சியைக் கண்டும், சத்தத்தைக் கேட்டும் வேலைக்காரப் பெண் மூர்ச்சை கொண்டுவிட்டாள்.

அவளுக்குப் பிரக்ஞை வந்த பொழுது இரவு இரண்டு மணி; உடனே அவள் போலீஸுக்குச் சொல்லி யனுப்பினள். கொலை செய்தவன் போயே போய்விட்டான். கொலையுண்டவர் நடுத்தெருவில் நினைப்பதற்கே சகிக்க முடியாதவாறு சின்னபின்னமாக்கப்பட்டுக் கிடந்தார். கொலை செய்தவனின் கைப்பிரம்பு ஏதோ ஒரு கெட்டியான மரத்திலிருந்து தான் செய்யப்பட்டிருந்தது போலிருக்கிறது. அப்படி யிருந்தும், வெறி கொண்ட கொடுமையுடன் அவன் கிழவரை அடித்த அடியில், அது பாதியில் இரண்டாக ஒடிந்துபோய்விட்டது. ஒரு பாதி, பக்கத்துச் சாக்கடை ஒன்றில் உருண்டுபோய்க் கிடந்தது—மற்றென்றை அவன்தான் எடுத்துக்கொண்டு போயிருக்க வேண்டும். கொலை செய்யப்பட்டவரின் சட்டைப் பையில் ஒரு பணப் பையும் கடிகாரமும்

இருந்தன. வேறு விலாசக் கார்டோ, காகிதங்களோ ஒன்றும் காணப்படவில்லை. ஸ்டாம்பு ஒட்டி முத்திரை செய்யப்பட்ட ஒரு கவர்தான் இருந்தது; அது அட்டர்ஸனின் விலாசம் கொண்டிருந்தது. அதை அவர் தபால் பெட்டியில் போடத்தான் போனாரோ என்னமோ?

அட்டர்ஸன் மறுநாள் காலை படுக்கையைவிட்டு எழுந்திருப்பதற்கு முன், போலீஸார் காகிதத்தை அவரிடம் கொண்டுவந்து கொடுத்தார்கள். அதைப் பார்த்துவிட்டு, விவரங்கள் பூராவையும் கேட்டதும், அவர் உதட்டைப்பிதுக்கினார். "பிரேதத்தைப் பார்ப்பதற்கு முன் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. இது மிகவும் கோளாருக முடியலாம். நான் சட்டை போட்டுக்கொண்டு வருகிறேன், போகலாம்" என்று சொல்லி, காலைச் சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு, கவலைகொண்ட முகத்துடன், பிரேதம் இருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தார். உள்ளே சென்று சவத்தைப் பார்த்ததும் தலையை அசைத்தார்.

"ஆமாம், இவர் யாரென்று எனக்குத் தெரியும். இவர் ஸர் டான்வர்ஸ் கார்யூ. அடாடா!" என்ருர்.

"ஏன், ஐயா, அப்படி யிருக்கக்கூடுமா?" என்று போலீஸ் உத்தியோகஸ்தர் கேட்டார். அடுத்த நிமிஷம் அவர் கண்களில் ஒரு ஒளி தோன்றிற்று. "நல்ல கேஸ் அகப்பட்டது" என்று மனத்தில் நினைத்துக்கொண்டு, "அப்படி யிருந்தால் இது

ரொம்ப தடபுடல்படுமே. குற்றவாளியைக் கண்டு பிடிக்க நீங்கள் உதவி செய்வீர்களா, கொஞ்சம்?" என்று கூறி, ஆபீஸர், வேலைக்காரப் பெண் சொன்னதை யெல்லாம் சொல்லி, முறிந்த பிரம்பையும் காட்டினார்.

ஏற்கெனவே ஹைட் என்ற பெயரைக் கேட்ட போதே அட்டர்ஸன் நடுங்கிப் போனார். கைப் பிரம்பைப் பார்த்ததும் அவருடைய சந்தேகம் தீர்ந்து விட்டது. ஒடிந்து நொருங்கிப் போயிருந்தபோதிலும் அதை அவர் அடையாளம் கண்டுபிடித்துக் கொண்டார். பல வருஷங்களுக்கு முன், டாக்டர் ஜெகிலுக்கு அவர் பரிசாகக் கொடுத்த பிரம்பு அது!

"இந்த ஹைட் என்பவர் என்ன, குட்டையான மனிதரா?" என்று கேட்டார்.

"ரொம்பக் குட்டை யென்றும் பார்க்கிறதற்கே மகா கொடிய தோற்றம் உடையவன் என்றும் வேலைக்காரப் பெண் கூறுகிறாள்" என்று போலீஸ் உத்தியோகஸ்தர் கூறினார்.

அட்டர்ஸன் கொஞ்சம் யோசித்தார். பிறகு தலையை நிமிர்த்தி, "சரி, என்னுடன் வாருங்கள்; அவர் இருக்கிற இடத்திற்கு நான் உங்களைக் கூட்டிக்கொண்டு போகிறேன்" என்றார்.

அப்பொழுது காலை சுமார் ஒன்பது மணி. அந்தப் பருவத்தில் அன்றுதான் முதல்முதலாக மூடுபனி தோன்றியிருந்தது. ஆகாயத்திலிருந்து தொங்கும் ஒரு மகத்தான படுதாப்போலத்

தோன்றிற்று. ஆனால் அந்தப் பனித்திரளைக் காற்று இடைவிடாமல் தாக்கிக் கலைத்துக் கொண்டே இருந்தது. தெருத்தெருவாக அட்டர்ஸன் வண்டியில் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தார். சந்தியா காலத்தைப் போன்ற விசித்திரமான பலவித வர்ண விஸ்தாரங்கள் அவர் கண்களில் பட்டன. ஓரிடத்தில், மாலையின் முன்னிருட்டுப் போல இருள் மண்டியிருந்தது; மற்றோரிடத்தில் ஏதோ ஒரு பெரிய தீயைப்போல ஒளி பளிச்சென்று வீசிற்று; இன்னுமோர் இடத்தில் ஒரு நிமிஷம் காற்றால் உடைபட்டு மூடுபனி சிதறிக் கலைந்து போயிருக்கும்; சுருண்டு வளைந்து போகும் அந்த ஆவியின் இடைவெளிகள் வழியாகச் சோகைபிடித்த ஒளிக்கதிர்கள் நீண்டு பாயும். பாதைகளிலெல்லாம் சேறு; நடமாடும் ஜனங்கள் அலங்கோலமா யிருந்தார்கள்; பகலில் அப்பொழுது கூட அணைக்கப்படாமல் தெருவிளக்குகள் எரிந்துகொண் டிருந்தன. அல்லது இருளின் புதுப் படையெடுப்பைப் போன்ற மூடுபனிக்காக,மறுபடியும் காலையில் ஏற்றப்பட்டனவோ என்னமோ! இத்தகைய மாறுதல்களும் காட்சிகளும் கொண்ட அந்தப் பிரதேசம் ஏதோ ஒரு அமுக்குப் பிசாசின் கொடுமையின் கீழ்த் திணறுவது போல வக்கீலின் கண்களுக்குத் தென்பட்டது. மேலும் அவருடைய எண்ணங்களே சோகமயமா யிருந்தன. அப்பொழுது, அந்த மனநிலையில், அவர் பக்கத்திலிருந்த போலீஸ் உத்தியோகஸ்தரைப் பார்த்ததும் சட்ட

கெடுபிடிக்கு முன் ஏற்படும் திகில் அவர் மனத்தில் ஏற்பட்டது. ஒரு குற்றமும் செய்யாதவர்களுக்குக் கூட இந்த பயம் சில சமயங்களில் ஏற்படுவதுண்டு.

குறிப்பிட்ட விலாசத்திற்கு முன் வண்டி நின்றதற்கும் மூடுபனி கொஞ்சம் விலகியதற்கும் சரியாயிருந்தது. ஒரு சாராயக்கடை, ஒரு தாழ்ந்த பிரெஞ்சு ஹோட்டல், வாசற்படிகளில் முடங்கிக் கிடந்த அநாதைக் குழந்தைகள், காலை வேளையில் காபி குடிக்க வெளியேறிய அநேக தேசத்துப் பெண்கள்—இக் காட்சிகள் அத் தெரு நெடுகத் தென்பட்டன. மறு நிமிஷம் மூடுபனி இறங்கி, அந்தத் திராபையான காட்சிகள் பூராவும் மறைந்தன! அதுதான் டாக்டர் ஜெகில் அபிமானம் வைத்திருந்த ஹைடின் வீடு—அவருடைய இரண்டரை லக்ஷம் பவுன்களுக்கு வாரிசு அந்த ஹைட்!

ஒரு கிழவி வந்து கதவைத் திறந்தாள். அவள் முகம் தந்தம் போல வெளுத்திருந்தது; தலை மயிரும் நரைத்திருந்தது. அவள் முகத்தில் துஷ்டக் களை தாண்டவ மாடிற்று. ஆனால் வஞ்சனையால் அது கொஞ்சம் மறைந்து தெரிந்தது. அதனாலேயே அவள் நடந்து கொண்ட மாதிரியும் அப்பழுக்கில்லாமல்தான் இருந்தது. "ஆமாம்; இதுதான் ஹைடின் வீடு; ஆனால் இப்பொழுது வீட்டிலில்லை; நேற்றிரவு வெகு நேரம் கழித்துத்தான் வீட்டுக்கு வந்தார். வந்த ஒரு மணிக்கெல்லாம் திரும்பவும் எங்கோ வெளியே போய்விட்டார்; ஆனால் அதில் ஒன்றும்

விசேஷமில்லை. அவர் பழக்க வழக்கங்களில் ஒன்றும் நியதி நியமனமே கிடையாது, அநேகமாக வீட்டில் அதிகமாகத் தங்குகிறதேயில்லை. இரண்டு மாதங்களில் நேற்றுத் தான் நான் அவரைப் பார்த்தேன்'' என்று அவள் அட்டர்ஸன் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தாள்.

"சரி, நாங்கள் அவருடைய அறைகளைப் பார்க்க வேண்டும்'' என்றார் அட்டர்ஸன். அது முடியாதென்று கிழவி சொல்ல வந்தபொழுது, "இது யார் தெரியுமா? ஸ்காட்லண்டு யார்டு போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் நியூகாமென்!'' என்று அட்டர்ஸன் சொன்னதுதான் தாமதம்.

மகா அருவருப்பான ஒரு சந்தோஷக் குறி அவள் முகத்தில் தோன்றிற்று. "ஓகோ! அவர் ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டு விட்டாரா? என்ன செய்து விட்டார்?'' என்று கேட்டாள்.

அட்டர்ஸனும் இன்ஸ்பெக்டரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். "பேர்வழி மேல் வேலைக்காரிக்குக்கூட அதிகப் பிரியம் இல்லை போலிருக்கிறதே!'' என்றார் இன்ஸ்பெக்டர். பிறகு கிழவியைப் பார்த்து, "ஏம்மா, நாங்கள் இப்போது இந்த ஜாகையைக் கொஞ்சம் சுற்றிப் பார்க்கலாமா?'' என்று கேட்டார்.

அந்த வீட்டில் அவள் ஒருத்திதான் இருந்தாள்; அதில் இரண்டு அறைகள்தான் ஹைடின் புழக்கத்தில் இருந்தன. ஆனால் இந்த இரண்டும் மிகவும்

ஆடம்பரமான மேஜை நாற்காலி முதலியவைகளுடன் இருந்தன. அறை ஏற்பாடும் நாஸூக்காக இருந்தது. ஒரு அலமாரியில் சாராயச் சீஸாக்கள் இருந்தன. சாப்பிடும் தட்டு வெள்ளியினால் செய்யப்பட்டிருந்தது. சுவரில் அழகான படம் மாட்டியிருந்தது; படம் பொறுக்குவதில் பெயர் போன ஜெகில் தான் இதைக் கொடுத்திருக்க வேண்டுமென்று அட்டர்ஸன் எண்ணிக்கொண்டார். கீழே விரித்திருந்த கம்பளங்கள் விதவித ரகமாக மிகவும் அழகாகஇருந்தன. ஆனால், அப்பொழுது, யாரோ அந்த அறைகளில், அவசர அவசரமாகச் சற்று முன்புதான் சாமான்களைக் கையாண்ட அடையாளங்கள் இருந்தன; உடுப்புக்களெல்லாம் தரையில் குலைந்து கிடந்தன; அவைகளின் பைகளெல்லாம் வெளியே எடுக்கப்பட்டிருந்தன. பூட்டியிருக்க வேண்டிய டிராயர் (அறைகள்) எல்லாம் திறந்து கிடந்தன. அடுப்பில், ஒரு கத்தை காகிதத்தை எரித்த சாம்பல் கிடந்தது. அதில் எரிந்து போகாமல் நின்றுவிட்ட ஒரு பச்சைச் செக் புஸ்தகத்தின் அடியை இன்ஸ்பெக்டர் கண்டு பிடித்து எடுத்தார். கைப் பிரம்பின் மற்றொரு பாதி கதவுக்குப் பின்னால் கிடந்தது. இதைக் கண்டதும் இன்ஸ்பெக்டருக்குச் சந்தேகங்கள் தீர்ந்து விட்டன. வெகு சந்தோஷம் அவருக்கு. அந்தச் செக் புஸ்தகத்தின் அடியுடன் பாங்கிக்குச் சென்று விசாரித்தபொழுது, கொலையாளியின் கணக்கில் பல

ஆயிரங்கள் அதில் இருந்ததாகத் தெரிந்தது. இன்ஸ்பெக்டர் சந்தோஷத்திற்கு அளவே இல்லை.

"இனிமேல், நிச்சயம், ஐயா, அந்த ஆள் என் கையிலே அகப்பட்டுவிட்டான். அந்த ஆசாமிக்கு மூளை பேதித்துப் போய்விட்டதுபோல் இருக்கிறது. இல்லாவிட்டால் பிரம்பையும் செக் புஸ்தகத்தையும் வைத்துவிட்டுப் போயிருப்பானா? மனிதனுக்குப் பணம் தானே, ஐயா, பிரதானம்—உயிர்! நாம் ஒன்றும் இனிமேல் செய்யவேண்டியதே யில்லை. பாங்கி வாசலில் காத்துக்கொண்டிருக்க வேண்டியது தான்."

ஆனால் கடைசியாகச் சொன்ன சமாசாரம் அவ்வளவு சுளுவானதில்லை; ஏனென்றால் ஹைடை நேரில் பார்த்துப் பழகியவர்களே அதிகமாகக் கிடையாது. வாக்குமூலம் கொடுத்த பணிப்பெண்ணின் யஜமானரே அவனை இரண்டு தடவைதான் பார்த்திருக்கிறார். அவனுடைய பெயர் ஊர் யாருக்குமே தெரியாது. கண்டுபிடிக்கவும் முடியாது. அவனுடைய புகைப்படமும் கிடையாது. அவனை அறிந்த ஒரு சிலர் அவனுடைய அங்க அடையாளங்களைப் பற்றி வெவ்வேறு தினுசாக வர்ணித்தார்கள்; ஆனால் எல்லோரும் ஒரு விஷயத்தில் மட்டும் ஏகமனதாக இருந்தார்கள்! சொல்ல முடியாத ஏதோ ஒரு அங்கஹீனம்—உருக்குலைவு—அவனிடம் இருந்ததென்பதில் ஒருவரும் சந்தேகப்படவில்லை.

THE MADURA TAMIL SANGAM

## 5

# அது யார் கையெழுத்து?

சாயந்திரம் அட்டர்ஸன் டாக்டர் ஜெகில் வீட்டிற்குப்போனுர். பூல் அவரை உடனே வர வேற்று, சமையலறை, முற்றம், (முன்பு அது ஒரு தோட்டமாக இருந்தது)—இவைகளின் வழியாக டாக்டரின் ஆராய்ச்சிச்சாலைக்குக் கூட்டிக்கொண்டு போனுன். அந்த வீடு ஒரு பிரபல ரணவைத்திய ருடையது. அவருடைய வாரிசுகளிடமிருந்துதான் டாக்டர் ஜெகில் அதை வாங்கினுர். ஜெகிலுக்கு உடற்கூறு சாஸ்திரத்தைக் காட்டிலும் ரஸாயன சாஸ்திரத்தில்தான் அதிகப் பிடித்தமும் ஊக்கமும்; ஆகையால் தோட்டத்தின் ஓரத்திலிருந்த அந்த இடத்தை ரஸாயன சாலையாக மாற்றிவிட்டார். தன் சிநேகிதனின் வீட்டில் அந்தப் பக்கமே அட்டர் ஸன் அன்று தான் முதல் முதல் போனது. அங்கே ஒரு ஜன்னல்கூடக் கிடையாது; ஒரே இருட்டாக இருந்தது. அந்த இடத்தில் ஒரு காலத்தில் வைத் திய மாணவர்கள் கூட்டங் கூட்டமாகக்கூடி ஆராய்ச் சிகள் நடத்தினுர்கள்; அங்கே இன்று நிசப்தம்

நிறைந்திருந்தது. எங்கே பார்த்தாலும் ரஸாயன சாஸ்திரக் கருவிகள் நிறைந்த மேஜைகளும், சீசாக்கள் நிறைந்த பெட்டிகளும் கிடந்தன. தரையில் பார்சல் செய்யும் வைக்கோல் சிதறிக் கிடந்தது. மச்சுத் தாழ்வாரத்து வளைவின் வழியாக லேசாக வெளிச்சம் அடித்தது. எதிர்ப்புற ஓரத்தில் மாடிப்படி; அதன் உச்சியில் சிவப்புக் கம்பளியால் அலங்கரிக்கப்பட்ட நிலைக் கதவு; அதன் வழியாக, பூல், அட்டர்ஸனை டாக்டரின் அந்தரங்க அறைக்கு அழைத்துச் சென்றான்.

அது விசாலமாயிருந்தது. சுற்றும் கண்ணாடி அலமாரிகள்; நடுவில் ஒரு பெரிய மேஜையும் நிலைக்கண்ணாடியும் இருந்தன. முற்றத்தின் பக்கம் அதற்கு இரும்புக் கம்பி போட்ட மூன்று ஜன்னல்கள். அட்டர்ஸன் உள்ளே போனபொழுது, கணப்பு நன்றாக எரிந்துகொண்டிருந்தது. வீட்டிற்குள்ளே கூட மூடுபனி நெருக்கமாகப் புகைபோல் சூழ்ந்திருந்தபடியால், புகைப்போக்கியின் மேல்தட்டில் விளக்கொன்று ஏற்றி வைத்திருந்தது. கணப்பிற்கருகே, டாக்டர் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருந்தார். கொடிய நோயால் வருந்துபவர் போல அவர் முகம் பிரேதக் களை கொண்டிருந்தது. வந்தவரை வரவேற்பதற்குக்கூட அவர் எழுந்து முன்வரவில்லை. உட்கார்ந்தபடியே, மனமில்லாதவர் போல, கையை நீட்டி வரவேற்றார். அவருடைய குரலே மாறிப் போயிருந்தது.

பூல் வெளியே போனவுடன் அட்டர்ஸன் "சமாசாரம் உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

டாக்டர் உலுக்கி விழுந்தார். "தெரியும். பத்திரிகைச் சிறுவர்கள் தெருவில் கத்திக்கொண்டு போனார்கள். உள்ளே நன்றாகக் கேட்டது எனக்கு!" என்றார்.

"ஒரு வார்த்தை சொல்லுகிறேன், ஜெகில்! கார்யூ என் கட்சிகாரன்தான்; ஆனால் நீயும் என் கட்சிக்காரன். ஆகையால், நீ இந்த விஷயத்தில் சம்பந்தப்பட்டிருப்பதால், நான் மேலே செய்யப் போவதை உன்னுடன் கலந்து ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. பைத்தியக்காரத்தனமாக நீ அவனை ஒளித்துக் கிளித்து வைக்கவில்லையே?"

"அட்டர்ஸன், நான் சத்தியமாகச் சொல்லுகிறேன். நான் இனிமேல் அவன் முகத்தில் விழிக்கிறதில்லை யென்று கடவுள் சாட்சியாகச் சொல்லுகிறேன். இனிமேல், இந்த ஜன்மத்திலே, நான் அவனோடு யாதொரு சம்பந்தமும் வைத்துக்கொள்ளவில்லை என்று உனக்கு நான் பிரமாணம் வேண்டுமானாலும் செய்து கொடுக்கிறேன், அட்டர்ஸன்! அந்தக் கதை முடிந்து போய்விட்டது. இனிமேல் அவனுக்கு என் உதவி தேவையேயில்லை. அவனைப் பற்றி எனக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவு உனக்குத் தெரியாது. அவனுக்கு இனிமேல் ஒரு ஆபத்தும் கிடையாது—ஒன்றுமே கிடையாது. அவன்

பத்திரமா யிருக்கிறான். நான் சொல்லுகிறது தெரிந்ததோ? இனிமேல் அவனைப்பற்றி ஒரு தகவலும் கிடைக்காது" என்று டாக்டர் ஜெகில் ஆவேசம் கொண்டவர் போல் உரக்கக் கத்திப் பேசினார்.

ஜெகில் சொன்னதை வக்கீல் விசனத்துடனும் கவலையுடனும் கேட்டுக்கொண்டிருந்தார். ஜெகில் ஜுர வேகத்தில் பேசுகிறவர் போல நடந்து கொண்டது அவர் மனத்திற்குப் பிடிக்கவேயில்லை. "அவனைப்பற்றி என்னமோ நீ இவ்வளவு நிச்சயமாகச் சொல்லுகிறாய். உன் நலத்தை உத்தேசித்து நீ சொல்லுகிறது எல்லாம் சரியாயிருக்கட்டுமே. அதுதான் என் பிரார்த்தனையும். இந்த விஷயம் விசாரணைக்கு வந்தால் உன் பெயரும் இழுபடும், தெரியுமா?" என்றார் அட்டர்ஸன்.

"அவனைப்பற்றி எனக்கு ரொம்ப நிச்சயம். அதற்கு அநேக காரணங்கள் இருந்தாலும், அவைகளை நான் வேறொருவரிடத்தில் சொல்வதற்கில்லை. ஆனால் ஒரு விஷயத்தில் நீ எனக்கு யோசனை கூறலாம். எனக்கு அவனிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது; அதைப் போலீஸாரிடம் கொடுக்கிறதா வேண்டாமா என்று யோசிக்கிறேன்—எனக்கு ஒன்றும் தெரியவில்லை. 'அதை உன் கையில் ஒப்படைத்துவிட்டால் தேவலை என்று பார்க்கிறேன், அட்டர்ஸன்! நீ நிச்சயம் அதைப் பற்றிச் சரியான யோசனை சொல்லுவாய்—உன்னிடத்தில் எனக்கு அவ்வளவு நம்பிக்கை இருக்கிறது."

"அதிலிருந்து போலீஸார் அவனைக் கண்டு பிடித்து விடலாமென்று பயப்படுகிறாயோ?" என்று அட்டர்ஸன் கேட்டார்.

"இல்லை, அவன் கதி என்ன ஆகிறது என்பதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. அவனோடு எனக்கு இனிமேல் சம்பந்தமே கிடையாது. இந்தக் கோரமான சமாசாரத்தில் என் பெயர் வெளியில் இழுபடுகிறதைப் பற்றித்தான் நான் கவலைப்படுகிறேன்" என்றார் ஜெகில்.

அட்டர்ஸன் கொஞ்ச நேரம் ஆழ்ந்து யோசித்தார். தம் நண்பன் அவ்வளவு சுயநலம் கருதுகிறவராக இருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தார்; ஆனால், அதனாலேயே சந்தோஷமும் நிம்மதியும்கூட அடைந்தார். கடைசியில், "எங்கே, அந்தக் கடிதத்தைப் பார்ப்போம்!" என்றார்.

கடிதம் ஒரு விசித்திரமான நேரெழுத்து லிபியில் எழுதி, "எட்வர்ட் ஹைட்" என்று கையெழுத்திடப்பட்டிருந்தது. எவ்வளவோ உதவிகள் தனக்குச் செய்த டாக்டர் ஜெகிலுக்கு, தான், பதிலாக, அற்பத்தனமான வகையிலேயே நடந்துகொண்டு வந்ததாயும், ஜெகில் தன்னுடைய பந்தோபஸ்து விஷயமாக ஒருவிதமான கவலையும் படவேண்டியதில்லை யென்றும், தனக்குத் தப்பித்துக் கொள்வதற்கு ஒரு நிச்சயமான வழி இருக்கிறதென்றும் ஹைட் அதில் கூறியிருந்தான். வக்கீலுக்கு இந்தக் கடிதம் மிகவும் பிடித்தமாயிருந்தது. "போகிறது,

இந்த மட்டிலாவது ஜெகிலிடம் மரியாதையும் நன்றியும் காட்டியிருக்கிறுனே! நான் முன் எண்ணினபடி, ஜெகிலே இவன் துன்புறுத்திப் பணம் வாங்கவில்லையென்பது தெரிகிறது" என்று நினைத்தார்.

"கடிதத்தின் கவர் எங்கே?" என்று கேட்டார்.

"அதை எரித்த பிறகுதான் நான் என்ன காரியம் செய்துவிட்டேன் என்று எனக்குத் தெரிந்தது. ஆனல், அதில் தபால் முத்திரை இல்லை; அதை நேராக இங்கே வேறு யாரோ ஆள் கொண்டு வந்து கொடுத்தான்."

"நான் இதைக் கையில் எடுத்துக் கொண்டு போய் ராத்திரி யோசிக்கிறேன்" என்ருர் அட்டர்ஸன்.

"அட்டர்ஸன்! எனக்காக நீதான் பூரா யோசனையையும் செய்தாக வேண்டும். இப்பொழுது எனக்கு யோசிக்கும் சக்தியே போய்விட்டது; என்னிடத்தில் எனக்கே நம்பிக்கையில்லை" என்று ஜெகில் பதில் சொன்னுர்.

"நல்லது, யோசிக்கிறேன். ஒரே ஒரு வார்த்தை. நீ மறைந்து விடுவதைப்பற்றி உன் உயிலில் கண்ட ஷரத்தை ஹைட்தானே சேர்க்கச் சொன்னது?"

டாக்டர் ஜெகில் மூர்ச்சைபோட்டு விழுந்து விடுபவர்போலத் திணறினுர்; ஆனல் வாயைத் திறக்கவில்லை; தலையை மட்டும் அசைத்தார்.

"எனக்குத் தெரியுமே! அவன் உன்னைக் கொலை செய்ய எண்ணினுன். நீ நல்ல வேளையாய்த்

தப்பித்துக் கொண்டாய்!" என்று அட்டர்ஸன் கூறினர்.

"அது கிடக்கிறது. அப்பா! எனக்குப் புத்தி வந்தது! கடவுளே, நல்ல புத்தி வந்தது! அட்டர்ஸன், இந்த ஜன்மத்திற்குப் போதும்!" என்று டாக்டர் ஜெகில் விசனத்துடன் கூறினர். துக்க மேலீட்டால், ஒரு நிமிஷம் கைகளால் தம் முகத்தை மூடிக் கொண்டார்.

வெளியே போகிற பொழுது, வழியில், வக்கீல் பூலுடன் சில வார்த்தைகள் பேசினர். "ஆமாம், பூல், இன்று யாரோ ஒரு கடிதம் கொண்டு வந்து கொடுத்தானமே, அவன் ஆசாமி எப்படியிருந்தான்?" என்று கேட்டார். "தபால்மூலமாக வந்தது தவிர, வேறெந்த வழியிலும் கடிதங்களே இன்று வரவில்லை, ஸார். தபாலில் வந்தவைகளும் வெறும் அறிக்கைகள் தான், கடிதங்கள் கிடையாது, ஸார்!" என்று பூல் நிச்சயமாகக் கூறினன்.

இதைக் கேட்டதும் வக்கீலின் கவலை மறுபடியும் அதிகமாயிற்று. கடிதம் ஆராய்ச்சிச்சாலை (ரஸாயனசாலை)க் கதவு மூலமாகத்தான் ஹைடால் நேரில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஒரு வேளை அதே அறையிலேயே எழுதப்பட்டும் இருக்கலாம்! அப்படியானல் அக்கடிதத்தைப்பற்றி வேறு தினுசாக வல்லவோ முடிவு செய்யவேண்டும்? இன்னும் கொஞ்சம் யோசனை

தான் செய்யவேண்டும்; மேல் நடவடிக்கையையும் மிகவும் ஜாக்கிரதையாகத்தான் நடத்தவேண்டும்.

"விசேஷப் பதிப்பு! பார்லிமென்ட் அங்கத்தினரின் கோரமான கொலை!" என்று போகும் வழியில் பத்திரிகைப் பையன்கள் தொண்டையைக் கிழித்துக்கொண் டிருந்தார்கள். தமக்கு வேண்டியவர்களில்,ஒரு கட்சிக்காரனின் கதி அப்படியாயிற்று; மற்றொரு கட்சிக்காரனின் பெயர் இந்தக் கொலை சம்பந்தமான வம்பில் அடிபட்டு அடியோடு கெட்டுப் போகுமோ என்று அட்டர்ஸன் கவலைப்படாமல் இருக்க முடியவில்லை. அந்த விஷயத்தில் ஒரு தீர்மானத்திற்கு வருவதே அவருக்கு மிகவும் கஷ்டமாகி விட்டது. சுபாவமாகவே அட்டர்ஸன் ரொம்பத் தன்னம்பிக்கையுடையவர்; அப்படி யிருந்தும், யாருடைய யோசனையையாவது கேட்டால் தேவலை என்று அப்பொழுது அவருக்குத் தோன்றிற்று. உடனே யாரிடமும் கேட்க முடியாது; ஆனால் கொஞ்சம் வலை வீசிப் பார்க்கலாம் என்று எண்ணினர்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அட்டர்ஸன் தம் வீட்டில் கணப்பண்டை, ஒரு பக்கத்தில், நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். எதிரே அவருடைய தலைமைக் குமாஸ்தா கெஸ்ட் உட்கார்ந்திருந்தார். நடுவிலே, கணப்பிற்கு அருகாமையில், ரொம்ப நாள் அவர் வீட்டில் பூமிக்கு அடியில் புதைக்கப்பட்டிருந்த ஒரு பழைய ஒயின் சீசா இருந்தது.

நகரம் மூடுபனியில் மூழ்கிக் கிடந்தது. அதன்

மேல் மூடு பனி ஒரு சிறகு விரித்த பறவைபோல் தூங்கிற்று. நகரத்து விளக்குகள் சிவப்பு ரத்தினங்கள் போல் தென்பட்டன. அந்தப் பனித் திரையின் முகமறைவிலும் திணறலிலும் கூட, நகரத்து நடமாட்டம் ஓயவில்லை; அதன் பெரிய ரத்தக் குழாய்கள் போன்ற தெருக்கள் மூலம், ஜீவதாரையாக ஓடிக்கொண்டிருந்தது. ஆனால், உள்ளே அட்டர்ஸன் உட்கார்ந்திருந்த அறை தீயொளியில் தேட்டம் கொண்டிருந்தது. சீசாவிலிருந்த திராக்ஷை ரஸத்தின் புளிப்பு, ரொம்ப நாளாகப் பூமிக்கு அடியில் இருந்ததால் குறைந்து வந்துவிட்டது. ரஸத்தின் ரத்தச் சிவப்பு காலப்போக்கில் மாறி மங்கி மிருதுவாகி இருந்தது—காலம் ஆக ஆகக் கண்ணாடிக் கதவுகளில் வர்ணம் ஏறுவதுபோல. தென் ஐரோப்பியக் குன்றுகளின் திராக்ஷைத் தோட்டங்களில், இலையுதிர் காலத்துப் பிற்பகலில் உண்டான பூரிப்பு, விடுதலையுற்று வெளியேறி, லண்டனின் மூடுபனியை முறியடிக்க முயன்றதுபோல், சீசாவில் ததும்பிற்று. தம்மையும் மறந்து வக்கீல் சரளமானார். கெஸ்டைப் போல் அவருக்கு அந்தரங்கமான மனுஷ்யன் வேறு யாருமே கிடையாது. தாம் நினைத்ததற்கு மேல்கூடச் சில சமயங்களில் அவரிடம் ரகசியங்களைத் தெரிவித்திருக்கிறார். கெஸ்ட் விவகார விஷயமாக அடிக்கடி டாக்டர் ஜெகில் வீட்டிற்குப் போய் வருவதுண்டு. பூலே அவருக்கு நன்றாய்த் தெரியும்; ஹைடுக்கு அந்த வீட்டிலிருந்த மிதமிஞ்சிய செல்வாக்கைப்

பற்றியும் அவர் கேள்விப்பட்டிருக்க வேண்டும். அவரும் விஷயங்களைப்பற்றி ஏதாவதொரு முடிவுக்கு வந்திருக்கக் கூடுமல்லவா? அவர் இந்தக் கடிதத்தைப் பார்த்தால் ஏதாவது உபயோக மேற்படாதா? மேலும் கையெழுத்துப் பரிசோதனையில் கெஸ்ட் ஒரு நிபுணர். இந்தக் கடிதத்தைப்பற்றி அட்டர்ஸன் அவரைக் கேட்பது சகஜமென்றும், உதவி என்றும் தான் அவர் கருதுவார். கெஸ்ட் நல்ல யோசனை கூறக்கூடிய மனுஷ்யனும்கூட. இப்பேர்ப்பட்ட விசித்திரமான கடிதத்தைப் படித்துவிட்டு ஏதாவது சொல்லாமல் இருக்கமாட்டார். அவர் சொல்வதை வைத்துக்கொண்டு அட்டர்ஸன் மேலே நடக்க வேண்டியதை யோசிக்கலாமல்லவா?

"ஸர் டான்வர்ஸ் சம்பவம் ரொம்ப விசனிக்கத் தக்கது, அல்லவா?" என்று ஆரம்பித்தார் அட்டர்ஸன்.

"ஆமாம், ஸார். ரொம்ப வாஸ்தவம். பொதுமக்களிடையே ஒரு பெரிய கிளர்ச்சியை உண்டாக்கி விட்டது. கொலை செய்தவன் பைத்தியம் பிடித்தவன் என்பதில் சந்தேகமில்லை" என்றார் கெஸ்ட்.

"அதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? இதோ, என்னிடம் அவன் எழுதிய கடிதம் ஒன்றிருக்கிறது. இது நமக்குள் இருக்கவேண்டிய விஷயம். இதை என்ன செய்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. ரொம்ப மோசமான சம்பவம்தான். என்

கையில் கிடைத்திருக்கிறது. நீ பார்க்க வேண்டியது கூடத்தான். கொலை செய்தவனின் கையெழுத்து!"

கெஸ்டின் கண்கள் பிரகாசம் அடைந்தன. உடனே அதைக் கவனமாகப் படித்து ஆராய்ந்தார். "இல்லை, ஸார், பைத்தியம் இல்லை. ஆனால், ரொம்ப விசித்திரமான கையெழுத்தா யிருக்கிறது" என்றார்.

"எழுதினவனும் கூட ஒரு விநோதமான மனுஷ்யன் என்றுதான் எல்லோரும் சொல்லு கிறார்கள்" என்றார் அட்டர்ஸன்.

அப்பொழுது வேலைக்காரன் ஒரு கடிதம் கொண்டுவந்தான்.

"அது டாக்டர் ஜெகிலிடமிருந்தா வந்திருக் கிறது? எழுத்து எனக்குத் தெரிந்ததுபோலிருக் கிறதே! ஏதாவது அந்தரங்க விஷயமோ?" என்று கெஸ்ட் கேட்டார்.

"சாப்பிடக் கூப்பிட்டிருக்கிறார், அவ்வளவு தான். ஏன், நீங்கள் அதைப் பார்க்கவேண்டுமா?"

"ஒரு நிமிஷம், ஸார்."

குமாஸ்தா இரண்டு கடிதங்களையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு கவனமாக ஒத்துப்பார்த்தார். இரண்டு கடிதங்களையும் அட்டர்ஸனிடம் திருப்பிக் கொடுத்துக்கொண்டே, "போதும் ஸார். இது மிகவும் ஸ்வாரஸ்யமான கையெழுத்து!" என்றார்.

அட்டர்ஸன் ஒன்றும் சொல்லாமல் சற்று நேரம் தம்முள் ஏற்பட்ட குழப்பத்தைச் சமாளித் தார். "அவை யிரண்டையும் ஏன் ஒத்துப் பார்த்தீர்

கள், கெஸ்ட்?" என்று திடீரெனக் கேட்டார்.

"இரண்டு கையெழுத்துக்களுக்கும் விசேஷமான ஒற்றுமை இருக்கிறது. அநேக விஷயங்களில் இரண்டும் ஒரே தினுசு, எழுத்துச் சாய்வுதான் வேறு மாதிரி."

"அப்படியா! ரொம்ப விசித்திரம்! இல்லை?"

"நீங்கள் சொல்வதுபோல, கொஞ்சம் விசித்திரம்தான்!"

"இந்தக் கடிதம் வெளிக்குத் தெரிய வேண்டாம்—என்ன?"

"அப்படியே ஆகட்டும்!"

கெஸ்ட் போனதும், அட்டர்ஸன் அன்றிரவு அந்தக் கடிதத்தைத் தம் இரும்புப்பெட்டியில் வைத்துப் பூட்டினர். அன்று முதல் அது அங்கேயே இருந்துவிட்டது. "என்ன! ஹென்ரி ஜெகில், ஒரு கொலைகாரப் பயலுக்காக, 'போர்ஜெரி' செய்கிறார!"

அவர் அதை நினைத்து நடுநடுங்கினர்.

# 6

# டாக்டர் லான்யனுக்கு விபரீதம்

**நா**ட்கள் பறந்தன. ஸர் டான்வர்ஸின் கொலை பொது ஜனங்களுக்கு ஏற்பட்ட ஒரு விபத்து என்றே கருதப்பட்டதால், குற்றவாளியைக் கண்டு பிடிப்பவர்களுக்கு ஆயிரக்கணக்கான பவுன்கள் இனம் கொடுப்பதாக விளம்பரம் செய்யப்பட்டது. ஆனல் ஹைட் என்ற ஒரு ஆளே கிடையாது— இருந்ததேயில்லை, என்று சொல்லும்படியாக அவன் போலீஸ் பார்வையிலிருந்து முற்றிலும் மறைந்து போய்விட்டான். அவனுடைய பூர்வ சரிதையைப் பற்றி யெல்லாம் கேவலமான அநேகம் தகவல்கள் கிடைத்தன. அவனுடைய குரூரத்தன்மையைப் பற்றியும், கொடூரமான ஈவு இறக்கமற்ற செய்கைகளைப்பற்றியும், அவனுடைய கீழ்த்தரமான வாழ்க்கையைப்பற்றியும், விசித்திரக் கூட்டாளிகளைப்பற்றியும், அவனிடம் எல்லோருக்கும் இருந்த வெறுப்பைப்பற்றியும் பல கதைகள் திரிக்கப்பட்டன; ஆனல் அவன் தற்காலம் எங்கிருக்கிருன் என்பதைப் பற்றிமட்டும் மூச்சுப் பேச்சுக் கிடையாது. கொலை

நடந்த அன்று இரவு, ஸோஹோவிலிருந்த தன் வீட்டைவிட்டு அவன் வெளியேறினதுதான்; அதற்கப்புறம் அவன்—சுத்தமாக இல்லவே இல்லை! காலம் செல்லச் செல்ல, கொஞ்சம் கொஞ்சமாக, அட்டர்ஸனின் பயமும் திகைப்பும் குறைந்தன; மனது சமாதானமாவதற்குக் காலம் பிடித்தது. ஹைட் தொலைந்தான் என்ற காரணத்தால் ஸர் டான்வர்ஸின் மரணம்கூடப் பாதகமில்லைப்போல அவருக்குத் தோன்றிற்று.

எப்படியோ ஜெகிலின்மேல் அந்தத் துஷ்டன் கொண்டிருந்த அதிகாரம் ஒழிந்ததும், அவர் புனர் ஜன்மமே எடுத்தவர்போல ஆனார். தனியாக அறையிலேயே இருந்தவர், வெளியில் வந்து பழைய நண்பர்களுடன் மறுபடியும் நெருங்கிப் பழகலானார்; மறுபடியும், பழையபடி, அவர்களுக்கு விருந்துகள் நடத்த ஆரம்பித்தார். தான தர்மங்கள் செய்வதில் எப்பொழுதுமே பெயர் போனவர்; இப்பொழுது மத விஷயங்களிலும் பக்தி சிரத்தை காட்டி அதே பெயர் வாங்கத் தொடங்கினார். சதா ஏதாவது செய்துகொண்டிருந்தார். ஆகையால் அடிக்கடி வெளியே போய்க்கொண்டே இருந்தார். பல நன்மைகள் செய்தார். அவர் முகமே மறுபடியும் விரிந்து மலர்ந்ததுபோல் இருந்தது. நல்லது செய்கிறோமென்ற எண்ணத்தாலே அவர் பூரித்தார். இப்படி இரண்டு மாதங்களுக்கு மேலாகவே டாக்டர் அமைதியுடன் இருந்தார்.

ஜனவரி எட்டாம் தேதி டாக்டர் ஜெகில் ஒரு சின்ன விருந்து நடத்தினர். அட்டர்ஸன் அதற்குப் போயிருந்தார். டாக்டர் லான்யனும் பிரசன்னமா யிருந்தார். மூவரும் இணைபிரியாத நண்பர்களாக இருந்த பழைய காலத்து நினைப்புடன், டாக்டர் ஜெகில் நண்பர்களை மாறி மாறிப் பார்த்து அக மகிழ்ந்தார். பன்னிரண்டாம் தேதி, பதிநான்காம் தேதி, அட்டர்ஸன் ஜெகில் வீட்டிற்குப் போன பொழுது உள்ளே போக முடியவில்லை! "டாக்டர் வீட்டிற்குள்ளேயே இருக்கிறார், யாரையும் பார்க்கிற தில்லை" என்றான் பூல். பதினைந்தாம் தேதி மறுபடியும் அட்டர்ஸன் டாக்டர் ஜெகிலைப் பார்க்க முயன்றார். பலிக்கவில்லை. சென்ற இரண்டு மாதங் களில் அனேகமாக ஒவ்வொரு நாளும் தம் நண்பனைப் பார்த்துப் பேசி வாடிக்கையாகி விட்டதால், அது திடீரென்று நின்று தனிமை ஏற்பட்டதும், அவர் மனத்திற்கு என்னவோ போலி ருந்தது. ஐந்தாம் நாள் இரவு கெஸ்டைத் தம்முடன் கூடச் சாப்பிட அழைத்தார். ஆறும் நாள் தாமே, டாக்டர் லான்யன் வீட்டிற்குப் போனர்.

அங்கு அவரை டாக்டர் தாராளமாக வரவேற் றார். ஆனல் உள்ளே போய் டாக்டர் லான்யனின் உடல் நிலையைக் கண்டதும், அவர் திடுக்கிட்டுப் போய் விட்டார். டாக்டரின் மாறின தோற்றம் அவரைத் தூக்கி வாரிப் போட்டு விட்டது. சாவு அவர் முகத்தில் எழுதி ஒட்டப்பட்டிருந்தது.

தள தளப்பான அவருடைய முகம் வெளேரென்றிருந்தது; ரொம்ப இளைத்துப் போயிருந்தார். வயதானவர் போலவும் வழுக்கை விழுந்தவராகவும் காணப்பட்டார். சரீர மாறுபாட்டின் இந்தச் சின்னங்கள் கூட வக்கீலுக்கு அவ்வளவு பிரமாதமாகப் படவில்லை. டாக்டரின் பிரமை கொண்ட பார்வையும், நடமாட்டத் தடுமாற்றமுந்தான் அவருக்கு ஆச்சரியமா யிருந்தன. அவர் சித்தப் பிரமை—ஆழ்ந்த மனோபீதி—கொண்டவர் போலத் தோன்றினர். டாக்டர் சாவுக்குப் பயப்படுகிறவர் அல்ல. ஆனல் அட்டர்ஸனுக்கு அது தான் காரணமோ என்று தோன்றிற்று. "ஆமாம். அவர் டாக்டர் அல்லவா? தம் நிலைமை அவருக்குக் கட்டாயம் விளங்கியிருக்கும்; சாவு நெருங்கிவிட்டது என்ற நிச்சயம்தான் அவரை இப்படி வாட்டுகிறது போலும்!" என்று நினைத்தார். ஆனல் அட்டர்ஸன் அவருடைய உடம்பு நிலையைப்பற்றிப் பிரஸ்தாபித்தபொழுது, டாக்டர் லான்யன் தாம் விரைவில் சாவது நிச்சயம் என்று மிகவும் தைரியமாகவே கூறினர்.

"என் மனது அதிர்ச்சி யடைந்து விட்டது. நான் இனிமேல் பிழைக்கமாட்டேன். நாள் கணக்குத்தான்! வாழ்க்கை ரஸமானதுதான், அட்டர்ஸன்! அதை நான் அநுபவித்தேன்—ஆமாம், அதை நான் அநுபவித்ததுண்டு; நாம் வாழ்க்கை முழுவதையும் அறிந்துவிட்டால், சுலபமாக இவ்

வுலகத்தை விட்டுச் செல்லலாமென்று சில சமயங்களில் எண்ணியதுண்டு."

"ஜெகிலுக்குக்கூட உடம்பு சரியாயில்லையாம். நீ அவனைப் பார்த்தாயோ?" என்று அட்டர்ஸன் கேட்டார்.

உடனே டாக்டர் லான்யனின் முகம் மாறிற்று. தம் நடுங்கும் கையை அமர்த்திக்கொண்டே, "டாக்டர் ஜெகிலைப் பார்க்கவோ, அவனைப் பற்றிக் கேட்கவோ, எனக்கு இனிமேல் விருப்பமில்லை. அவனுடன் இனிமேல் எனக்குச் சம்பந்தமே கிடையாது. என் சம்பந்தப்பட்டமட்டில் அவன் இறந்துபோய் விட்டான். ஆகையால் தயவு செய்து அவனைப் பற்றி என்னிடம் பேச்சே எடுக்க வேண்டாம்!" என்று உரக்கக் கூறினர். அவர் குரலே தடுமாற்றம் கொண்டிருந்தது.

"சே, சே!" என்றார் அட்டர்ஸன். சிறிது நேரம் மௌனமா யிருந்துவிட்டுப் பிறகு, "நான் ஏதாவது செய்யமுடியாதா? லான்யன், நாம் மூவரும் பழைய நண்பர்களாயிற்றே—இனிமேல் நம்மால் புது சிநேகிதங்கள் செய்துகொள்ள முடியுமா?" என்றார்.

"இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது. அவனையே கேளு!" என்றார் லான்யன்.

"அவன் என்னைப் பார்க்கவே மாட்டேன் என்கிறானே!"

"அதில் எனக்கு ஒன்றும் ஆச்சரியமில்லை. நான் இறந்த பிறகு, எப்பொழுதாவது, உண்மை

உனக்குத் தெரியவரலாம். நான் அதை உன்னிடம் சொல்ல முடியாது. அதுவரையில், நீ என்னுடன் உட்கார்ந்து, வேறு ஏதாவது விஷயங்களைப் பற்றிப் பேசுவாயானல் சரி; இல்லை, உன்னல் அதைப் பற்றிப் பேசாமலிருக்க முடியாதென்ருல், தயவு செய்து வெளியே போய்விடு; என்னல் தாங்கவே முடியாது."

வீட்டிற்குப் போனதும், அட்டர்ஸன் ஜெகிலுக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில் ஜெகில் தம்மை உள்ளே விடாமலிருப்பதைப் பற்றிப் புகார் செய்தும், லான்யனுடன் ஏன் இந்த மனஸ்தாபம் ஏற்பட்டது என்பதைக் கேட்டும் எழுதினர். மறு நாள் ஒரு நீண்ட பதில் வந்தது. கடிதம் சில இடங்களில் பரிதாபகரமாகவே இருந்தது; சில இடங்களில் கடிதப் போக்கு, ஏதோ வொன்றை மறைக்கும் தொனி கொண்டிருந்தது. லான்யனுடன் ஏற்பட்ட பிரிவினைக்கு விமோசனம் இல்லை. "நம்முடைய நண்பன் மேல் ஒரு பிசகும் இல்லை. ஆனல் நாங்கள் இருவரும் இனிமேல் சந்திக்கக் கூடாது என்று அவன் சொல்வது மிகவும் சரி. நான் இனிமேல் எப்பொழுதும் தனிமையிலேயே வாழ நிச்சயித்துவிட்டேன். நான் உன்னைக்கூட உள்ளே விடாவிட்டால், நீ ஆச்சரியமோ வருத்தமோ கொள்ளக்கூடாது; அல்லது என் சிநேக பாவத்தில் சந்தேகம் கொள்ளக் கூடாது. நான் பாட்டிற்கு இனிமேல் தனியாகத் திக்குத் தெரியாமல் போக வேண்டியது தான் நீ ஒன்றும் தலையிடக்

கூடாது. சொல்ல இயலாத ஒரு தண்டனையையும் ஆபத்தையும் என் தலைக்கு நானே கொண்டுவந்து விட்டேன். நான் மகா பாதகனாயிருக்கலாம்; ஆனால் அதனால் மகா பாதகமான நரக வேதனைக்கும் உள்ளாகியிருக்கிறேன். மனிதத்தன்மையின் தைரி யத்தையே குலைக்கும் இப்பேர்ப்பட்ட பீதிகளும் பூமியில் இருக்குமென்றே நான் நினைக்கவில்லை. அட்டர்ஸன்! என் தனிமையை நீ கெடுக்காமல் இருந்தால், நீ என் கஷ்டத்தைக் கொஞ்சம் குறைக்கலாம்.''

அட்டர்ஸன் ஆச்சரியமடைந்தார். ஹைடுக்கு ஜெகிலின் மேல் இருந்த பயங்கரமான ஆதிக்கம் எடுபட்டுப் போய், அவர் பழைய மாதிரி வெளியே வந்து பழக ஆரம்பித்திருந்தாரே! ஒரு வாரத்துக்கு முன்தான் எல்லாம் சரியாகப் போய்விட்டதுபோல இருந்தது. வயது காலத்தில் அமைதியும், சந்தோஷ மும், கௌரவமும் நிச்சயமாக ஜெகிலுக்குச் சித்தி யாகிவிட்டது போலிருந்ததே! இப்பொழுது, ஒரே நிமிஷத்தில் சிநேகம், மனச்சாந்தி, வாழ்க்கையின் போக்கு—எல்லாம் உடைபட்டுச் சிதறிப்போயிற்று! எதிர்பாராத இப்பேர்ப்பட்ட பெரிய மாறுதல் எத னால்? பைத்தியம் தான் காரணமாக இருக்கவேண் டும். ஆனால், டாக்டர் லான்யனின் பேச்சையும் மாதிரியையும் பார்த்தால், காரணம் அதுவல்ல என் றும், வேறு ஏதோ ஆழ்ந்த காரணம் இருக்கிற

தென்றும் தெரிகிறது. இவ்வாறு அட்டர்ஸன் யோசனை செய்தார்.

ஒரு வாரத்திற்குள்ளேயே டாக்டர் லான்யன் படுத்த படுக்கையானார்—இரண்டு வாரங்களுக்குள் இறந்தும் போய்விட்டார். சவ அடக்கம் செய்த மறுநாள் இரவு அட்டர்ஸன் தம் அறைக் கதவைத் தாளிட்டுக்கொண்டு, ஒரு மங்கல் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில், ஸீல் செய்யப்பட்ட ஒரு கவரை வெளியே எடுத்துப் பார்க்கலானார். அது லான்யனின் முத்திரையால் ஸீல் செய்யப்பட் டிருந்தது. "அந்தரங்கம்: ஜெ. ஜி. அட்டர்ஸனின் பார்வைக்கு மட்டும். அவர் எனக்கு முன்பு இறக்க நேர்ந்தால் உடைக்காமலேயே எரிக்கப்பட' வேண்டியது" என்று உறையின்மேல் கண்டிப்பாக எழுதியிருந்தது. அட்டர்ஸன் அதற்குள்ளிருந்த சமாசாரத்தைப் படிக்கவே பயப்பட்டார். "இன்று ஒரு நண்பன் போய்விட்டான். இக் கடிதத்தில் மற்றோர் நண்பனின் முடிவு கண்டிருக்குமோ?" என்று நடுங்கினார். அந்தப் பயம் சிநேக பாவத்திற்குப் பொருந்தாதது என்று உதறித் தள்ளிவிட்டு ஸீலை உடைத்தார். உள்ளே மற்றொரு கூடு இருந்தது. அதன்மேல் "டாக்டர் ஹென்ரி ஜெகிலின் சாவு அல்லது மறைவு பரியந்தம் திறக்கக்கூடாது" என்று எழுதியிருந்தது. அட்டர்ஸனுக்குத் தம் கண்களையே நம்ப முடியவில்லை. ஆமாம், மறைவு! இங்கேயும், இக்கடிதத்திலும்! ஜெகிலிடம் தாம்

திருப்பிக் கொடுத்துவிட்ட அந்தப் பைத்தியக்கார உயில்—அதிலும் ஜெகிலின் மறைவைப்பற்றிக் குறித்திருந்தது. உயிலின் வாசகம், ஹைடின் வேலை; அதன் பயங்கரமான அர்த்தம் இப்பொழுது மிகவும் விளக்கமாகிவிட்டது. இந்தக் கடிதத்தில் லான்யனல்லவா மறைவைப்பற்றி எழுதியிருக்கிறார். அதன் அர்த்தம் என்ன? லான்யன் கடிதத்தைப் பிரிக்கக் கூடாதென்று ஏற்படுத்திய தடையை மீறி, இந்த ரகசியங்களின் மூலத்தை அறிய வக்கீலுக்கு ஒரு மிதமிஞ்சிய ஆவல் ஏற்பட்டது. ஆனால் தொழில் முறை நாணயமும் நட்புக் கடமையும் இரண்டு பொறுப்புக்களாக முன் நின்றதால், கவரை இரும்புப்பெட்டியில் வைத்துப் பூட்டி விட்டார்.

ஆவலை அடக்குவது என்பது ஒரு விஷயம்; அதை ஜெயிப்பது என்பது வேறு விஷயம். அட்டர்ஸனுக்கு ஜெகிலுடன் சேர்ந்து பழகவேண்டுமென்று முன்போல் ஆவல் இருந்ததா என்பது சந்தேகம். அவரைப்பற்றி அநுதாபத்துடன் அடிக்கடி நினைத்தார். ஆனால் அவர் நினைப்புக்களெல்லாம் அமைதியின்மையையும் பயத்தையும்தான் உண்டாக்கின. அவரைப் பார்க்கவேண்டுமென்று போனார்; 'பார்க்க முடியாது, என்று வந்த பதில் அவருக்கு ஒரு வேளை ஆறுதலாகவே இருந்திருக்கலாம். ஒரு வேளை, தாமாகச் சிறை சென்றது போல எப்பொழுதும் தனியாகவே இருப்பவருடன் உட்கார்ந்து பேசுவதைக் காட்டிலும், நகரத்துச் சந்தடி

களின் நடுவில், வாசலில் பூலுடன் நின்றுகொண்டு சிறிது நேரம் பேசுவதே மேலெனக் கருதியிருக்க லாம். அப்படி அவர் அவனுடன் பேசினபொழுது பூல் சொன்னது ஒன்றும் அவருக்குச் சந்தோஷ கரமாகவே யில்லை. டாக்டர் முன்னைக் காட்டிலும் அதிகமாக ஆராய்ச்சிச்சாலைக் கடுத்த அந்தரங்க அறையிலேயே இருந்தாராம்; சில சமயங்களில் அங் கேயே தூங்குவாராம். உற்சாகமே அற்றுப்போய் விட்டாராம்; பேசுவதே இல்லையாம்; படிப்பதும் இல்லை. மனத்தில் ஏதோ பெருத்த கவலைகொண் டவர் போலத் தோன்றினர்; இந்தமாதிரி விவரங் களை அடிக்கடி ஒரே தினுசாகக் கேட்டுக் கேட்டுச் சலித்துப்போய், அட்டர்ஸன் ஜெகில் வீட்டிற்குப் போவதையே நிறுத்திவிட்டார்.

# 7

## ஜன்னலில் கண்ட காட்சி

**வ**ழக்கப்படி அட்டர்ஸனும் என்பீல்டும் ஞாயிற்றுக்கிழமை உலாவச் சென்றபொழுது, தற்செயலாக மறுபடியும், அந்தச் சிறு குறுக்குத் தெரு வழியாகப் போனார்கள்; அந்தக் கதவினருகே வந்ததும் இருவரும் அதைக் கவனித்தார்கள்.

"அந்தக் கதை ஒரு தினுசாக முடிந்து போய்விட்டது. இனிமேல் ஹைடைப்பற்றி ஒரு தகவலுமே கிடைக்காது—பிரஸ்தாபமே இருக்காதல்லவா?" என்றார் என்பீல்ட்.

"இருக்காதென்றுதான் நினைக்கிறேன். உன்னிடம் சொன்னேனே? நான் அவனை ஒரு தரம் கண்டேன்; உன்னைப் போல்தான் எனக்கும் அவனிடம் அருவருப்பு ஏற்பட்டது."

"அவனைப் பார்த்தால் அருவருப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது. இன்னொரு விஷயம். டாக்டர் ஜெகில் வீட்டிற்குப் போக இது பின்புற வழியென்று அப்பொழுது எனக்குத் தெரியாது.

அதைப் பற்றி நீ என்ன நினைத்தாயோ?........நான் அதைத் தெரிந்து கொண்டதே உன்னால்தான்."

"ஆனால் தெரிந்து கொண்டு விட்டாயா? அப்படியானால் சுற்றுத் தாழ்வாரத்திற்குச் சென்று ஜன்னல்களைப் பார்ப்போமே! உண்மையிலேயே எனக்கு ஜெகிலைப் பற்றி ரொம்பக் கவலையாக இருக்கிறது. வீட்டிற்கு வெளியில் நின்றுகொண்டு கூட அவனோடு பேசினால் அவனுக்கு ஆறுதலாகத் தான் இருக்கும் என்று நினைக்கிறேன்."

தாழ்வாரம் ஜில்லென்று இருந்தது; ஈரமாகக் கூட இருந்தது. மேலே ஆகாயத்தில் சூரிய வெளிச்சம் இன்னும் பளிச்சென்று இருந்தபோதிலும், அங்கே மங்கல் தட்டிவிட்டது. மூன்று ஜன்னல்களில், நடு ஜன்னல் பாதியில் திறந்திருந்தது. திறந்திருந்த அந்த ஜன்னலின் பக்கத்தில் ஜெகில், விமோசனமற்ற ஒரு கைதிபோல ஏதோ ஏக்கம் பிடித்துப்போய் உட்கார்ந்திருப்பதை அட்டர்ஸன் கண்டார்.

"ஹா! ஜெகில்! உடம்பு சௌக்கியமாயிருக்கிறதா?" என்று கத்தினார்.

"ரொம்ப நிம்மதியற்றிருக்கிறேன், அட்டர்ஸன்! தாது விழுந்து போய் விட்டது. ஆனால் நல்ல வேளையாக அதிக காலம் தாங்காது!"

"நீ ஆனாலும் ரொம்ப உள்ளேயே அடைத்துக் கொண்டு கிடக்கிறாய். வெளியில் வந்து உலாவினால் தானே ரத்த ஓட்டம் சுறுசுறுப்பாக இருக்கும்.

(இவர் என் மாமன் மகன் என்பீல்ட்—அவர்தான் டாக்டர் ஜெகில்) வெளியிலே வா, தொப்பியை எடுத்துப் போட்டுக்கொண்டு வா, எங்களுடன் கொஞ்சம் வேகமாக நடந்துவிட்டு வரலாம்!"

"நீ சொல்லுவது சரி; அப்படிச் செய்யவேண்டுமென்றுதான் எனக்கும் ஆசை. ஆனால் அது சாத்தியமேயில்லை, அட்டர்ஸன். எனக்குப் பயமாயிருக்கிறது. ஆனால் உன்னைப் பார்த்ததில் எனக்கு ரொம்பச் சந்தோஷம். உன்னையும் என்பீல்டையும் மேலே வரச் சொல்ல வேண்டுமென்று மிகவும் ஆசைப்படுகிறேன்; ஆனால் இந்த இடம் இப்பொழுது அதற்கு லாயக்கில்லாமல் இருக்கிறது."

"அப்படியென்றால், நாங்கள் இங்கேயே இருக்கிறோம்; நீயும் அங்கேயே இரு. இப்படியே பேசுவோமே!"

"அதைத்தான் சொல்லவேண்டுமென்று நானும் வாயெடுத்தேன்" என்று டாக்டர் புன்னகையுடன் கூறினர்.

வார்த்தைகள் வாயிலிருந்து பூராவும்கூட வெளிவரவில்லை; புன்சிரிப்பு அவர் முகத்திலிருந்து திடீரென்று மறைந்தது; அதே நிமிஷம் அதில் தோன்றிய பீதியும் கலக்கமும் கீழிருந்து பார்த்துக்கொண்டிருந்தவர்களையே நடுநடுங்கச் செய்துவிட்டது. அம்முகத்தோற்றத்தை ஒரே தரம்—ஒரு பார்வைதான்—அவர்கள் பார்த்தார்கள். ஜன்னல் திடீரென்று சாத்தப்பட்டுவிட்டது. ஆனால் அந்தப்

பார்வையில் அவர்கள் கண்டது! திரும்பித் தாழ்வாரத்தை விட்டு வெளியே போனார்கள். ஒரு வார்த்தை கூடப் பேசாமல் தெருவைத் தாண்டினார்கள். ஞாயிற்றுக் கிழமையன்று கூடக் கொஞ்சம் சந்தடியும் நடமாட்டமும் கொண்டிருந்த ஒரு பக்கத்து ரஸ்தாவிற்கு வந்த பிறகுதான் அட்டர்ஸன் திரும்பித் தம் நண்பனைப் பார்த்தார்; இருவர் முகங்களும் வெளுத்துப் போயிருந்தன. இருவர் முகங்களிலும் பயமும் திகிலும் குடிகொண்டிருந்தன.

"என்ன விபரீதம்! கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!" என்றார் அட்டர்ஸன்.

என்பீல்ட் தலையை மட்டும் அசைத்து விட்டு, மௌனமாக மேலே நடந்தார்.

# 8

# கடைசி இரவு

ஒரு நாள் இரவு, சாப்பாட்டின் பிறகு, அட்டர்ஸன் கணப்பின் அருகில் நாற்காலியில் சாய்ந்து கொண்டிருக்கும்பொழுது, பூல் வந்து சேர்ந்தான். எதிர்பாராமல் அவன் வந்தது அவருக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

"என்ன, பூல், என்ன சமாசாரம்? எங்கே வந்தாய்?" என்று கேட்டார். மறுபடியும் அவனைப் பார்த்து, "உனக்கு என்ன உடம்பு? டாக்டருக்கு என்ன உடம்பு?" என்றார்.

"ஸார், என்னமோ பெரிய கோளாறு ஏற்பட்டு விட்டது!" என்றான் பூல்.

"உட்காரப்பா! இந்தா, இந்த டம்ளர் சாராயத்தைக் குடி. சாவதானமாக, மனம் விட்டு, என்ன சொல்ல விரும்புகிறாயோ, அதைப் பூராவும் விளங்கச் சொல்லு" என்றார் அட்டர்ஸன்.

"ஸார், உங்களுக்குத்தான் டாக்டர் இப்பொழுது போகிற போக்குப் பூராவும் நன்றாகத் தெரியுமே — எப்பொழுது பார்த்தாலும் அறையி

லேயேதான் இருக்கிறார். இன்னும் ஜாஸ்தியாக, இப்பொழுது, அடைபட்டது போலவே இருக்கிறார். அது ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை, ஸார். கொஞ்சங் கூடச் சமாதானமாக இல்லை. எனக்கென்னவோ பயமாயிருக்கிறது, ஸார்!"

"இந்தா, பூல்! விஷயத்தை விளங்கச் சொல்லு. எதைக் கண்டு, எதைப்பற்றி, ஏன், நீ பயப்படுகிறாய்?"

"சென்ற ஒரு வாரமாகவே எனக்கு ரொம்பக் கவலையாய் இருக்கிறது—இனிமேல் என்னால் தாங்க முடியாது" என்று அட்டர்ஸன் கேள்வியைக் காதில் போட்டுக்கொள்ளாமலே சொன்னான்.

அவன் சொன்னது முற்றிலும் உண்மை யென்பது அவனுடைய தோற்றத்திலேயே தெரிந்தது; ரொம்பப் பதறிப்போனவன் போல இருந்தான். முதலில் தன் பீதியைப்பற்றிச் சொன்னபோது தான் வக்கீலின் முகத்தையே அவன் தலையெடுத்துப் பார்த்தான்; பிறகு அவன் குனிந்த தலையை நிமிர்த்தவில்லை. சாராயக் கோப்பையை, குடிக்காமலே, மடியில் வைத்துக்கொண்டு, பூமியைப் பார்த்தவண்ணம், உட்கார்ந்திருந்தான். "இனிமேல் என்னால் தாங்க முடியாது, ஸார்!" என்றான் மறுபடியும்.

"பூல், ஏதோ காரணம் கொண்டுதான் நீ இவ்வளவு அவதிப்படுகிறாய் என்று நன்றாய்த்

தெரிகிறது. ஏதோ பெரிய ஆபத்துத்தான்—அதென்னவென்று சொல்லப்பா!"

"ஏதோ மோசடி—கொலை—நடந்து விட்டது போலிருக்கிறது, ஸார்!" என்று பூல் கம்மிய குரலில் கூறினன்.

"மோசடியா—கொலையா!" என்று அட்டர்ஸன் உரக்கக் கத்திவிட்டார். பூல் சொன்னது அவரைத் தூக்கி வாரிப் போட்டு விட்டது; அப்படி உணர்ச்சி பொங்குவது அவருக்கு வழக்கமில்லையாகையால், கோபமும் கொஞ்சம் வந்தது அவருக்கு. "என்ன மோசடி? என்ன சொல்லுகிறுய்?" என்று அதட்டிக் கேட்டார்.

"எனக்குச் சொல்ல வாய் வரவில்லை, ஸார். கொஞ்சம் என்னுடன் கூட வந்து நீங்களே பாருங்களேன்!"

அட்டர்ஸன் உடனே எழுந்து சட்டை போட்டுக் கொண்டார். அவர் எழுந்திருந்து புறப்படுவதற்குத் தயாரானதைக் கண்டதும், பூலின் முகத்தில் ஒரு பெருத்த ஆறுதல் உணர்ச்சி தென்பட்டது. அட்டர்ஸனுக்கு அது மிகவும் வியப்பாக இருந்தது. சாராயக் கோப்பையை ஒரு துளிகூடத் தொடாமல் அப்படியே வைத்துவிட்டு, அவன் அவரைப் பின்தொடர்ந்தது அவருக்கு மேலும் அதிசயமாக இருந்தது.

மார்ச் மாதத்துக் குளிர் நடுக்கும் இரவு; காற்று பலமாய் அடித்துக்கொண் டிருந்தது. மங்கி

யிருந்த பிறை, காற்றால் திருப்பிச் சாய்த்துவிடப்பட்டதுபோலக் கிடந்தது. ஒளியை ஊடே காட்டி, வெகு வேகமாக மிதந்து சென்றது மேகத்துண்டு; காற்றடித்ததில் பேசக்கூட முடியாமலிருந்தது. முகம் குளிரால் உறைந்துபோகும் போலிருந்தது. தெரு, நடமாட்டமே இல்லாதபடி, சுத்தமாக அகற்றிக் கூட்டிவைத்தது போலிருந்தது. லண்டனில் அந்தப் பாகம் அவ்வளவு நிர்மானுஷ்யமாக இருந்ததை அட்டர்ஸன் ஒருபொழுதும் பார்த்ததே இல்லை. அப்பொழுது நடமாட்ட முள்ளதாக இருந்தால் நல்லது போலிருந்தது அவருக்கு. சகோதர மனிதர்களைக் கண்டு தொடவேண்டுமென்று அவருக்கு அப்பொழுது என்றுமில்லாத ஒரு ஆவல் உண்டாயிற்று. ஏனெனில், ஏதோ விபத்து நெருங்கி விட்டது என்ற நிச்சயம் அவர் மனத்தில் தோன்றி விட்டது; அதை விலக்க அவர் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அந்தத் தெருவின் அருகே வந்த பொழுது, அங்கே ஒரே புழுதியும் காற்றுமாக இருந்தது. தோட்டத்திலிருந்த மெல்லிய மரங்கள் கம்பிகளின்மேல் விழுந்து விழுந்து அடிபட்டன. அது வரையில் இரண்டடி முன்னாலேயே சென்றுகொண்டிருந்த பூல் அப்பொழுது குறட்டின் நடுவில் நின்று கொண்டு, குளிர் நடுக்கி எடுத்தபொழுது, தொப்பியை எடுத்து, கைக்குட்டையால் முகத்து வியர்வையைத் துடைத்துக்கொண்டான். இவ்வளவு வேகமாக நடந்துவந்த சிரமத்தால் ஏற்பட்ட வியர்வை அன்று; ஏதோ நெஞ்சை அடைக்கும் ஒரு பீதியின்

வியர்வை; அவன் முகம் வெளேரென்றிருந்தது; பேசியபொழுது அவனுடைய குரல்கூடத் தடுமாற்றம்கொண் டிருந்தது.

"வந்துவிட்டோம், ஸார்! கடவுள் புண்ணியத்தில் இங்கே ஒன்றும் விபத்து இல்லாமல் இருக்க வேண்டும்!" என்று பூல் கூறினன்.

"அதைத் தான் நானும் கோருகிறேன், பூல்!" என்றார் அட்டர்ஸன்.

உடனே பூல் மெல்லக் கதவைத் தட்டினன்.

கதவு கொஞ்சமாகத் திறக்கப்பட்டது. "பூல், நீயா?" என்று ஒரு குரல் கேட்டது.

"ஆமாம் நான்தான், கதவைத்திற" என்றான் பூல்.

ஹாலுக்குள் நுழைந்தார்கள். நுழைந்தபோது பளிச்சென்று விளக்குகள் ஏற்றப்பட் டிருந்தன. கணப்பும் உயரமாக எரிந்துகொண் டிருந்தது. அதைச் சுற்றி, ஆட்டு மந்தைபோல, அவ்வீட்டு வேலைக்காரர்கள் எல்லோரும் ஒடுங்கியிருந்தார்கள். அட்டர்ஸனைப் பார்த்ததும் வேலைக்காரி, "அதோ, மிஸ்டர் அட்டர்ஸன் வந்துவிட்டார்!" என்று விம்மிக்கொண்டு, அவரைக் கட்டிக்கொள்ள வருபவள் போல, ஓடிவந்தாள்.

"என்ன, நீங்கள் எல்லோருமா இங்கிருக்கிறீர்கள்? இப்படியா? விதரணையற்று, மரியாதையின்றி? உங்கள் யஜமானன் பார்த்தால் என்ன சொல்லுவார் என்ற பயம் கூட இல்லை?" என்று கொஞ்சம் கோபத்துடன் அதட்டினர் அட்டர்ஸன்.

"எல்லோருக்கும் பயம், ஸார்!" என்றான் பூல்.

நிசப்தம் குடிகொண்டது; ஒருவராவது பதில் சொல்ல வாயைத் திறக்கவில்லை; வேலைக்காரி மட்டும் திடீரென்று உரக்க அழ ஆரம்பித்துவிட்டாள்.

"இந்தா, வாயை மூடு!" என்று கோபாவேசங் கொண்டு கத்தினார் அட்டர்ஸன். அவரே எவ்வளவு நிம்மதியற்றுப் போயிருந்தார் என்பது அந்தக் குரலில் தெரிந்தது. அந்தப் பெண் திடீரென்று குரல் பாய்ச்சி அழ ஆரம்பித்தவுடன், எல்லோரும் திடுக்கிட்டு, ஏதோ விபத்தை எதிர்பார்த்தவர்கள் போல உள் கதவை நோக்கித் திரும்பினார்கள்.

பூல், பக்கத்திலிருந்த ஒரு சிறுவனைப் பார்த்து, "அப்பா, அந்த மெழுகுவர்த்தியைக் கொண்டுவா! ஐயாவுடன் கூடப்போய் விஷயம் என்னவென்று ஆராய்ந்து பார்த்து விடுவோம்" என்றான்.

"என்னுடன் வாருங்கள்!" என்று அட்டர்ஸனிடம் சொல்லிவிட்டு முன்னே தோட்டப்பக்கம் அவன் செல்லலானான்.

"ஸார், இப்பொழுது நீங்கள் எவ்வளவு மெதுவாகச் சந்தடி செய்யாமல் வர முடியுமோ அப்படி வாருங்கள். நீங்கள் உற்றுக் கேட்க வேண்டும்; ஆனால் நீங்கள் பேசுவது கேட்கக்கூடாது. இன்னொரு விஷயம்: அவர், ஒரு வேளை, உள்ளே வரச் சொன்னால், போக வேண்டாம்!"

இதைக் கேட்டதும் அட்டர்ஸனுக்குத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது; சுயப்பிரக்ஞையையே

இழந்துவிடுபவர் போல் ஆகிவிட்டார். ஆனால் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, பூலைப் பின் தொடர்ந்தார். இருவரும் ஆராய்ச்சிச்சாலையைத் தாண்டி, ஆபரேஷன் மேடை வழியாக, பாட்டில்களையும் பெட்டிகளையும் கடந்து மாடிப் படியருகே போய்ச் சேர்ந்தார்கள். ஒரு பக்கமாக நின்று கொண்டு உற்றுக் கேட்கும்படி பூல் அவருக்கு ஜாடை செய்தான். மெழுகுவர்த்தியைக் கீழே வைத்து விட்டு, மனத்தை ரொம்பத் திடப்படுத்திக் கொண்டவனாக, படியிலேறி, அறைக் கதவைத் தடுமாறிய வண்ணம் தட்டினான்.

"ஸார், மிஸ்டர் அட்டர்ஸன் வந்திருக்கிறார். உங்களைப் பார்க்க வேண்டுமாம்!" என்று சொன்னான்; சொல்லிக்கொண்டே உற்றுக் கேட்கும்படி அட்டர்ஸனுக்கு மறுபடியும் ஜாடை செய்தான்.

உள்ளே யிருந்து ஒரு குரல் வந்தது. "நான் யாரையும் பார்ப்பதற்கில்லை என்று அவரிடம் சொல்!" என்றது அந்தக் குரல் சலிப்புடன்.

"சரி, ஸார்!" என்று பூல் பதில் சொல்லி விட்டுத் திரும்பினான். தான் நினைத்தபடி ஆகி விட்டதால், அவன் குரலில் ஒரு வெற்றித் தொனியே இருந்தது. மெழுகுவர்த்தியை எடுத்துக் கொண்டு, அட்டர்ஸனைத் திரும்பச் சமையலறைக்குக் கூட்டிக்கொண்டு போனான். அங்கு கணப்பு மங்கி, வண்டுகள் தரையெல்லாம் தாவிக் கொண்டிருந்தன.

"ஸார், அது யஜமானர் குரலா?" என்று பூல் அட்டர்ஸனின் முகத்தைக் கவனித்துக்கொண்டு கேட்டான்.

"ரொம்ப மாறி யிருக்கிறதே!" என்று அட்டர்ஸன் பதில் சொன்னார்: அவர் முகம் வெளுத்திருந்தது. அவரும் பூலைப் பார்த்தார்.

"மாறியா!....ஆமாம்....அப்படித்தான் என்று நினைக்கிறேன். இருபது வருஷம் இந்த வீட்டில் வேலை பார்த்த பிறகு, எனக்கு அவர் குரல் அடையாளம் கூடவா தெரியாமல் போய்விட்டது? இல்லை, ஸார், இல்லை. யஜமானர் மறைந்து விட்டார். எட்டு நாளைக்கு முன் அவர் போய்விட்டார்! அன்று அவர் கடவுள் பெயரைச் சொல்லிக் கத்தியது எங்கள் காதில் நன்ருய் விழுந்தது. அவருக்குப் பதிலாக உள்ளே யார் என்பதும், எதற்காக இருக்கிருர் என்பதும் தான் ஒன்றும் விளங்கவில்லை!"

"நீ சொல்வது மிகவும் விசித்திரமான கதையா யிருக்கிறது, பூல்—நம்பக்கூடாததாகக் கூட இருக்கிறதே!" என்று அட்டர்ஸன் ஒன்றும் விளங்காதவராய்க் கூறினர். "நீ சொல்வது போலவே நடந்ததாக வைத்துக்கொள்வோம்—டாக்டர் ஜெகில் கொலை செய்யப்பட்டு விட்டதாகவே வைத்துக் கொள்வோம்—கொலை செய்தவன் இங்கு ஏன் இருக்கவேண்டும்? அதற்கென்ன காரணம்? அது ஒன்றும் அர்த்தமில்லாமல் இருக்கிறது. ஆகையால் நீ சொல்லுகிறது பொருத்தமாயில்லையே!"

"உங்களைத் திருப்தி செய்கிறது கஷ்டந்தான், ஸார்! ஆனாலும் திருப்தி செய்து விடுகிறேன், பாருங்கள். சென்ற வாரம் பூராவும் அங்கே, உள்ளே இருக்கும் அவரோ, அதுவோ, ஏதோ ஒரு மருந்திற்காக இரவும் பகலும் படாத பாடு படுகிறது; ஆனால் மருந்து இன்னதென்று ஞாபகம் வரவில்லைபோலிருக்கிறது. சில சமயங்களில் எனக்கு இடும் உத்தரவுகளைக் காகிதத்தில் எழுதி மாடிப்படியில் எறிந்து விடுவது யஜமானர் வழக்கம். சென்ற வாரம் பூராவும் இதைத் தவிர வேறில்லை. மூடின கதவும், படியில் காகிதங்களும் தான். சாப்பாட்டைக்கூட அங்கே படிமேலேயே வைத்துவிடவேண்டும் என்று உத்தரவு! யாரும் பார்க்காதபொழுது, திருட்டுத்தனமாக, அதை உள்ளே எடுத்துக்கொண்டு விடுகிறார். தினமும், ஸார், இரண்டுதடவை, மூன்றுதடவைகூட, இந்த மாதிரி உத்தரவுகள்—லண்டனிலுள்ள எல்லா மருந்து ஷாப்புகளுக்கும் ஓடுவதுதான் எனக்கு வேலை. மருந்தை வாங்கிக்கொண்டு வந்தபொழுதெல்லாம், மற்றொரு காகிதம் படியில் கிடக்கும். மருந்து சுத்தமானதில்லை என்றும் உடனே அதைத் திரும்பிக் கொடுத்துவிடும்படியும், மற்றொரு கடைக்குப் போகும்படியும் உத்தரவு! அந்த மருந்து, ஸார், என்னவோ தெரியவில்லை—ரொம்ப அவசியம்போலிருக்கிறது, ஸார்!"

"அந்தக் காகிதம் ஏதாவது உன்னிடம் இருக்கிறதா?"

பூல் ஜேப்பியில் கையை விட்டுத் தேடி ஒரு கசங்கிய துண்டை எடுத்துக் கொடுத்தான். வக்கீல் அதை விளக்கண்டை கொண்டு போய் நன்றாய் ஆராய்ந்தார். அது பின் வருமாறு:

"மெஸர்ஸ் மா கம்பெனிக்கு டாக்டர் ஜெகில் எழுதுவது. அவர்கள் கடைசியாக அனுப்பிய ஸாம்பிள்(மாதிரி) அசுத்தமாயிருக்கிறது; ஆகையால் டாக்டருக்குத் தற்சமயம் வேண்டியிருக்கும் காரியத்திற்கு உபயோகமில்லை. 18-வருஷத்தில் டாக்டர் இக்கம்பெனியில் இந்தச் சரக்கைக் கொஞ்சம் அதிகமாக வாங்க நேர்ந்தது; ஆகையால் கம்பெனியார் மிகவும் ஜாக்கிரதையாகத் தேடி, அதில் ஏதாவது பாக்கியிருப்பதை உடனே அனுப்பினால் மிகவும் நல்லது. செலவைப்பற்றி யோசிக்கத் தேவையில்லை. டாக்டருக்கு இந்த மருந்து மிகவும் அவசியமாக இருக்கிறது." இது வரையில் கடிதம் அமைதியாகவே எழுதப்பட் டிருந்தது. பிறகு பேனா நடுங்கி, எழுதியவரின் உணர்ச்சி வெளியேறி விட்டது. "ரொம்பக் கேட்டுக் கொள்ளுகிறேன். எப்படியாவது அந்தப் பழைய சரக்கைக் கொஞ்சம் கண்டுபிடித்தனுப்பவும்."

"இந்தக் கடிதம் ரொம்ப விசித்திரமாயிருக்கிறது!" என்றார் அட்டர்ஸன். உடனே கடுகடுப்புடன், "ஆமாம், இது எப்படி உன் கையில் அகப்பட்டது?" என்று கேட்டார்.

"மா கம்பெனி ஆள் ரொம்பக் கோபித்துக்

கொண்டு விட்டான், ஸார். இதைத் திருப்பி என் முகத்தில் எறிந்துவிட்டான்!"

"இது நிச்சயம் டாக்டர் ஜெகிலின் கையெழுத்துத்தான்; உனக்குத் தெரியவில்லையா?"

"அது மாதிரிதான் இருந்ததென்று நினைத்தேன்," என்று முனகிக்கொண்டு, பூல், மறுபடியும் அழுத்தமாக, "எழுத்து இருக்கட்டும் ஸார்; நான் உள்ளே இருக்கும் ஆளைப் பார்த்திருக்கிறேனே!"

"பார்த்திருக்கிருயா? உம், சொல்லு!"

"சொல்லுகிறேன், கேளுங்கள். ஒரு நாள் தோட்டத்திலிருந்து திடீரென்று ஆபரேஷன் மேடைக்கு வந்துவிட்டேன். இந்த மருந்தைத் தேடுவதற்காக அவர் வெளியே வந்திருக்கிருர் போலிருக்கிறது. அறைக் கதவு திறந்திருந்தது. மேடையோரத்தில் சீசாக்களிடையே எதையோ தேடி யெடுத்துக்கொண்டிருந்தார். நான் உள்ளே வந்ததைத் தலையெடுத்துப் பார்த்தார். அவ்வளவுதான்! ஏதோ ஒரு தினுசாக 'க்ரீச்'சென்று கத்தி விட்டு, அறைக்குள் ஓடி மறைந்துவிட்டார். ஒரே நிமிஷந்தான் நான் அவரைப் பார்த்தேன். ஆனல் நடுநடுங்கிப் போனேன்—என் தலைமயிர் 'நெட்டுக்க' நின்றது, ஸார். அவர் என் யஜமானர் என்ருல், எதற்காக முகமூடி அணிந்திருந்தார் என்று கேட்கிறேன். அவர் என் யஜமானர் என்ருல் ஏன் என்னைப் பார்த்ததும், எலிபோல் கத்திக்கொண்டு ஓடி ஒளியவேண்டும்? நான் அவரிடம் எவ்வளவு

காலம் வேலை பார்த்திருக்கிறேன்—மேலும்—" இங்கே பேச்சை நிறுத்திவிட்டு பூல் முகத்தை மூடிக்கொண்டான் உணர்ச்சி மேலீட்டால்.

" இதெல்லாம் மிகவும் விசேஷமான சமாசாரங்கள்தான்; ஆனால் எனக்கு விஷயம் விளங்க ஆரம்பிக்கிறதென்று நினைக்கிறேன். பூல், சில வியாதிகள் நோயாளியைக் கொடும் வேதனைக்குள்ளாக்கி உடலமைப்பையே குலைத்துவிடுகின்றன வல்லவா? அப்பேர்ப்பட்ட ஒரு வியாதியால் வருந்துகிறார் உன் யஜமானர். ஆகையால்தான் அவ்வருடைய குரலில் இந்த மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். அதனால்தான் அந்த முகமூடி, 'சிநேகிதர்களைப் பார்க்கமாட்டேன்' என்பது, எல்லாம். இந்த மருந்தின் மூலம்தான் வியாதி சொஸ்தமாகும் என்று ஆத்திரப்படுகிறார் போலிருக்கிறது பாவம்! அதனால்தான் அதைப்பற்றி இப்படி ஆத்திரப்பட்டுத் தேடுகிறார். கடவுள் புண்ணியத்தில் அவர் எண்ணுகிறபடி சொஸ்தம் ஆகட்டும்! இதுதான் எனக்குத் தோன்றுகிறது. இதுகூட மிகவும் வருந்தத்தக்க விஷயந்தான். நினைக்கிறபோதே பயமாயிருக்கிறது. ஆனால் இப்படிக் காரணம் கூறுவதுதான் இயற்கையாகவும் சாத்தியமாகவும் இருக்கிறதுபோல் எனக்குப் படுகிறது; பொருத்தமாகவும் இருக்கிறது. நமது அநாவசியமான பீதிகளும் இதனால் நீங்குகின்றன அல்லவா?" என்றார் அட்டர்ஸன்.

"ஸார், அது என் யஜமானர் அல்ல. இது தான் விஷயம்—உண்மை."

வெளிறிய முகத்துடன் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு, மெல்ல, "என் யஜமானர் உயரமான வலுவுள்ள ஆளாச்சே, ஸார், இது சித்திரக்குள்ளன், ஸார்!" என்றான் பூல். அட்டர்ஸன் ஏதோ மறுத்துக் கூற முயன்றார். "என்ன ஸார், என் யஜமானரை எனக்குத் தெரியாதா? இருபது வருஷங்கள் அவரிடம் வேலை செய்துவிட்டு அறைவாசற்படியில் அவர் தலை எந்த மட்டத்திற்கு வரும் என்பதை அறியாமலா இருக்கிறேன்? ஒவ்வொரு நாளும், தினம் தவறாமல், காலையில் அந்த வாசற்படியில் அவரைப் பார்த்ததில்லையா? இல்லை, ஸார், இல்லை. அந்தப் பிராணி டாக்டர் ஜெகில் இல்லை! அது என்னமோ கடவுளுக்குத்தான் வெளிச்சம்!—ஆனால் நிச்சயம் டாக்டர் ஜெகில் இல்லை! கொலை நடந்து விட்டது என்பது தான் என்னுடைய தீர்மானம்."

"பூல், நீ அப்படிச் சொல்வதாயிருந்தால், அதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டியது என் கடமையாகிறது. உன் யஜமானரின் மனதைப் புண்படுத்தக் கூடாதென்று எனக்கு எவ்வளவோ இருந்தாலும் கூட, இந்தக் கடிதத்தால் எனக்கு அவர் உயிரோடிருக்கிறார் என்பது நிச்சயமாயிருந்தாலும் கூட, அந்தக் கதவை உடைப்பதுதான் இனிமேல் என் கடமை என்று கருதுகிறேன்."

"ஆ, நீங்கள் இப்பொழுது சொல்வது சரியான பேச்சு!" என்றான் பூல்.

"இப்பொழுது, இரண்டாவது பிரச்னை—அதை யார் செய்யப் போகிறார்கள்?" என்று அட்டர்ஸன் கேட்டார்.

"ஏன், நீங்களும் நானும்தான், ஸார்!" என்று பூல் தயங்காமல் பதில் சொன்னான்.

"பேஷாய்ச் சொன்னாய். இதிலிருந்து என்ன விளைந்தாலும் சரி, உனக்கு ஒருவிதமான கெடுதலும் ஏற்படாமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்."

"ஆபரேஷன் மேடையில் ஒரு கோடாலி இருக்கிறது. நீங்கள் இந்த நெருப்புத் தூண்டும் இரும்புக் கம்பியை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான் பூல்.

வக்கீல் அந்த முரட்டு ஆயுதத்தைக் கையிலெடுத்துத் தூக்கிப் பார்த்தார். பின்பு தலை நிமிர்ந்து, "இப்பொழுது நாம் நம்மை மிகவும் ஆபத்தான ஒரு நிலைமைக்குள்ளாக்கிக் கொள்ளுகிறோமென்பது உனக்கு விளங்குகிறதா?" என்று பூலைப்பார்த்துக் கேட்டார்.

"நீங்கள் சொல்வதில் ஒன்றும் பிசகில்லை, ஸார், ரொம்ப சரி!"

"ஆகையால் நாம் இப்பொழுது மிகவும் தாராளமாக மனம் விட்டுப் பேசுவது நல்லதல்லவா? நாம் பேசினதைக் காட்டிலும் அதிகமாக மனத்தில் இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறோம். நம் மனத்திலிருப்பதை பூராவும் ஒளிக்காமல் இப்

பொழுது ஒருவருக் கொருவர் வெளியிட்டுக் கொள்வோம். அந்த முகமூடி யணிந்த உருவம்—அது யார் என்று உனக்கு அடையாளம் தெரிந்ததா?"

"உண்மையில், ஸார், அது வெகு வேகமாக ஓடி மறைந்தது. குனிந்துகொண்டும் இருந்தது. ஆகையால் அதைப்பற்றி நான் உறுதியாக ஒன்றும் கூற முடியாது. ஆனல், அது மிஸ்டர் ஹைடின் உருவமா என்று நீங்கள் கேட்டீர்களானல்,—ஏன், அது ஹைட் தான், ஸார்! அதே பருமன், அதே லகுவான விசுக் விசுக்கென்ற நடை; அதோடு, வேறு யார் பின்புறமாக ஆராய்ச்சிச் சாலைவாயில் வழியாக உள்ளே வரமுடியும்? கொலை நடந்த பொழுதுகூட அந்த வாயிற் கதவின் சாவி அவரிடம் தானிருந்தது என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அது மட்டுமல்ல. நீங்கள் ஹைடை எப்பொழுதாவது பார்த்திருக்கிறீர்களோ என்னமோ—"

"பார்த்திருக்கிறேன். ஒரு தடவை பேசியும் இருக்கிறேன்."

"அப்படியானல், எங்களைப் போல நீங்களும் அவரைப் பற்றி ஒரு விசேஷத்தைக் கவனித்திருக்க வேண்டும், பார்க்கிறவனுக்கு உடனே ஒரு நடுக்கம் ஏற்படும், அதை என்ன வென்று சொல்லத் தெரியவில்லை எனக்கு—ஏதோ எலும்புவரையில் பாய்ந்து திகிலூட்டும்."

"அந்த மாதிரி ஒரு உணர்ச்சி ஒன்று எனக்கும் ஏற்பட்டது வாஸ்தவம்தான்."

"சந்தேகமில்லை, ஸார். மருந்து சீசாக்களின் நடுவேயிருந்து அந்த உருவம் குரங்குபோலத் தாவி அறைக்குள் ஓடினதைக் கண்டதும் நான் விலு விலுத்துப் போனேன், ஸார். ஆனால் இது ருஜு ஆகாது, சாட்சியமாகாது, எனக்குத் தெரியும்—அவ்வளவு ஞானம் இருக்கிறது எனக்கு. ஆனால் ஒரு மனிதனுக்கு அவன் மனது தானே சாட்சி? அது ஹைட்தான் என்று நான் உறுதி கூறக்கூடும், ஸார்!" என்றான் பூல்.

"ஆமாம், ஆமாம். நான்கூட நீ சொல்வது போலத்தான் நினைக்க ஆரம்பிக்கிறேன். அவர்கள் இருவருடைய சேர்க்கையால் ஏதாவது கெடுதல் ஏற்படலாம் என்று நினைத்தேன். நீ சொல்வது சரிதான்! பாவம்! ஜெகில் கொலை செய்யப்பட்டு விட்டான் என்பதுதான் என் எண்ணம். கொலை செய்தவன் அவன் அறையில் இன்னும் பதுங்கியிருக்கிறான் என்றும் தெரிகிறது. எதற்காக என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம். சரி, பழி வாங்குவோம், பூல்! கூப்பிடு பிராட்ஷாவை!"

பிராட்ஷா வந்து சேர்ந்தான். அவன் முகம் வெளுத்துப்போயிருந்தது; அதில் பயம் குடிகொண்டிருந்தது.

"தைரியமாக இரு, பிராட்ஷா. இன்னதென்று விளங்காத படு அவஸ்தையில் நீங்கள் ரொம்பச் சிரமப்படுகிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. அதை ஒருவாறாகத் தொலைத்துவிட வேண்டுமென்

பதுதான் இப்பொழுது நம்முடைய முயற்சி. பூலும் நானுமாக, அறைக்குள் பலாத்காரமாக நுழையப் போகிறோம். எல்லாம் சரியாக இருந்தால், இத னுடைய முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள எனக்குச் சக்தியும் தைரியமும் இருக்கிறது. அது வரை, ஒன்றும் மோசடி ஏற்பட்டு விடாமல் பார்த்துக் கொள்வதற்கும், பின்புற வாயில் வழியாக யாரும் தப்பியோடி விடாமல் பார்த்துக் கொள்வதற்கும், நீயும் அந்தப் பையனும், நல்ல கம்புகளுடன், பின் புறம்போய், ஆராய்ச்சிச்சாலை வாயிற் கதவண்டை தயாராயிருங்கள். பத்து நிமிஷத்தில் அங்கு போய் நிற்கவேண்டும், எங்கே ?"

பிராட்ஷா போகும்போது வக்கீல் கடிகா ரத்தில் மணியைப் பார்த்துக் கொண்டார். "பூல், இப்பொழுது நாம் நம்முடைய ஜோலியைக் கவனிப் போமா ?" என்று சொல்லி, அட்டர்ஸன் இரும்புக் கம்பியைக் கையிலெடுத்துக்கொண்டு முன்னே சென்றார். ஒரு சிறு மேகம் சந்திரனை நன்றாக மூடிக் கொண்டு நின்றது ; ஒரே இருட்டு. கிணறுபோன்ற அந்தப் பள்ளமான கட்டிடத்தில், காற்று விட்டு விட்டு நுழைந்து அடித்து, மெழுகுவர்த்தியின் ஒளியை அவர்களுடைய காலடியில் முன்னும் பின் னுமாக அலைக்கழித்தது. ஆபரேஷன் மேடை யருகே காற்றடிக்காத இடத்தில் அவர்கள் மௌன மாக உட்கார்ந்தார்கள். சுற்றி லண்டன் மா நகரமே மௌனத்தில் ரீங்காரம் செய்துகொண் டிருந்தது.

அங்கே, அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தில், ஒரே ஒரு சத்தம்தான் மௌனத்தைக் கலைத்துக் கொண்டிருந்தது—அறையில் யாரோ மேலும் கீழுமாக நடக்கும் காலடியின் சத்தம்!

"இந்த மாதிரித்தான், ஸார், நாள் முழுதும் நடக்கும்—ஏன், இரவில் கூட மூக்கால்வாசிப் பொழுது இந்த நடைதான்! மருந்துக் கடைக்காரனிடமிருந்து ஒரு மாதிரி மருந்துச் சரக்கு வரும் பொழுது மட்டுந்தான் இது ஓய்ந்து நிற்கும்.

"குற்றம் செய்த மனத்தின் குறு குறுப்புத்தான் நிம்மதிக்கு இடமே கொடுக்காமல், அதை இப்படி ஆட்டுகிறது. வேறொன்றுமில்லை. அது எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும், மோசடியாகச் சிந்தப்பட்ட ரத்தக்கறை பட்டிருக்கிறது, ஸார், நிச்சயம்! ஆ, அதோ கேளுங்கள்! இன்னும் கொஞ்சம் கிட்டே—நன்றாக உற்றுக் கவனியுங்கள்! கவனித்து எனக்குச் சொல்லுங்கள்—அது டாக்டர் ஜெகிலின் காலடிச் சத்தமா?" என்று பூல் அட்டர்ஸனிடம் ரகசியமாகக் கேட்டான்.

காலடிச் சத்தம் மெல்லியதாகத்தா னிருந்தது; ஆனால் ஒரு ஊசல் கொடுத்ததுபோல் விசித்திரமாயிருந்தது. இயற்கையானதாகவே இல்லை. ஹென்ரி ஜெகிலின் காலடி மாதிரி இல்லைதான்—அவருடைய காலடி அழுத்தமானது, நடக்கும்போது கிர் கிர் என்று சத்தம் செய்யும் காலடி. அட்டர்ஸன் ஒன்றும் விளங்காமல் பெருமூச்சு விட்டார்.

"இதைத் தவிர வேறொரு விசேஷமுமில்லையா?" என்று கேட்டார்.

"உண்டு!" என்று பூல் தலையை அசைத்தான். "ஒரு தரம், அது அழுததைக் கேட்டேன்!"

"அழுததா? அதேன்? எதற்காக?" என்று அட்டர்ஸன் கேட்டார். திடீரென்று அவருக்குக் குலை நடுக்க மெடுத்தது.

"ஆமாம்! அழுதது, ஸார்! பெண் பிள்ளையோ, பாவியின் ஆத்மாவோ அழுமே, அந்த மாதிரி ஸார்! அதைக் கேட்டுவிட்டு எனக்குக்கூட அழுகை வரும்போல் ஆகிவிட்டது."

குறித்த பத்து நிமிஷம் கழிந்தது. அங்கிருந்த வைக்கோலடியிலிருந்து பூல் ஒரு கோடாலியை வெளியே எடுத்தான். அவர்கள் செய்யப்போகும் வேலையில் அவர்களுக்குத் தேவையான வெளிச்சம் இருப்பதற்காக, மெழுகுவர்த்தியை அருகே இருந்த மேஜையின்மேல் வைத்தான். பேச்சு மூச்சின்றி மௌனமாக, காலடிச்சத்தம் வந்த திக்கை நெருங்கினார்கள். அதுமட்டும், நிசப்தமான இரவில், இடைவிடாமல் கேட்டுக்கொண் டிருந்தது.

"ஜெகில்! இப்பொழுதே நான் உன்னைப் பார்த்தாக வேண்டும்!" என்று அட்டர்ஸன் உரக்கக் கத்தினார்.

ஒரு நிமிஷம் பதிலை எதிர்பார்த்துக்கொண்டு மௌனமாயிருந்தார். ஆனால் பதில் வரவில்லை.

"நான் இப்பொழுதே முன் எச்சரிக்கை செய்

கிறேன். எங்களுக்குச் சந்தேகம் உண்டாகிவிட்டது. ஆகையால் நான் உன்னைப் பார்த்துத்தான் ஆகவேண்டும். பார்த்தே தீருவேன்! நியாயமான வழியில் உன்னைப் பார்க்க முடியாவிட்டால், எப்படியாவது, வேறு வழியிலாவது பார்த்து விடுவேன். உன் அனுமதியுடன் பார்க்க முடியாவிட்டால், பலாத்காரமாகவாவது பார்த்துத்தான் விடுவேன். நான் சொல்லுகிறது தெரிகிறதா?'' என்று அட்டர்ஸன் கர்ஜித்தார்.

"அட்டர்ஸன், அட்டர்ஸன்! தயவு செய், என்மேல் இரக்கப்படு, வராதே!'' என்று உள்ளே இருந்து ஒரு குரல் கெஞ்சிற்று.

"ஆ, அது ஜெகில் குரல் அல்ல! அது ஹைடின் குரல்! பூல், கதவை உடை, சொல்லுகிறேன்!'' என்று அட்டர்ஸன் ஆவேசத்துடன் கத்தினார்.

பூல் கோடாலியை ஓங்கினான். கோடாலியின் அடியால் கட்டிடமே அதிர்ந்தது. அறைக் கதவு கீலில் குதித்து அலறிற்று. பிராண பயத்தால் வீரிடும் மிருகத்தின் அபயக்குரல் போல அறையிலிருந்து மகாகோரமான 'கிரீச்' சத்தம் ஒன்று கேட்டது. இரண்டாம் தரம் கோடாலி விழுந்தது—கதவின் சட்டங்கள் உடைந்து நிலையே நடுங்கிற்று. ஒன்றின்பின் ஒன்றாக நாலு அடிகள் போட்டான்—கெட்டியான மரம், திறமையான வேலைப்பாடு! ஆகையால் ஐந்தாம் அடி விழுந்த பிறகுதான்,

பூட்டு சிதறியோடிற்று; உடைந்த கதவு உட்புற மிருந்த விரிப்பின்மேல் தடாலென்று சாய்ந்தது.

தங்களுடைய செய்கையின் அதிக்கிரமத்தையும் பின் ஏற்பட்ட அமைதியையும் கண்டு அவர்களே கொஞ்சம் திகைத்துப்போய்விட்டார்கள். சிறிது நேரம் கழித்துச் சமாளித்துக் கொண்டு, உள்ளே எட்டிப் பார்த்தார்கள். விளக்கு வெளிச்சத்தில் அறை பூராவும் நன்ருகத் தெரிந்தது. கணப்பு கண கண வென்று எரிந்து பொறி தெறித்துக் கொண்டிருந்தது; கெட்டில் 'உஸ்' ஸென்று சத்த மிட்டது; ஓரிரண்டு அலமாரி அறைகள் திறந் திருந்தன; மேஜையின்மேல் காகிதங்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட் டிருந்தன. தேனீர் தயார் செய்ய அடுப்பினருகே சாமான்கள் தயாரா யிருந்தன. ரொம்ப அமைதியான அறை—மருந்துச் சாமான்கள், சீசாக்கள் இல்லாவிட்டால், லண்டனி லேயே மிகவும் சர்வ சாதாரணமான அறை அது என்றுகூடச் சொல்லிவிடலாம்.

நட்ட நடுவில் ஒரு மனிதன் உருவம் கிடந்தது. வலிப்பு வந்ததுபோல இழுத்துக்கொண்டு போயிருந் தது; ஆனல் கொஞ்சம் துடித்துக்கொண்டு மிருந்தது. மெல்ல அருகே நெருங்கி, அதை முதுகுப் பக்கமாகத் திருப்பிப் போட்டார்கள். அது எட்வர்ட் ஹைட்! அவன் உடம்பிற்கு மிகவும் பெரிதாயிருந்த உடைகளை உடுத்திருந்தான்—அவை ஜெகிலின் உடைகள் போலிருந்தன. உயிர் இருப்பதுபோல

அவனுடைய முகத்து நரம்புகள் சில அசைந்தன. ஆனால் உயிர் போய்விட்டது. கையிலிருந்த உடைந்த சீசாவிலிருந்தும், அறையில் பரவியிருந்த காரமான திராவக வாசனையிலிருந்தும், ஹைட் தற்கொலை புரிந்துகொண்டுவிட்டான் என்று அட்டர்ஸன் அறிந்தார்.

"இவனை இனிமேல் நாம் காப்பாற்றவோ அல்லது தண்டிக்கவோ முடியாது; தாமதித்து வந்துவிட்டோம்! ஹைட் இறந்துபோய்விட்டான். இனிமேல் நாம் உன் யஜமானர் ஜெகிலின் தேகத்தைக் கண்டுபிடிக்க வேண்டியதுதான் பாக்கி, அல்லவா?"

ஆபரேஷன் மேடை, கட்டிடத்தின் பெருவாரியான பாகத்தை அடைத்துக் கொண்டிருந்தது; கீழ்த்தளம் பூராவும் பரவியிருந்தது. அதிலிருந்து ஒரு ரேழியின் மூலம் குறுக்குத் தெருவிலிருந்த வாசலுக்குப் போகலாம். அறையிலிருந்தே நேராக வாசலுக்கு ஒரு தனிப் படி இருந்தது. இன்னும் சில இருட்டு அறைகளும் ஒரு விசாலமான கீழறையுமிருந்தன. இவைகளையெல்லாம் நன்றாகச் சோதனை போட்டார்கள். மூலை முடுக்கிலெல்லாம் தேடினார்கள். அறைகளெல்லாம் காலியாயிருந்தபடியால் அங்கே தேடுவதற்கே ஒன்றுமில்லை. அவ்வைகளிலிருந்த புழுதியைப் பார்த்தால் அவை ரொம்ப காலமாகத் திறக்கக்கூடப் படவில்லை என்று தெரிந்தது. டாக்டர் ஜெகிலுக்கு முன்னே அவ்விடத்தில் குடியிருந்த டாக்டர் காலத்திலிருந்து ஏதோ உபயோக

மில்லாத சாமான்களெல்லாம் கீழறையில் அடைக்கப்பட்டிருந்தன. அதைத் திறந்தபோதே, வருஷக் கணக்காக, பாயைப்போலப் படிந்திருந்த ஒட்டறை, வழியை அடைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தார்கள். ஆகையால் மேலே சோதனை போடுவது பயன்படாது என்று கண்டார்கள். டாக்டர் ஜெகில் உயிருடனே அல்லது இறந்தோ அந்த வீட்டில் இருப்பதாகக் கொள்வதற்கு எந்தவிதமான அடையாளமும் தென்படவில்லை.

ரேழியின் தளவரிசையின் மேல் காலால் தட்டிப்பார்த்து, "இங்குதான் அவர் உடம்பைப் புதைத்திருக்கவேண்டும் ஸார்" என்றான் பூல்.

"அல்லது அவர் தப்பியோடி இருக்கலாம்!" என்று சொல்லிக்கொண்டே அட்டர்ஸன் வாயிற் கதவைப் போய்க் கவனித்துப் பார்த்தார். ஆனால் அது பூட்டியிருந்தது. கிட்டே தளவரிசையில், துருப்பிடித்துப் போய்க் கிடந்த சாவியைக் கண்டார்கள்.

"உபயோகப்படுத்தப்பட்ட சாவி மாதிரி தெரியவில்லையே!" என்றார் அட்டர்ஸன்.

"உபயோகத்திலா? அது ஒடிந்து போயிருக்கிறதே, தெரியவில்லையா? யாரோ காலின் கீழ் போட்டு மிதித்திருக்கிறார்கள்" என்றான் பூல்.

"ஆமாம், பூல், ஒடிந்த இடத்தில் கூடத் துருப்பிடித்துப் போயிருக்கிறதே!"

ஒன்றும் விளங்காதவர்களாக நடுநடுங்கிப் போய் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"இது எனக்கு ஒன்றுமே புரியவில்லை. மேலே அறைக்குப் போவோம், வா!" என்றார் அட்டர்ஸன்.

மௌனமாக மாடிப்படி யேறிச் சென்று அறையிலிருந்த சாமான்களை இன்னும் கவனமாகச் சோதனை செய்ய ஆரம்பித்தார்கள். அடிக்கடி, திகிலுடன், பிரேதத்தைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். ஒரு மேஜைமேல் ரஸாயன ஆராய்ச்சி நடந்த அடையாளங்கள் இருந்தன. பல கண்ணாடித் தட்டுகளில் வெண்மையான ஏதோ ஒரு உப்பு குவியல் குவியலாக அளந்து போடப்பட்டிருந்தது. பாவம்! ஏதோ ஒரு ஆராய்ச்சிக்காகச் சேகரித்தது முடிவடையாமல் போய்விட்டது!

"இந்த மருந்துச் சரக்குதான், ஸார், நான் அவருக்குக் கொண்டுவந்து கொடுத்துக்கொண்டேயிருந்தது" என்றான் பூல். அப்பொழுது கெட்டிலில் தண்ணீர் 'புஸ்' என்று பொங்கி வழிந்தது. அந்தச் சத்தம் அவர்களைத் திடுக்கிடச் செய்துவிட்டது.

அடுப்பண்டை வந்து பார்த்தார்கள். கதகதப்பாக இருக்குமாறு, சாய்மான நாற்காலி அதன் அருகில் இழுத்துப் போடப்பட்டிருந்தது. கைக் கெட்டும் தூரத்தில் தேயிலைப்பானம் தயாரிப்பதற்கு வேண்டிய சாமான்கள் இருந்தன. சர்க்கரை முதற் கொண்டு பாத்திரத்தில் போட்டுவைத்திருந்தது; அலமாறி ஒன்றில் இருந்த புஸ்தகங்களில் ஒன்று திறந்து கிடந்தது. அது மதவிஷயமானதாயிருந்தது. ஜெகில் அதைப் பற்றிப் பல தடவைகள்

THE MADURA TAMIL

அட்டர்ஸனிடம் புகழ்ந்து பேசினது அவர் நினைவிற்கு வந்தது. அப்படியிருக்க, அவர் கைப் படவே, அதில் அநேக இடங்களில், மதத் துவேஷ மான குறிப்புகள் எழுதியிருந்தது அவருக்குத் திகைப்பை உண்டாக்கிற்று.

அடுத்தாற்போல அறையைச் சோதனை போடும்பொழுது, நிலைக்கண்ணாடியிடம் வந்து சேர்ந் தார்கள். அதைப் பார்த்ததும் தங்களை அறியாம லேயே அவர்கள் திகிலடைந்தார்கள். அது ஒரு பக்க மாகத் திருப்பி வைக்கப்பட்டிருந்தது. கூரையின் மேல் விட்டுவிட்டு விழுந்துகொண்டிருந்த நெருப்பின் சிவப்பு ஜ்வாலை, கண்ணாடி அலமாரிகளில் அநேக இடங்களில் பன்மடங்காக்கப்பட்டு விழுந்தது; அது அந்தக் கண்ணாடியிலும் பிரதிபிம்பமாகத் தெரிந் தது. பயத்தால் வெளுத்துப் போயிருந்த அவர் களுடைய முகங்கள்கூடத் தெரிந்தன.

“இந்தக் கண்ணாடி அநேக விசித்திரங்களைப் பார்த்திருக்கிறது, ஸார்” என்று பூல் மெல்லச் சொன்னான்.

“ஆமாம், அதே ஒரு விசித்திரம்தானே! பின் எதற்காக ஜெகில்—” என்று ஏதோ சொல்ல வந்தவர் சட்டென்று நிறுத்திக்கொண்டு “ஜெகி லுக்கு இது எதற்காக?” என்றார்.

“நீங்கள் சொல்லுங்கள்!”

அதன் பிறகு மேஜையைச் சோதித்தார்கள். வரிசையாக அடுக்கப்பட்டிருந்த காகிதக் கட்டுகளின்

மேல் ஒரு பெரிய கவர் இருந்தது. அதன் மேல் அட்டர்ஸனின் விலாஸம், டாக்டர் கைப்பட, எழுதி யிருந்தது. வக்கீல் அதை எடுத்து உடைத்தார். பல காகிதங்கள் கீழே விழுந்தன. உயில் ஒன்று இருந்தது. தான் ஆறு மாதங்களுக்கு முன் ஜெகி லிடம் திருப்பிக் கொடுத்தாரே ஒரு உயில்!—அதே மாதிரியே இதிலும் பைத்தியக்காரத்தனமான ஷரத்துக்கள் கண்டிருந்தன. டாக்டர் இறந்தால் மரண சாஸனமாகவும், மறைந்து விட்டால் தான சாஸனமாகவும் இருக்கும்படியாக அது எழுதப்பட் டிருந்தது. ஆனால் எட்வர்ட் ஹைடுக்குப் பதிலாக அட்டர்ஸன், ஜெகிலுக்கு வாரிசாகத் தாக்கல் செய்யப்பட்டிருந்தார். அவர் அதைப் படித்ததும் சொல்ல முடியாத திகைப்படைந்து விட்டார். பூலின் முகத்தைப் பார்த்தார்; மறுபடியும் தஸ்தாவேஜு களைப் பார்த்தார்; இறந்து கிடந்த துரோகியையும் பார்த்தார். அவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

"என் தலை சுற்றுகிறது, பூல்!" என்றார். "இவ் வளவு நாளாக இந்தத் தஸ்தாவேஜு ஹைடினிடம் இருந்திருக்கிறது! என்னிடத்தில் அவனுக்கு லவ லேசமும் நல்லெண்ணம் இருக்கக் காரணமில்லை. அவனுக்குப் பதிலாக உயிலில் நான் ஜெகிலின் வாரிசாகத் தாக்கலாகி யிருப்பதைக் கண்டும் அவன் சும்மாவா இருந்திருப்பான்? ஆத்திரம் பொங்கி யிருக்காதா அவனுக்கு? ஏன் இந்த உயிலைக் கிழித்

தெரியாமல் வைத்திருக்கிறான்? என்ன விஷயம் என்று எனக்கு விளங்கவில்லையே!"

அடுத்த காகிதத்தை எடுத்துப் பார்த்தார். அது டாக்டர் கையால் எழுதப்பட்ட ஒரு சிறு குறிப்பு. தலைப்பில் தேதி போட்டிருந்தது.

"பூல், பூல், ஜெகில் இன்று இங்கே இருந்திருக்கிறான்—உயிருடன் இருந்திருக்கிறான்!" என்று உணர்ச்சி மிகுதியால் கத்தி விட்டார் அட்டர்ஸன். "இவ்வளவு சுருக்கமான காலத்தில், இவ்வளவு சீக்கிரமாக, அவனைப் பைசல் செய்திருக்க முடியாது. அவன் இன்னும் உயிருடன் தான் இருக்க வேண்டும்! அவன் தப்பி யோடியிருக்க வேண்டும்! ஆனால்—ஏன் அவன் ஓடவேண்டும்? எப்படி ஓடினான்? அப்படியானால் இது தற்கொலை யென்று நாம் சொல்லக் கூடுமா?—ஓ, நாம் இப்பொழுது ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கவேண்டும், பூல். ஏனென்றால் இப்படி ஆராய்ச்சி செய்துகொண்டு போகும் பொழுது, ஒருவேளை, உன் யஜமானரையே ஒரு பெருத்த ஆபத்தில் கொண்டு வந்து விடும்படி ஏற்பட்டுவிடப் போகிறதே!"

"அதை வாசியுங்களேன், ஸார்!"

"என்ன செய்தி உள்ளே இருக்கிறதோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது. ஒருவிதமான கெடுதலும் இல்லாமல் கடவுள் தான் அனுக்கிரகம் செய்ய வேண்டும்!" என்று சொல்லிக்கொண்டு வக்கீல் காகிதத்தைப் படிக்கலானார்.

"என் அன்பார்ந்த அட்டர்ஸன்! இந்தக்கடிதம் உன் கைக்கு வரும்போது, நான் நிச்சயம் மறைந்து போய்விடுவேன். எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களால் அது ஏற்படும் என்று எனக்கே இப்பொழுது தெரியாது; ஆனால், இதென்னமோ எனக்கு நிச்சயமாகத்தெரிகிறது—என் மனதும், சொல்லிலடங்காத என் தற்கால நிலைமையின் விசேஷ சந்தர்ப்பங்களும் அப்படிச் சொல்லுகின்றன—என் முடிவு காலம் நிச்சயமென்றும் அதி சீக்கிரமாகவே நெருங்கிவிட்டதென்றும் தெரிகிறது. ஆகையால் லான்யன் உன்னிடம் சில விவரங்கள் கொடுத்திருப்பதாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறானே, அந்த விவரங்களைப் போய்ப் படித்துப்பார்! அதற்குமேல் விசேஷத் தகவல்கள் வேண்டுமென்று நீ விரும்பினால், உனக்கு நண்பன் என்று சொல்லிக்கொள்ள அருகதையற்ற பேதையாகிய நான் எழுதிய யதார்த்தமான நிகழ்ச்சிகளின் வரலாற்றையும் படி.

ஹென்றி ஜெகில்"

"இன்னொரு கடிதமும் இருந்ததா என்ன?" என்று அட்டர்ஸன் கேட்டார்.

"இதோ, இருக்கிறது, ஸார்" என்று பூல் அநேக இடங்களில் முத்திரை செய்யப்பட்டிருந்த ஒரு பெரிய கவரைக் கொடுத்தான்.

வக்கீல் அதைச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டார்.

"இதைப்பற்றி ஒன்றும் வெளியில் பிரஸ்தாபமே கூடாது, தெரியுமா பூல்? உன் யஜமானர் இறந்திருந்தாலும், தப்பியோடியிருந்தாலும், அவருடைய கௌரவத்தையாவது நாம் காப்பாற்ற முயலுவோம். என்ன? இப்பொழுது மணி பத்தாகிறது. நான் வீடு சென்று இந்த தஸ்தாவேஜுகளைச் சாவதானமாகப் படிக்கவேண்டும். ஆனால், நடுநிசிக்குமுன் இங்கே திரும்பி வருகிறேன். பிறகு போலீஸுக்குத் தகவல் கொடுப்போம்."

ஆபரேஷன் மேடையிலிருந்த ஹாலின் கதவைப் பூட்டிக்கொண்டு வெளியே சென்றார்கள். வேலைக்காரர்கள் மறுபடியும் கணப்பின் அருகே கூடினார்கள். ஜெகிலின் மர்மத்தை விளக்கி விவரிக்கும் அந்த இரண்டு வரலாறுகளையும் படிப்பதற்காக அட்டர்ஸன் தம் வீட்டுக்குத் திரும்பினார்.

# 9

## லான்யன் கண்ட அதிசயம்

ஜனவரி ஒன்பதாம் தேதியன்று, அதாவது நாலு நாட்களுக்கு முன், சாயந்திரத் தபாலில் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட கடிதம் ஒன்று எனக்கு வந்தது. என் தொழிலைச் சேர்ந்தவனும் என் பழைய சகபாடியுமான டாக்டர் ஜெகிலின் கையெழுத்தில் விலாசம் எழுதியிருந்தது. அதைக் கண்டு நான் ஆச்சரிய மடைந்தேன். ஏனென்றால், நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக் கொள்ளும் வழக்கமே கிடையாது. மேலும் முதல் நாள் இரவுதான் நான் அவன் வீட்டில் அவனுடன் சாப்பிட்டேன். ரிஜிஸ்டர் தபால் மூலம் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொள்ளும்படியான விவகாரம் ஒன்றும் எங்களுக்குள் கிடையாது. கடிதத்தில் கண்டிருந்த் சமாசாரத்தைப் படித்ததும் நான் இன்னும் அதிக வியப்படைந்தேன். கடிதம் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது :—

(?) டிஸம். 10, 18—

" அன்பார்ந்த லான்யன்,

" நீ என்னுடைய நெடுநாள் நண்பர்களில் ஒருவன். சாஸ்திர ஆராய்ச்சி சம்பந்தமாக நமக்குள் சில சமயங்களில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் எந்தக் காலத்திலும் நமது பரஸ்பர அன்பிற்கு பங்கமே ஏற்பட்ட தில்லையென்று நினைக்கிறேன்—அதாவது என் சம்பந்தப்பட்ட மட்டிலாவது அப்படி ஏற்பட்டதேயில்லை. 'ஜெகில்! என் உயிர், என் கௌரவம், என் சுயப்பிரக்ஞை, எல்லாம் இப்பொழுது உன் கையி லிருக்கிறது' என்று என்றாவது நீ என்னிடம் சொல்லியிருந்தால், என் சொத்து முழுவதையும் உனக்காக—உன்னைக் காப்பாற்று வதற்காக, நான் தியாகம் செய்திருப்பேன் என்பது நிச்சயம். லான்யன், இப்பொழுது என் உயிர், என் கௌரவம், என் சுயப்பிரக்ஞை— எல்லாம் உன் கையிலிருக்கிறது. நீ மனது வைத்தால் எப்படி வேண்டுமானாலும் செய்ய லாம். இன்றிரவு நீ எனக்கு உபகாரம் செய்யத் தவறினால்—நான் கேட்டுக் கொள்ளுகிறபடி செய்யத் தவறினால்—நான் தொலைந்தேன்! இந்தப் பீடிகையிலிருந்து, நான் ஏதோ உன்னைக் கௌரவப் பிசகான காரியத்தைச் செய்யும்படி கேட்பதாக நீ நினைக்கக்கூடும். நீயே தீர்மானம் செய்துகொள்.

" இன்றிரவு, நீ வேறு அலுவல்களைக் கவனிக்கவே கூடாது—சக்கரவர்த்திக்கு வைத் தியம் செய்யவேண்டு மென்று அரண்மனையி லிருந்து அழைப்பு வந்தபோதிலும் போகக்

கூடாது. உன் வண்டி தயாராயில்லாவிட்டால், வண்டியொன்றை அமர்த்திக்கொண்டு, நேராக என் வீட்டிற்குப் போ; இந்தக் கடிதத்தையும் உதவிக்காக வைத்துக்கொள். என் பட்லர், பூலுக்கு, தேவையான உத்தரவுகள் செய்திருக்கிறேன்.—என்ன செய்யவேண்டுமென்று எழுதியிருக்கிறேன்—ஒரு கம்மாளனுடன் உன்னை எதிர் பார்த்துக்கொண்டு காத்துக்கொண்டிருப்பான். கம்மாளனைக் கொண்டு என் அறையின் பூட்டை உடைத்துவிடு. நீ மட்டும் உள்ளே போகவேண்டும்; இடதுபக்கமிருக்கும் E அடையாளமிடப்பட்ட அலமாரியைத் திறக்கவேண்டியது; பூட்டியிருந்தால் பூட்டை உடைத்துவிடு. மேலேயிருந்து நாலாவது அறையை (டிராயரை) அதிலிருக்கும் சாமான்களுடன் அப்படியே வெளியே இழுத்து எடுக்கவேண்டும். கீழேயிருந்து அது மூன்றாவது அறை. என் மனத்தின் இப்போதைய சஞ்சல நிலைமையில், உனக்கு எங்கே தப்பாக விவரம் கொடுத்துவிடுகிறேனோ என்று கூடப் பயப்படுகிறேன். இதில் ஒருவேளை நான் ஏதாவது தப்பிதமாக எழுதியிருந்தாலும், நான் குறிப்பிடும் டிராயர் எது என்று நீ அதிலிருக்கும் சாமான்களிலிருந்து கண்டுகொள்ளலாம். அதில் சில பௌடர்களும், ஒரு குப்பியும் ஒரு நோட்டுப் புத்தகமும் இருக்கும். அந்த டிராயரை அப்படியே உன் வீட்டிற்கு எடுத்துக்கொண்டு வந்துவிடவேண்டும்.

" இது நீ செய்யவேண்டிய முதல் உதவி. இரண்டாவது: இந்தக் கடிதம் உன் கைக்கு வந்தவுடனேயே நீ புறப்பட்டால், இரவு மணி

பன்னிரண்டிற்கு, நீ உன் வீட்டிற்குத் திரும்பி விடலாம். எதிர்பாராமலோ அல்லது தடுக்க முடியாமலோ ஏற்படும் இடையூறுகளுக்கும் கால தாமதத்திற்கும் கொஞ்ச நேரம் போனுலும், உன் வேலையாட்கள் இரவு வேலை முடிந்து படுக்கச் செல்வதற்குக் கொஞ்சம் நேரம் தாமதமானுலும், நீ உன் அறையில் இரவு பன்னிரண்டு மணிக்குத் தனியாக இரு. ஒருவன் வந்து கதவைத் தட்டுவான், அவன் என் பெயரைச் சொல்லுவான். நீயே, உன் கைப்பட, கதவைத் திறந்து அவனை உள்ளே அழைத்துச் செல். என் அறையிலிருந்து கொண்டுவந்த டிராயரை அவனிடம் கொடுத்துவிடு. அப்பொழுது நீ செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவனுவாய்; என்னுடைய பரிபூர்ணமான நன்றியறிதலுக்கும் பாத்திரமாவாய். இதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்று அறியவேண்டுமென்று நீ அப்பொழுது அவனைக் கண்டிப்பாகக் கேட்பாயாகில், ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு, ஒரு விசித்திரம் நடக்கும். இந்த ஏற்பாடுகள் எவ்வளவு முக்கியமானவை என்பது அப்பொழுது உனக்கே விளங்கும். பைத்தியக்கார சமாசாரம் போலத் தோன்றினுலும், இதில் ஏதாவது ஒன்றை நீ செய்யத் தவறினுலும், நான் இறப்பதோ, அல்லது புத்தி சுவாதீனமற்றுப் போவதோ நிச்சயம். நீ அதற்குப் பழியேற்றுக் கொண்டவனுவாயா?

"இந்த என் கோரிக்கையை நீ நிராதரவு செய்யமாட்டாய் என்று எனக்கு நிச்சயமாகத் தெரிந்தபோதிலும், ஒரு வேளை என் சொற்படி

நீ செய்யமாட்டாயோ என்ற எண்ணமே என் நாடியைத் தளரச் செய்கிறது; என் கையே நடுங்குகிறது. ஒரு புதுப் பிரதேசத்தில் சொல்வதற்கியலாத ஒரு படு அவஸ்தையில் வேதனைப் படும் என்னைப்பற்றிக் கொஞ்சம் எண்ணிப் பார்; ஆனால், நான் கேட்டுக்கொண்டபடி நீ செய்வாயாகில் என் தொல்லைகள், சொல்லும் போதே கழிந்துபோகும் ஒரு கதைபோல், தீர்ந்துபோகும். நண்பா, எனக்கு உதவி செய். என்னைக் காப்பாற்று!

உன் நண்பன்,

ஹெ. ஜெ.

"பின் குறிப்பு:—இதை எழுதி முத்திரையிட்ட பிறகு மற்றொரு பீதி என்னைப் பற்றிக்கொண்டது. ஒரு வேளை தபால் ஆபீஸில் தாமதம் ஏற்பட்டுவிட்டால், இந்தக் கடிதம் உன் கைக்கு நாளைக்குக் காலையில்தான் வரலாம். அப்படியானால், பகலில், உனக்கு எப்பொழுது சௌகரியமோ, அப்பொழுது நான் சொன்னபடி செய்து முடி. நடு இரவில் நான் சொன்ன ஆளை எதிர்பார்த்துக்கொண்டிரு. ஒருவேளை அப்பொழுது உன் உதவியே தேவையில்லாமல் காரியம் தலைக்கு மிஞ்சிப் போனாலும் போகலாம். அன்றிரவும் ஒரு விசேஷமுமின்றிக் கழிந்தால், ஜெகில் தொலைந்தான் என்று நிச்சயம் செய்துகொள்."

இதைப் படித்ததும், என் நண்பனுக்குப் பைத்தியம்தான் பிடித்துவிட்டது என்று நிச்சயம் செய்தேன். ஆனால், சந்தேகத்திற்கு இடமின்றி அது நிச்சயமாகும் வரையில், அவன் கோரியபடி நான் செய்து முடிக்கவேண்டியது என் கடமையல்லவா? அந்தப் பிதற்றல் எனக்கு அர்த்தமே

ஆகவில்லை; ஆகையால் அது எவ்வளவு தூரம் முக்கியமானது என்பதைப்பற்றி நான் ஒரு விதமான தீர்மானத்திற்கும் வர முடியவில்லை. ஆனால், அந்த மாதிரி வாசகம் கொண்ட ஒரு கோரிக்கையை எப்படி அலட்சியம் செய்ய முடியும்? அது மிகவும் பொறுப்பற்ற காரியமாகுமாதலால், கடிதத்தில் கண்டபடி செய்து விடுவதென்று தீர்மானித்தேன். உடனே ஒரு வண்டியை அமர்த்திக் கொண்டு ஜெகிலின் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தேன். பூல், என்னை எதிர்பார்த்துக்கொண்டு, தயாராக இருந்தான். எனக்கு வந்ததைப்போல், அதே தபாலில், அவனுக்கும் ஒரு ரிஜிஸ்டர் செய்த கடிதம் வந்திருந்தது. அதன்படி அவன் உடனே ஒரு தச்சனுக்கும் கொல்லனுக்கும் சொல்லி அனுப்பி யிருந்தான். நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே அவர்கள் இருவரும் வந்து சேர்ந்தார்கள். டாக்டர் ஜெகிலின் அறைக்குப் போகும் வழியி லிருக்கும் ஆபரேஷன் மேடைக்குள் நுழைந் தோம். (அதுதான் உனக்குத் தெரிந்திருக்குமே) கதவு முதல்தரமான கதவு; பூட்டும் அப்படித்தான். கதவைத் திறப்பது மிகவும் சிரமம் என்றும், அதிக பலம் உபயோகித்தால் கதவிற்கே சேதம் ஏற்படு மென்றும் தச்சன் சொன்னான். கொல்லனும் பூட்டை உடைப்பது முடியாத காரியம் என்று முதலில் சொன்னான். ஆனால், நல்ல வேலைக்கார னாகையால் இரண்டு மணி நேரம் வேலைசெய்து,

எப்படியோ கதவைத் திறந்துவிட்டான். பூலும் நானுமாக E அடையாளமிட்ட அலமாரியைத் திறந்தோம். குறிப்பிட்ட டிராயரை வெளியே எடுத்து வைக்கோல் போட்டு மூடினோம். அதை அப்படியே ஒரு துணியில் கட்டி யெடுத்துக்கொண்டு புறப்பட்டேன். நேராக, காவென்டிஷ் ஸ்கொயரிலிருக்கும் என் வீட்டிற்குத் திரும்பினேன்.

வீட்டிற்கு வந்ததும் டிராயரிலிருந்த சாமான்களை எடுத்துப் பார்த்தேன். பௌடர்களெல்லாம் அழகாகத்தான் கட்டிவைக்கப்பட்டிருந்தன. ஆனால் பொட்டணங்கள் மருந்துக் கடைகளிலிருப்பதுபோல அவ்வளவு நேர்த்தியாக இல்லை. ஆகையால் அவைகளெல்லாம் டாக்டர் ஜெகிலால் சொந்தமாகவே தயார் செய்யப்பட்டவை என்பது தெரிந்தது. ஒரு பொட்டணத்தில் வெண்மையான உப்புக்கல் போன்ற ஒன்று இருந்தது. அடுத்தாற்போல, குப்பியைப் பார்த்தேன். ரத்தச் சிவப்புக்கொண்ட ஒரு திராவகம் அதில் பாதி மட்டத்திற்கு இருந்தது. மூக்குக்குக் காரமாயும், பாஸ்பரஸ்ஸும், ஏதோ ஒரு செய்நீரும் கலந்ததாய் இருந்தது. அதில் வேறென்ன மருந்துகள் சேர்ந்திருந்தன வென்று கண்டுபிடிக்க முடியவில்லை. நோட்டுப்புத்தகத்தில் வரிசையாகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த சில தேதிக் குறிப்புகளைத்தவிர வேறொன்றுமில்லை. இந்தக் குறிப்புகள் பல வருஷங்களாகச் செய்யப்பட்டு வந்திருந்தன. ஆனால் சென்ற வருஷத்திற்குப் பிறகு குறிப்புகள்

திடீரென்று நின்றிருந்தன. இங்குமங்கும் ஒவ்வொரு தேதியின் கீழும் ஒரு வார்த்தைக்கு மேற்போகாத ஒரு சிறு குறிப்பிருந்தது. நூற்றுக்கணக்கான தேதிகளின் நடுவில் "இரட்டை" என்ற வார்த்தை ஆறு இடங்களில்தான் காணப்பட்டது. முதலிலேயே ஓரிடத்தில் "முழுத் தோல்வி!" என்று பல ஆச்சர்யக்குறிகள் போடப்பட்டிருந்தன. இதெல்லாம் என் ஆவலை அதிகரித்தனவே ஒழிய, விஷயத்தை விளக்கவில்லை. ஏதோவொரு திராவகக் குப்பி, ஒரு உப்புப் பொட்டணம், ஒருவிதமான பயனும் அளிக்காத சில ஆராய்ச்சிகளின் குறிப்புப் புஸ்தகம் ஒன்று—இவைகளை நான் என் வீட்டிற்குக் கொண்டுவருவதால் என்னுடைய நண்பனின் "உயிரையும், கௌரவத்தையும் புத்தி சுவாதீனத்தையும்" எப்படிக் காப்பாற்றப்போகிறேன்? அவனுடைய ஆள் இங்கே வரக் கூடுமென்றால், ஏன் அங்கேயே போய் டிராயரை எடுத்துக்கொள்ளக் கூடாது? அதில் ஏதாவது தடங்கல் இருக்கலாமென்று வைத்துக் கொண்டாலும், நான் ஏன் அந்த ஆளை ரகசியமாக என் வீட்டிற்குள்ளே அழைத்துவர வேண்டும்? யோசிக்க யோசிக்க, மூளைக் கோளாறைத் தவிர அதில் வேறொன்றுமில்லையென்று எனக்குத் தோன்றிற்று. என் வேலையாட்களையும் படுத்துக் கொள்ளும்படி அனுப்பிவிட்டபோதிலும், தேவையானால் என்னையே பாதுகாத்துக் கொள்வதற்காக ஒரு பழைய கைத் துப்பாக்கியை உபயோகப்படுத்து

வதற்கு லாயக்காகத் தயார்செய்து வைத்துக்கொண்டேன்.

மணி பன்னிரண்டு அடித்ததுதான் தாமதம்; யாரோ மெதுவாக என் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. நானே சென்று கதவைத் திறந்தேன். வாசல் தூணின் நிழலில் குட்டையான மனிதன் ஒருவன் பதுங்கினதுபோல நிற்பதைக் கண்டேன்.

"டாக்டர் ஜெகிலிடமிருந்தா வருகிறீர்?" என்று கேட்டேன்.

ஏதோ நிர்ப்பந்தம் கொண்டவன் போல, "ஆமாம்!" என்று அவன் சமிக்ஞை செய்தான். நான் அவனை உள்ளே வரச் சொன்ன பிறகும் கூட, இருட்டாகவிருந்த தெருவைக் கவனமாகத் திரும்பிப் பார்த்துவிட்டு, பிறகுதான் உள்ளே வந்தான். சிறிது தூரத்தில் ஒரு போலீஸ்காரன் கைவிளக்குடன் வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டவுடனே, இந்த ஆசாமி திகிலடைந்து, வேகமாக உள்ளே நுழைந்தது போல எனக்குத் தோன்றிற்று.

இதெல்லாம் எனக்கு ரொம்ப சந்தேகமாக இருந்தது. அவனைப் பின் தொடர்ந்து என் அறைக்குள் போகும் பொழுது, என் துப்பாக்கியின் மேல் கையை வைத்துக் கொண்டே போனேன். அறைக்குள் நுழைந்ததும் விளக்கு வெளிச்சத்தில் அவன் முகத்தை நன்றாகப் பார்த்தேன். அவனை அதற்கு முன் நான் பார்த்ததே கிடையாது, நிச்சயம்.

நான் முன்பே சொன்னதுபோல அவன் மிகவும் குட்டை. அவனுடைய தோற்றமே அருவருப்பா யிருந்தது. பார்க்கிறதற்கு மிகவும் குன்றி இளைத்துப் போனது போலத் தோன்றினலும், அவனுடைய நடமாட்டம் வேகமாகவும் சுறுசுறுப்பாகவுமே இருந்தது; இது ரொம்ப ஆச்சரியமாக இருந்தது; அவன் என்னுடன் கூட இருந்தபொழுது எனக்கு ஏதோ வொரு மனக்கலவரம் ஏற்பட்டது! அது ஏதனல் என்பதே எனக்கு ஒரு திகைப்பாக இருந்தது. என் சிந்தனையையே மரத்துப் போகும் படி செய்துவிட்டது. என் நாடி விழுந்து விட்டது. அதற்குக் காரணம் தனியாக எனக்கு ஏற்பட்ட ஏதோ ஒரு வெறுப்புத்தான் என்று அப்பொழுது நினைத்தேன். அது ஏன் என்னை அவ்வளவு பாடு படுத்திற்று என்றுதான் எனக்கு அப்பொழுது விளங்கவில்லை. ஆனல், இப்பொழுது எனக்குத் தெரிகிறது. அதற்குக் காரணம் வேறு. மனித சுபாவமே ஏதாவதொரு விபரீதமான தீமையைக் கண்டால் வெறிக்கிறதல்லவா-அதுதான் என் கல வரத்திற்குக் காரணம்.

உள்ளே நுழைந்தது முதலே அவன் என் மனத்திற்கு மகா அசங்கியமான பிரகிருதியாகப் பட்டான். அவன் உடை அணிந்திருந்த தினுசே சாதாரணமாக எவனுக்கும் சிரிப்புண்டாக்கும். அவனுடைய ஆடைகள் விலை யுயர்ந்தவைதான்; அனல் அவனுக்கு மிகவும் பெரியனவாக

'தொளதொள' வென்று இருந்தன. சராய் காலடியில் வந்து விழுந்து தொங்கிற்று; பூமியில் புரளாமல் மேலே மடக்கிவிடப்பட் டிருந்தது. சட்டையின் இடுப்புப் பாகம் வயிற்றுக்குக் கீழிறங்கிப் போயிருந்தது. கழுத்துப்பட்டை தோள்களில் விரிந்து கிடந்தது. விசித்திர மென்ன வெனில், இந்தக் கோமாளி வேஷத்தைக்கண்டும் எனக்குச் சிரிப்பு வரவில்லை. அதற்குப் பதிலாக, என் முன் நின்ற பிராணியின் அமைப்பில் அசாதாரணமானதும் எங்கும் தென்படாததுமான பிறவியிலேற்பட்ட ஏதோஒரு அங்கக்குறை உடனே என்னைக் கலக்கி, திடுக்கிடச்செய்து, வெறுப்பை ஊட்டியது. அந்த விசித்திரப் பிறவிக்கு இந்த விநோத ஆடை பொருத்தமாகவே இருந்தது; அந்த விகாரத்தை எடுத்துக் காட்டுவதாயுமிருந்தது. அம்மனிதனின் இயற்கை, குணம் இவைகளை அறியவேண்டுமென்று எனக்குத் தோன்றிய ஆவலுடன், அவன் யார், அவன் பிறப்பு, பூர்வோத்ரம், அவன் அந்தஸ்து, வேலை—இவைகளை அறிய வேண்டு மென்ற ஆவலும் சேர்ந்துகொண்டது.

இதையெல்லாம் எழுதுவதற்கு இவ்வளவு நேரம் ஆகிவிட்டதே தவிர, அப்பொழுது சில விநாடிகளில் தோன்றிவிட்டன. வந்தவன் ஏதோ ஒரு பயங்கரமான மனக்கிளர்ச்சியில் அவஸ்தைப்படுபவன் போலத் தென்பட்டான்.

“அதை எடுத்துக்கொண்டு வந்துவிட்டீர்களா?

அதைஎடுத்துக்கொண்டு வந்துவிட்டீர்களா?" என்று ஆவலுடன் கேட்டுக்கொண்டு, அந்த ஆத்திரத்தில் என் தோளின்மேல் கை வைத்து என்னைக் குலுக்க ஆரம்பித்தான்.

அவன் தொட்டவுடனேயே, என் உடலில், ரத்தம் உறைந்து போனதுபோல, ஒரு வேதனை ஏற்பட்டது. அவனிடமிருந்து விலகி, "நீர் யாரென்றே இன்னும் எனக்குத் தெரியாதே—அதை நீர் மறந்து விட்டீரோ? முதலில் தயவு செய்து உட்காரும்!" என்றேன். நானும் என் வழக்கமான இடத்தில் உட்கார்ந்தேன். அந்த நள்ளிரவு நேரம், என் மனக்கலவரம், அவனுடைய விபரீதத் தோற்றத்தால் ஏற்பட்ட சஞ்சலம்—இதெல்லாம் சேர்ந்து என் அமைதியைக் குலைத்துவிட்டன; ஆனாலும் ரொம்ப சமாளித்துக்கொண்டு, கூடிய மட்டும், எப்பொழுதும் போலவே இருக்க முயன்றேன்.

"என்னை மன்னியுங்கள், டாக்டர் லான்யன்! நீங்கள் சொல்வது சரி. என் ஆத்திரத்தில் மரியாதையைக்கூட மறந்து விட்டேன். உங்கள் நண்பன் டாக்டர் ஜெகில் சொன்னபடி நான் இங்கே வந்திருக்கிறேன். விஷயம் மிகவும் முக்கியமானது. அவர் சொன்னது—" என்று மரியாதையுடன் பேசிக் கொண்டு வந்தவன் திடீரென்று பேச்சை நிறுத்தி, குரல் வளையைப் பிடித்துக்கொண்டான். அவன் எவ்வளவோ அமைதியாக இருக்கவேண்டுமென்று முயன்றான் என்பது தெரிந்தது. வலிப்பு வருவதைத்

தடுக்க முயலுபவன்போல அவன் அவஸ்தைப்பட்டான். "அவர் சொன்னதாவது,—ஒரு டிராயரில்—

அவனுடைய ஆத்திரத்தைப் பார்ப்பதற்கு எனக்குப் பரிதாபமாக இருந்தது. என் ஆவலையும் என்னால் அடக்கமுடியவில்லை.

மேஜைக்கு அருகில், தரையில், மூடியபடியே கிடந்த டிராயரைச் சுட்டிக்காட்டி, "அதோ! அங்கே இருக்கிறது" என்றேன்.

அவன் அதன்மேல் பாய்ந்தான். திடீரென்று நின்று மார்பின்மேல் கைவைத்துக்கொண்டான். அவனுடைய இரண்டு தாடைகளும் இறுகுவதுபோல பற்கள் நர நரவென்று உராயும் சத்தம் என் காதில் நன்ருய்க் கேட்டது. அவன் முகமே பிரதேக்களை கொண்டது. அவன் இறந்து போய்விடுவானே என்றே நான் பயந்தேன்.

"நிதானப்படுத்திக் கொள்ளும்!" என்றேன். ஒரு கோரமான புன்சிரிப்புடன் என்னைத் திரும்பிப் பார்த்துவிட்டு, ஏதோ கடைசியாக ஒரு தீர்மானத்திற்கு வந்தவன்போல, மூடியிருந்த துணியை எடுத்து எறிந்தான். உள்ளேயிருந்த சாமான்களைப் பார்த்தான். அப்பொழுது அவனுக்கு ஏற்பட்ட ஆறுதலில் வாய்விட்டு அலறிவிட்டான். நான் கல்போலச் சமைந்துபோய் உட்கார்ந்திருந்தேன். அடுத்த நிமிஷம் அவன் தன்னை நிதானித்துக்கொண்டு "அவுன்ஸ் கிளாஸ் இருக்கிறதா?" என்று கேட்டான்.

நான் என் இடத்திலிருந்து எழுந்திருப்பதற்கே

முயற்சி செய்யவேண்டியதாகிவிட்டது. கிளாஸைக் கொடுத்தேன்.

புன்சிரிப்புடன் தலையசைத்து எனக்கு வந்தனம் கூறி, சிவப்புத் திராவகத்தில் கொஞ்சம் அளந்து விட்டுக்கொண்டு, ஒரு பௌடரை அதில் கலந்தான். முதலில் மங்கல் சிவப்பாக இருந்த அந்த மருந்து உப்பு கரையக் கரைய, நல்ல சிவப்பாகி, பொங்க, ஆவி வெளியேறிற்று. திடீரென்று அது நின்று, திராவகம் கறுத்த சிவப்பாகி, மறுபடியும் மங்கலான பச்சையாக மாறிற்று. இந்த மாறுதல்களை யெல்லாம் மிகவும் கவனமாக உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தவன், புன்சிரிப்புடன் கிளாஸை மேஜையின்மேல் வைத்து விட்டு என்னைப் பார்த்துப் பேசலானான்.

" இனிமேல் ஆகவேண்டியதைக் கவனிப்போம். நீர் புத்திசாலியாயிருந்தால், நான் சொல்லுகிறபடி கேட்பீர். மறுபேச்சின்றி இந்தச் சீசாவை எடுத்துக் கொண்டு நான் வெளியே போய்விட சம்மதப் படுவீரா? அல்லது இந்த விஷயத்தைப் பற்றி எல்லா வற்றையும் அறிந்துகொண்டுவிட வேண்டுமென்ற ஆவல் உமக்கு மிதமிஞ்சிப் போய்விட்டதா? யோசனைசெய்து பதில் சொல்லும்; ஏனெனில் நீர் சொல்லுகிறப்டி நான் செய்யவேண்டும். ஒன்று, இந்தச் சம்பவத்தின் மூலம் ஒருவிதமான பலனும் பெறுமல் நீர் முன் இருந்தது போலவே இருந்து விடலாம்—மரண சங்கடமான நிலையிலிருந்தவனுக்கு உபகாரம் செய்ததை 'ஒரு பலனாகக் கொண்டா

லொழிய. அல்லது, நீர் இஷ்டப்பட்டால், இங்கே, இந்தஅறையில், இந்த க்ஷணம், விஞ்ஞானத்தில் ஒரு புதுப்பகுதியே, கியாதிக்கும் அதிகாரத்திற்கும் வழியாக இருக்கும் ஒரு புதுப்பாதையே, உமக்குத் தென்படும். சைத்தானின் நிரீசுவர வாதத்தையும் அவநம்பிக்கையையும் கூடத் திகைக்கச் செய்யக் கூடிய ஒரு அதிசயம் உமது பார்வையைக் கொள்ளை கொள்ளும்!"

எனக்கு அப்பொழுது கொஞ்சங்கூட அமைதி இல்லை; அமைதி இருப்பதாகப் பாசாங்கு செய்து கொண்டு, "ஸார், நீர் ஏதோ, விடுகதைகள் பேசுகிறீர்; ஆகையால் நான் உம்மை நம்ப முடியவில்லை என்று சொன்னால் நீர் ஆச்சரியப்படவேண்டியதில்லை. ஆனால் நான் இவ்வளவு தூரம், எனக்கு ஒன்றுமே விளங்காத வழியில், உமக்கு ஒத்தாசை செய்த பிறகு, முடிவையும் பார்த்துத் தானாக வேண்டும் — அதில் நான் தயங்கமாட்டேன்!" என்றேன்.

"சரி, லான்யன், உன் உறுதிமொழிகளை நினைவில் வைத்துக் கொள்ளு. நடக்கப்போவது, நமது தொழிலின் ரகசியத்தைச் சேர்ந்தது. இப்பொழுது, லான்யன், நான் சொல்வதைக் கேள். ரொம்பக்காலமாக மிகவும் குறுகிய லௌகீக நோக்கங்களிலேயே பற்றுதல்கொண்டிருந்ததால், பிடிவாதமாக, வைத்திய சாஸ்திரத்தின் மேம்பட்ட லோகாதீத குணங்களை இல்லையென்று சாதித்து வந்தாய்—

உனக்கு மேலானவர்களை நீ கேலி செய்து கண்டித்து வந்தாய்—இதோ பார்!"

அவன் கையிலிருந்த மருந்தை ஒரே வாயாகக் குடித்தான். ஒரு அலறல் சத்தம்! அவன் தட்டுத் தடுமாறி மேஜையைப் பிடித்துக்கொண்டான். வாயைத் திறந்து திறந்து திணறிக்கொண்டு பரக்கப் பரக்க விழித்தான். நான் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே, என் கண்முன், அவனிடம் ஒரு மாறுதல் ஏற்பட்டதுபோலத் தோன்றிற்று. அவன் சரீரம் உப்பியது போலத் தென்பட்டது! அவனுடைய முகம் திடீரென்று கறுத்து, உறுப்புக்கள் கரைந்து, கலந்து, மாற ஆரம்பித்ததுபோலிருந்தது! அடுத்த நிமிஷம் என்னையறியாமலே நான் குதித்தெழுந்து சுவரில் சாய்ந்து கொண்டேன்! நான் கண்ட அந்த அதிசயத்திலிருந்து என்னைப் பாதுகாத்துக் கொள்பவன்போல கையைத் தூக்கிக்கொண்டேன். என் மனது நிலைகாணாத நதியில் மூழ்கிவிட்டது.

" அட கடவுளே! அட கடவுளே!" என்று பல தரம் வாய்விட்டு அலறினேன். என் கண் முன்னாலேயே, வெளுத்த முகத்துடனும், நடுக்கும் தேகத்துடனும், பாதி மூர்ச்சை கொண்டவன்போல, தன்முன், கைகளால், இருளில் தடவுபவன்போல தடவிக்கொண்டு நின்றான்—ஹென்றி ஜெகில் சாவிலிருந்து மீண்டு வந்தவன்போல!

அடுத்தாற்போல, ஒரு மணி சாவகாசம் அவன் என்னிடம் சொன்னதையெல்லாம் இதில் எழுத

எனக்கு மனம் வரவில்லை. நான் பார்த்தது பார்த்தது தான், கேட்டது கேட்டதுதான்: என் மனது நொந்து போய்விட்டது. இப்பொழுது அந்தத் தோற்றம் என்முன்னிருந்து மறைந்தபிறகு, அது நிஜந்தானு என்று என்னையே கேட்டுக்கொள்ளு கிறேன். என்னல் பதில் சொல்ல இயலவில்லை. வேரோடு கல்லியெடுத்ததுபோல என் உயிர் ஆட்டம் கொண்டுவிட்டது. என் தூக்கமே போய்விட்டது. இரவும் பகலுமாக, மகா கோரமான பீதி என்னை விட்டகலாமல் வாட்டுகிறது. என் காலம் குறுகி விட்டது. நான் விரைவில் சாகவேண்டியதுதான்— நிச்சயம். ஆனாலும் நான் கண்டதை நம்பாமல் சாகிறேன். பச்சாத்தாபத்தால் பெருகிய கண்ணீருடன் அவன் என்னிடம் விவரித்துக் கூறிய கொடுஞ் செயல்களைப்பற்றி எண்ணினாலும் என் குலை நடுங்குகிறது. அட்டர்ஸன், நான் ஒன்று சொல்லுகிறேன். அதை நீ நம்புவாயா? நாட்டில், மூலைமுடுக்குகளெல்லாம், கார்யூவைக் கொலை செய்ததற்காக வலை வீசித் தேடுகிறார்களே, ஹைட்— அவன்தான் அன்றிரவு என் வீட்டிற்கு வந்தது!— ஜெகிலே சொன்னன், போதுமா?

ஹேஸ்டி லான்யன்.

# 10

# ஜெகில் எழுதிவைத்த வரலாறு

'நான் 18-ம் வருஷம் பிறந்தேன். எனக்கு நல்ல பிதுரார்ஜித சொத்து இருந்தது. இயற்கையாகவே, நான் புத்திசாலி என்று பெயர்; நல்ல உழைப்பாளியும்கூட. எப்பொழுதும் ஏதாவது செய்துகொண் டிருக்கும் ஊக்கம் கொண்டவன். நல்லவர்களும் பெரியோர்களும் கெட்டிக்காரன் என்று பாராட்ட வேண்டுமென்பது என் ஆசை. ஆகையால் பிற்காலத்தில், கௌரவத்துடனும் கியாதியுடனும் வாழ்வதற்குத் தூண்டுதலாக இருக்க வேண்டிய எல்லா குணங்களும் என்னிடம் பொருந்தியிருந்தன என்று சொல்லலாம். என் குறைகளுக்குள்ளேயே ரொம்பக் கெடுதலானது என்று நான் கருதினது இது ஒன்றுதான்—அடக்க முடியாத ஒரு குஷால் தன்மை. இந்தத் தன்மை தானே வாழ்க்கையில் பலருக்கு இன்பமளிப்பதாக இருக்கிறது? ஆனால் நானோ, என்னுடைய உன்னத லட்சியங்களுக்கும் அதற்கும் வெகுதூரம் என்று

எண்ணி, அதை வெறுத்தேன். யாருக்கும் கிடைக்கப்பெறாத அறிவு வாய்ந்தவன் என்று பெயர் வாங்கி, உலகத்திலே, தலை நிமிர்ந்து நடக்க வேண்டுமென்பது என்னுடைய பெருமித ஆசை. ஆகையால் நாளாவட்டத்தில், நான் என் இன்பங்களை மறைத்து அனுபவிக்க வேண்டியதாயிற்று.

வயதாகி, விஷயங்களை ஆராய்ந்து பார்க்கும் பருவம் வந்தபொழுது, வாழ்க்கையில் நான் அடைந்திருந்த அந்தஸ்தையும் முன்னேற்றத்தையும் பற்றிப் பரிசீலனை செய்தேன். அப்படிச் செய்து பார்த்ததில், நான் வெகுநாளாகவே, என்னை அறியாமலேயே, ஒருவிதமான இரட்டை வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தேன் என்பது தெரிந்தது. நான் சில ஒழுக்கப்பிசகான காரியங்களைச் செய்ததுண்டு; அவைகளை வேறு யார் செய்திருந்தாலும் உலகத்திற்குப் பறைசாற்றி யிருப்பார்கள். ஆனால் நான் அவைகளை இழிவானவை என்று கருதி, வெட்கி, மறைத்து வைத்தேன். என்னை இந்தத் துவந்துவ வாழ்க்கையில் ஈடுபடும்படி தூண்டினது நான் கொண்டிருந்த உன்னத லட்சியங்கள்தான்—நான் செய்த குற்றங்களிலிருந்து ஏற்பட்ட பச்சாத்தாபமும் வீழ்ச்சி உணர்ச்சியும் கூட அவ்வளவு அல்ல. நல்லது, கெட்டது என்ற இரண்டு குணங்கள் மனிதனுக்குள் இரட்டைப் பிறப்பாகப் பிறந்து, மனிதத் தன்மையின் இரண்டு பகுதிகளாக இருக்கின்றனவே—அந்த இரண்டையும், மேலே

சொன்ன என் உயர் லட்சியங்கள்தான் என்னுள் இரண்டு தனிக்கூருக வேற்றுமைப்படுத்தி, அதிகமாகப் பிரித்து, தனித் தனியாக்கினது. சாதாரணமாக, இந்த இரண்டு அம்சங்களும் இதர மனிதர்களிடம் இவ்வளவு பிரிவுகொண்டு தென்படுவது அரிது.

அதனுல், வாழ்க்கையின் இந்தக் கொடிய விதியைப்பற்றி அடிக்கடி ஆழ்ந்து ஆலோசனை செய்யும்படியான தூண்டுதல் எனக்கு ஏற்பட்டது. *நல்லதென்றும் தீயதென்றும் மனித கிருத்தியங்களை இருவகையாக வகுக்கும் கொள்கைதானே மதத்துக்கே மூலாதாரம்? இதிலிருந்து தானே மனித சமூகத்தின் துக்கங்களே ஊற்றெடுத்துப் பெருகுகின்றன? இந்த மாதிரி, நான் இப்பேர்ப்பட்ட ஆழ்ந்த துவந்துவத்தில், சிக்கிக்கொண்ட இரட்டைப் பேர்வழியா யிருந்தபோதிலும், நான் என்றும் வஞ்சகனுனதில்லை; வேஷதாரி யானதில்லை. என்னுடைய இரண்டு தன்மைகளும், அதனதன் போக்கில், சிரத்தையும் ஊக்கமும் கொண்டவைதான். கட்டுப்பாட்டையும் நிர்ப்பந்தத்தையும் தூர அகற்றி வைத்துவிட்டு, அகிருத்தியத்தில் அமுங்கினதும் என்னுடைய தன்மைதான்—நான்தான்; பொது வாழ்வின் பட்டப் பகலில், விஞ்ஞான அபிவிருத்திக்கும் துன்பமும் நோயும்

---

* இந்த இடத்தை முகவுரையில் இன்னும் கொஞ்சம் விளக்க முயன்றிருக்கிறேன்.

ஒழிவதற்கும் பாடுபட்டதும் என்னுடைய தன்மை தான்—நான்தான். இந்தத் தன்மைப் பாகுபாட்டில் ஏற்றத் தாழ்வே கிடையாது. வாழ்க்கைக்கு மேற் போய், புதை பொருளாக இருந்த உண்மைகளை ஆராயும் பாதையில் சென்றுகொண்டிருந்த என்னுடைய விஞ்ஞான ஆராய்ச்சி, தன் ஒளியைக்கூட, இதற்குக் கொடுத்து உதவிற்று. என் இரண்டு தன்மைகளின் இடையே சதா நடந்துவந்த போரின் மூலம் ஏற்பட்ட என் அநுபவத்தைப் பலப்படுத்திற்று.

இப்படியாக, நாளுக்கு நாள், சாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபட்ட என் பகுத்தறிவு மூலமும், என் இரட்டை வாழ்வில் ஏற்பட்ட அநுபவங்களில் ஈடுபட்ட நன்மை தீமை உணர்ச்சி மூலமும்—என் சேதன சக்தியின் இருபகுதிகளின் மூலமும்—உண்மையைக் கொஞ்சங் கொஞ்சமாக நெருங்கினேன்; பூரணமாக அடையவில்லை. அதை அரை குறையாகவே அறிந்ததால் தான் இந்தக் கோர மான வாழ்க்கைச் சிதைவிற்கும் ஆளானேன்.

அந்த உண்மை யென்ன? **மனிதன் உண்மையில் ஒருவனல்ல; உண்மையில் அவன் இருவர்**—இதுதான்.

நான் ஏன் இருவர் என்று சொல்லுகிறேன் என்றால், என் ஆராய்ச்சி அதற்கு மேலே போக வில்லை. மற்றவர்கள் எனக்குப் பின்னால் வருவார்கள். இதே ஆராய்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்வார்கள். கடைசியில், மனிதன்

ஒருவனல்ல, மனிதன் பலர் நிறைந்த ஒரு சமூகம்; அவனுக்குள் சுயேச்சையான அநேக அங்கங்கள், ஒன்றுக்கொன்று பொருத்தமின்றி, கூட வசிக்கின்றன என்ற முடிவிற்கு வருவார்கள் என்று ஊகிக்கிறேன்.

என் சம்பந்தப்பட்ட வரையில், என் வாழ்க்கையின் போக்கின்படி, நான் ஒரே திக்கில்தான் போய்க்கொண்டிருந்தேன். என்னுடைய அநுபவத்திலேயே ஏற்பட்ட நன்மை தீமை உணர்வின் வழியாகத்தான் மனிதனுக்குள்ளே இருக்கும் மிருகப் பிராயமான இரட்டைக் குணத்தை நன்றாக அறிந்தேன். என் *சேதனை என்ற போர்க்களத்தில் எப்பொழுது பார்த்தாலும், என் இரண்டு சுபாவங்களும் மல் யுத்தஞ் செய்துகொண்டிருந்தன. அவை யிரண்டிற்கும் நான் மூல புருஷனாக,—அவைகளின் பூரண அம்சமாக இருந்தேன் என்பதை உணர்ந்ததால் தான்—அவைகளைத் தனித் தனியாகவும் உடையவன் என்பதும் எனக்கு வியக்தமாயிற்று. அவ்விரண்டையும் வெவ்வேறாகப் பிரித்துவிட்டுவிட்டால் எப்படியிருக்கும் என்பதைப்பற்றி ஆலோசிப்பதில் எனக்கு ரொம்ப நாளாகப் பிரியம். என் ஆராய்ச்சிகளின் மூலம் அப்பேர்ப்பட்ட அதிசயமான நிலை சாத்தியம் என்று நான் அறிவ

* சேதனை (Consciousness) சித் என்று வேதாந்தத்தில் குறிப்பிடுவது. சிற்சபை என்ற அழகிய கல்பனையை மனதிற் கொண்டால் ஆசிரியரின் பொருள் எளிதில் விளங்கும்.

தற்கு முன்னிருந்தே, இந்தப் பகற் கனவை நான் காணுவதுண்டு. அப்படிச் செய்துவிட்டால், வாழ்க்கையில் தாங்க முடியாமலிருக்கும் அநேக தொல்லைகள் தீர்ந்து போகுமென்று நினைத்தேன். தனியாகப் பிரித்துவிட்டு விட்டால் துஷ்டப் பிரகிருதி தன் இஷ்டப்படி அதன் வழி செல்லலாம்; நல்ல பிரகிருதியின் ஆசைகளும் பச்சாத்தாபங்களும் அதைக் கட்டுப்படுத்தா. நல்ல பிரகிருதியும் தன் நேர்மை வழியில் தடையின்றி முன்னேறிச் செல்லலாம்; மனத்திற்குகந்த நற்கருமங்களைச் செய்து மகிழலாம்; தீமையின் சேர்க்கையில் ஏற்படும் இழிவும் பச்சாத்தாபமும் இருக்கவே இருக்காது. நேர் எதிரிடைக் குணங்கள் கொண்ட இந்த இரண்டும் ஒன்ருகப் பிணைக்கப்பட் டிருப்பது தானே மனித சமூகத்திற்கு ஒரு தீராத சாபமாக ஏற்பட்டிருக்கிறது? சேதனையின் கர்ப்பத்தில் நேர் எதிரிடையான இந்த இரட்டைகள் எப்பொழுது பார்த்தாலும் போர்புரியும். தொல்லை அதனல் தானே? அவைகளை எப்படிப் பிரிக்கலாம்?

என் யோசனைகள் இவ்வாறு போய்க்கொண் டிருக்கும் பொழுதுதான், ஆராய்ச்சிச் சாலையிலிருந்து பக்க வெளிச்சம் பளிச்சென்று அவைகளின்மேல் பாய்ந்தது. இதுவரையிலும் யாரும் கண்டறியாத வகையில், எனக்கொரு ஆழ்ந்த நுட்பம் புலப்பட்டது. நாம் உடை உடுத்தி உலவும் இந்தத் திடமான சரீரம், எவ்வளவு லகுவில்,

உருவம் மாறலாம், மூடு பனிபோல் மறையலாம் என்பது தெரிந்தது. படுதாக்களைக் காற்று ஆட்டி அலசுவதுபோல் சில மருந்துகள், இந்தச் சரீரத்தை ஆட்டி உலுக்கி, உரு மாற்றும் சக்தி பெற்றிருக்கின்றன வென்று கண்டேன். என்னுடைய இந்த ஆராய்ச்சி விஷயமாக, நான் அதிகமாக விஸ்தரிக்க விரும்பாததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது, மனிதனின் விதியும் வாழ்க்கையும் கீழே இறக்கமுடியாத ஓர் சுமையாக அவன் முதுகில் சுமத்தப்பட்டிருப்பதை நான் ஒரு படிப்பினையாக அறிந்துகொண்டேன்; அதைக் கீழே தள்ள முயற்சி செய்தால், இன்னும் பயங்கரமான பாரத்துடன் வந்து அழுக்குகிறது என்று அநுபவத்தில் அறிந்துவிட்டேன். இரண்டாவது, என் ஆராய்ச்சிகள் முடிவடையவில்லை; ஆகையால் இந்த இடத்தில் இதுமட்டும் சொல்லுகிறேன். என் இயற்கைச் சரீரமும், சில சக்திகளின் தேஜோமயமான சேர்க்கையால் ஏற்படும் ஆத்மாவும், தனி என்பதை அறிந்தேன். அவைகளைச் செயலறச் செய்து வேறொரு உருவத்தைக் கொடுக்கும் வேகம் வாய்ந்த ஒரு மருந்தைக் கண்டுபிடித்தேன். அந்த உருவமும் நான்தானே? ஏனெனில் அதுவும் எனது ஆத்மாவின் நீசப்பகுதியின் அடையாளமும் விகாசமும் கொண்டிருந்தது.

இந்தப் பரீட்சையை அநுபவத்தில் கொண்டு வருவதற்கு முன், ரொம்ப யோசித்தேன். அதனல்

மரணம்கூடக் கிட்டிவிடலாம் என்று எனக்குத் தெரியும். மனித உறுப்பு அடையாளங்களையே இப்படிக் குலைத்து மாற்றும் சக்தியுடைய மருந்து, கொஞ்சம் அதிகமாக உபயோகிப்பதாலோ, அல்லது சந்தர்ப்பம் தவறி பிரயோகம் செய்வதாலோ, மாற்றவேண்டிய சரீரத்தை ஒரேயடியாக அற்றுப் போகும்படியே செய்யக்கூடும். இவ்வளவு அபூர்வமான புதுமையைக் கண்டுபிடித்ததின் தூண்டுதலும் ஆவலும் கடைசியாக என் பயத்தை வென்றுவிட்டன. திராவகத்தைச் செய்து ரொம்ப நாளாகவே தயாராக வைத்திருந்தேன். கடைசியாகச் சேர்க்கவேண்டிய ஒருவித உப்பை, ஒரேயடியாக, ஒரு மருந்துக் கடையிலிருந்து மொத்தமாக வாங்கி வைத்துக்கொண்டேன். ஒருநாள் இரவு, விஷ வேளையில், மருந்துகளைச் சேர்த்து, கொதிப்பைக் கவனித்து, திராவகம் பொங்கி அடங்கினதும், ரொம்பத் தைரியமாக அதைக் குடித்துவிட்டேன்.

உடனே பொறுக்க முடியாத வேதனைகளுக்குள்ளானேன். எலும்புகள் அரைபட்டதுபோல இருந்தது. பயங்கரமான குமட்டல் ஏற்பட்டது. பிறப்பு இறப்பின்போது கூட ஏற்படாத ஒரு பிராணபயம் தோன்றிற்று. சிறிது நேரங் கழித்து இந்த வேதனைகள் கொஞ்சங் கொஞ்சமாகத் தணிய ஆரம்பித்தன; ஒரு கொடும் வியாதியின் வாயிலிருந்து விடுபட்டு வெளிவந்தவன்போல, சுயப்பிரக்ஞை அடைந்தேன். என்னுடைய புலன்களில்

அப்பொழுது ஏதோவொரு புது வாடை இருந்தது—விவரிக்க இயலாத புதுமை—புதுமையென்ற காரணத்தாலேயே அது மிகவும் இனிமையாயுமிருந்தது. யௌவனம் திரும்பியது போலானேன்; உடம்பு லாகவம் கொண்டது; பூரிப்பும் கொண்டேன். என்னுள் ஒரு முரட்டுத்தனம் பீறிட்டுக்கொண்டு கிளம்பினதுபோல இருந்தது; மனத்தில் இந்திரியங்கள் கட்டுமீறின; யோசனைகள் பந்தயம் போடுவனபோலத் ததும்பின. கட்டுப்பாடுகள் எல்லாம் கழிந்தாற்போல, உடலில் ஒரு விடுதலை உணர்ச்சி ஏற்பட்டது. இதுவரை நான் அறியாதது அது. ஆனால் அது புனிதமானதன்று. இந்தப் புத்துயிரின் முதல் மூச்சிலேயே நான் துஷ்டனாகி விட்டேன் என்று அறிந்துவிட்டேன். மகா துஷ்டனாகவும் முன் வினையின் முழு அடிமையாகவும் ஆகிவிட்டேன் என்பது நன்றாகத் தெரிந்தது. அப்பொழுது, அந்த எண்ணமே, சாராயத்தைப் போல, என்னை உயர்த்தி உற்சாகம் கொடுத்தது. இந்த உணர்ச்சிகளின் புதுமையில் மெய்மறந்து கைகளை நீட்டிப் பார்த்தேன். அப்பொழுதுதான் நான் ஆகிருதியில் குறைந்துவிட்டேன் என்பதைத் திடீரென்று உணர்ந்தேன்.

அப்பொழுது என் அறையில் நிலைக்கண்ணாடி கிடையாது. இப்பொழுது, நான் இதை எழுதும் பொழுது, என் பக்கத்திலிருப்பது, பிற்பாடு அந்த உருமாற்றங்களைக் கவனிப்பதற்காகவே வாங்கி

வைக்கப்பட்டது. அன்றிரவு வெகு நேரமாகி விட்டது. பின்னிரவு இருட்டாக இருந்தபோதிலும் பகலைப் பெற்றெடுக்கும் பருவம் கொண்டிருந்தது, அநேகமாக; என் வீட்டார் மும்முரமான தூக்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள். ஆசையாலும் வெற்றியாலும் புளகாங்கிதனுகி, அந்தப் புது உருவத்துடன் படுக்கையறைவரை கூடப் போய்விட்டேன். முற்றத்தைத் தாண்டினேன்; மேலே ஆகாயத்தில் நக்ஷத்திர மண்டலங்கள் என்னைக் கவனித்தன; அவைகளுடைய கண்ணயராத காவல் காலத்திற்குள் இப்பேர்ப்பட்ட உருவம் அவைகள் கண்ணில் பட்டது—முதல் முதலாக, நான்தான்! ரேழிவழியாக, என் வீட்டிலேயே ஒரு அன்னியன் போல, திருட்டுத்தனமாகப் போய், என் அறையை அடைந்தேன். அங்கே, கண்ணுடியில், முதல் முதலாக எட்வர்ட் ஹைடின் தோற்றத்தைக் கண்டேன்!

இங்கு நான் ஊகமாகத்தான் சொல்லுகிறேன். நான் சொல்லுவது எனக்கு நிச்சயமில்லை; அநேகமாக 'இருக்கலாம்' என்ற நினைப்புத்தான். நானே மருந்து மூலமாகச் செயற்சக்தி பெறும்படியாகச் செய்தமருந்து என் இயற்கையின் துஷ்டப் பிரகிருதி, நல்லதைக் காட்டிலும் பலக்குறைவும் ஆகிருதிக் குறைவும் கொண்டதாக இருந்தது. மேலும் பத்தில் ஒன்பது பாகம் முயற்சியாகவும், ஒழுக்கமாகவும், நியமமாகவும் கழிந்த என் வாழ்க்கையில், துஷ்ட

அம்சம் குறைவாகச் செலவழிந்ததால், குறைவாகவேதான் க்ஷீணமும் அடைந்திருந்தது. ஆகையால்தான், ஜெகிலைக்காட்டிலும் ஹைட், சிறுவனுகவும், குள்ளனுகவும், ஒல்லியாகவு மிருந்தான் என்று நான் நினைக்கிறேன்; ஜெகில் முகத்தில் எப்படி நல்லது பிரகாசித்ததோ, அதுபோல ஹைடின் முகத்தில் துஷ்டத்தனம் எழுதி ஒட்டியிருந்தது. மேலும் அந்தத் தீமையேதான் (மனிதனின் இழிவான பாகம் இதுதான் என்று இன்னும் நான் நம்புகிறேன்) சரீரத்தின் சூம்பலுக்கும் அங்கஹீனத்திற்கும் காரணம் என்றும் நினைக்கிறேன். அப்படியிருந்தும் கண்ணுடியில் அந்தக் கோரமான உருவத்தைப் பார்த்தபொழுது எனக்கு வெறுப்பே ஏற்படவில்லை; உள்ளம் அதைத் தாவி வரவேற்றது. அதுவும் நான்தானே? அதுவும் மனுஷ்ய ஸ்வபாவமும் இயற்கையும் தான். அரைகுறையாக, பாதி உணர்ச்சியாக பிரிவுகொண்ட முகத் தோற்றத்தை இதுவரையில் என்னுடையது என்று நான் கருதினேன். அதைக் காட்டிலும் அதிகமாக இப் புது முகத்தில் தனித்த உணர்வும் ஆத்மாவின் சாயையும் இருந்ததுபோல என் கண்ணிற்குப்பட்டது. அந்த மட்டில் நான் எண்ணினது சரிதான். நான் ஹைட் உருவம் தரித்திருந்த பொழுது, என்னை முதலில் நெருங்குபவர் யாவரும் யோசனை செய்துகொண்டே தான் நெருங்கினுர்கள் என்று கண்டேன். இது எதனுல் என்று எனக்குத் தோன்றுகிறது

தெரியுமா? நாம் சந்திக்கும் எல்லா மனிதர்களிடமும் நல்லதும் கெட்டதும் கலந்திருக்கின்றன. மனித சமூகத்தினிடையே ஹைட் ஒருவன்தான் கலப்பற்ற சுத்தமான தீமை!

கண்ணாடியினருகே ஒரு நிமிஷம்தான் தாமதித்தேன். இரண்டாவதான முடிவுப் 'பரீட்சை இனிமேல்தானே செய்து பார்க்கவேண்டும்! என்னுடைய அங்க அமைப்பு நிரந்தரமாகவே மாறிவிட்டதா, என் வீட்டிலிருந்து நான் விடியுமுன் வெளியேறி ஓடவேண்டுமா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. அறைக்குத் திரும்பி ஓடினேன். மறுபடியும் மருந்தைத் தயார் செய்து குடித்தேன். மறுபடியும் உரு மாறும் வேதனைகளை அநுபவித்தேன். மறுபடியும் டாக்டர் ஜெகிலின் உருவம், உயரம், முகத் தோற்றம் குணம் எல்லாவற்றையும் பூரணமாகப் பெற்றேன்.

அன்றிரவு, என் வாழ்க்கையில், வீழ்ச்சியை நோக்கிச்சென்ற பிரிவுப்பாதைக்கு வந்துவிட்டேன். என் ஆராய்ச்சியில் நான் கண்டுபிடித்த புதுமையை உதார புத்தியுடன் பயன்படுத்த எண்ணியிருந்தேனுல், நல்லெண்ணங்களும், உயர் நோக்கங்களும் என்னை ஆட்கொண்டிருந்த வேளையில், நான் அந்தப் பரீட்சையை செய்திருந்தேனுல், எல்லாமே வேறுவிதமாக இருந்திருக்கும்; அந்த மரண ஜனன வேதனையிலிருந்து, அசுரனுக இல்லாமல், தேவதையாகவே வெளி வந்திருப்பேன். மருந்து தன் வேலை

யில் யாதொரு வித்தியாசமும் காட்டவில்லை; அது தேவாம்சத்தை உற்பத்தி செய்வதுமில்லை, அசுராம் சத்தைக் கிளப்புவதுமில்லை; என் தாற்காலிக நிலைமையின் சிறைக் கதவுகளைத் தகர்த்தெறிந்தது, அவ்வளவுதான்; உள்ளே அப்பொழுது குடியிருந்த அம்சம் வெளியேறிக் குதித்தது. நான் மருந்தைச் சாப்பிட்டபொழுது, எனது நல்ல குணம் அயர்ந்து போயிருந்தது. ஆசையால் தூண்டப்பட்டு, அதி ஜாக்கிரதையாய் விழித்துக்கொண்டிருந்த துர்க் குணம் சந்தர்ப்பத்தைச் சட்டென்று கைப்பற்றிக் கொண்டுவிட்டது. அதன் விளைவாக எட்வர்ட் ஹைட் தோன்றினன். ஆகையால் இப்பொழுது எனக்கு இரண்டு குரல்களும் இரண்டு உருவங்களும் இருந்தபோதிலும், ஒன்று பூராவும் தீமை பூண்டது; மற்றொன்று பழைய ஜெகிலாக இருந்தது. அந்த அம்சத்தைத் திருத்தவோ அபிவிருத்தி செய்யவோ கூடுமென்ற நம்பிக்கையே எனக்குப் போய்விட்டது. ஆகையால் என் போக்கு வியக்தமாக, துன் மார்க்கத்திலேயே சென்றது.

ஆராய்ச்சியிலேயே கழிக்கப்பட்டதால் என் வாழ்க்கை உயிர் சத்தின்றி வரண்டு போயிற்று. அதை நான் எப்பொழுதும் வெறுத்துக் கொண்டு தான் இருந்தேன். சில சமயங்களில் தமாஷாக இருக்கவேண்டுமென்று அவ்வளவு வருஷங்களுக் குப் பிறகும் தோன்றுவதுண்டு. என் இன்பவகை கள், குறைத்துக் கூறினும், மிகவும் இழிவானவை

யாகையாலும், நான் அப்பொழுது பிரபல மடைந்து, மதிப்புப் பெற்றுவிட்டதுமன்றி, வயதான வனுகி விட்டபடியாலும், பொருத்தமில்லாத அந்த வாழ்க்கை எனக்கு மிகவும் கஷ்டமாகிவிட்டது. ஆகையால் என்னுடைய புதியசக்தி என்னைக் கெட்ட வழியில் செல்லத்தான் தூண்டிற்று; நான் அதற்கு அடிமையானேன். மருந்தைக் குடிக்க வேண்டியது; பிரபலமான விஞ்ஞான ஆசிரியரின் உடலை நீத்து விட்டு, ஹைட் என்னும் கனத்த போர்வையைப் போர்த்திக் கொள்ள வேண்டியதுதான். அதை நினைக்கும்போது எனக்குச் சிரிப்பு வந்தது. அப்பொழுது எனக்கு அது தமாஷாகப்பட்டது. அதற்காக என் ஏற்பாடுகளை யெல்லாம் விஸ்தார மாகச் செய்து முடித்தேன். ஸோஹோவில் அந்த வீட்டை வாடகைக்கு வாங்கினேன்; மனச்சாட்சியே யற்ற ஒரு வேலைக்காரியை அமர்த்தினேன். அந்தப் பக்கத்தில், என் வீட்டில், ஹைட் என்ற ஒருவனுக்கு பூர்ண சுதந்திரமும் அதிகாரமும் உண்டு என்று பணியாட்களுக்கு, அறிவித்தேன். எதிர்பாராத ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்காக, ஹைட் உருவத் துடன், என் வீட்டிற்குள்ளேயே அடிக்கடி வந்து பழக்கம் செய்துவைத்தேன். நீ அவ்வளவு ஆட்சேபித்த உயிலையும் எழுதினேன். டாக்டர் ஜெகில் உருவத்தில் எனக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டாலும், ஹைட் என்ற உருவத்தில் சொத்து நஷ்டமின்றித் தப்புவதற்காக அந்த வழிசெய்தேன்.

இந்த மாதிரி நாலா பக்கங்களிலும் தேவையான ஜாக்கிரதைகள் செய்துவிட்டதாக எண்ணிக் கொண்டு, என் உரு மாற்றத்தால் ஏற்பட்ட சௌகரியத்தைப் பூராவும் பயன்படுத்த ஆரம்பித்தேன்.

இதற்கு முன்னால், எல்லோரும் தங்கள் கொலை பாதகச் செயல்களைச் செய்வதற்கு ஆட்களை ஏற்படுத்தி, தாங்கள் கௌரவமாக வெளியில் திரிந்தார்கள். நான் தான், முதல் முதலாக, நானே குற்றம் செய்து, தப்பித் திரிந்தவனாக இருந்தேன். நான்தான் அந்த மாதிரி வெளிக்கு மரியாதை மனிதனாக நடமாடிக்கொண்டு, நினைத்த நிமிஷத்தில், பள்ளிக்கூடப் பையனைப்போல, எல்லாவற்றையும் களைந் தெறிந்துவிட்டு, விடுதலை வெள்ளத்தில் குதித்து நீந்தினேன். கண்டுபிடிக்க முடியாத இந்தப் போர்வையில் ஆபத்தே கிடையாது. நினைத்துப்பார். நான் இல்லவே இல்லை! என் ஆராய்ச்சிச் சாலைக்கு ஓடவேண்டியது, மருந்தைக் கலந்து குடிக்க வேண்டியது. அவ்வளவுதான். என்ன செய்திருந்தாலும் சரி, ஹைட், கண்ணாடிமீது தோன்றி மறையும் மூச்சுக்காற்றின் ஆவிபோல, மறைந்து விடுவான். அவனுக்குப் பதிலாக, அறையில் சாவதானமாகப் படித்துக்கொண்டு ஜெகில் உட்கார்ந்திருக்கக்கூடும். சந்தேகம் என்பதையே ஏளனம் செய்யக்கூடும்.

என் உருமாற்றத்தில் நான் தேடி அநுபவித்த இன்பங்கள் யாவும் இழிவானவை என்று

கூறினேன். அதைக் காட்டிலும் கடுமையான சொல்லை நான் உபயோகிக்கமாட்டேன். ஆனால் ஹைட் இந்த இன்பங்களின் போக்கை மகா கொடியதாக்கிவிட்டான். அந்தத் திருவிளையாடல் களிலிருந்து நான் திரும்பி வந்த பிறகு, என்னு டைய அயோக்கியத்தனம் எனக்கே பிரமிப்பை உண்டாக்கும். என்னுள்ளிருந்து வெளியேற்றி, இஷ்டப்படி திரியும்படி நான் அனுப்பிய இந்தப் பிரகிருதி, ஸ்வபாவமாகாவே கொடுமையும் குரூரமும் வாய்ந்தவன். அவனுடைய ஒவ்வொரு எண்ணமும் நடத்தையும் அப்படித்தான். எவ்வகையான கொடுமைபுரிந்தும் மிருக வேட்கையுடன் மிதமற்று இன்பம் பருகுவது—இப்படி, கல் மனிதன்போல, ஈரமின்றி, ஹைட் செய்யும் செயல்களைக் கண்டு ஜெகில் சில சமயங்களில் திக்பிரமை கொண்டு போவான். நிலைமை சாதாரணச் சட்டங்களுக்கு ஒரு விலக்குப்போல இருந்ததால், மனச் சாட்சியின் குற்றச்சாட்டு கொஞ்சம் கொஞ்சமாகத் தளர ஆரம்பித்தது. ஹைட் தானே—அவன் மட்டுந் தானே—குற்றவாளி, ஜெகில் கெடவில்லை என்பது போன்ற ஆறுதல் ஏற்படும். பார்ப்பதற்கு ஒரு விதத்திலும் பாதிக்கப்படாதவனைகத் தான் ஜெகில் மறுபடியும் ஸ்வய ரூபத்தை அடைந்தான். சாத்தியமான இடங்களில் ஹைடின் கெட்ட செயல் களுக்கு ஈடுகூடச் செய்துவிடுவான். இந்த மாதிரி

சமாதானங்கள் செய்துகொண்டதால், ஜெகிலின் மனச்சாட்சி கொஞ்சம் கொஞ்சமாக மழுங்கிற்று.

என் கண் முன் நடந்த இந்தத் தீச் செயல்களை (நான் செய்தேனென்று ஒப்புக்கொள்ள எனக்கு மனம் வரவில்லை) விவரிப்பதாக எனக்கு உத்தேசமில்லை. எனக்கு ஏற்பட்ட எச்சரிக்கைகளையும், கடைசியாக, நான் அடைந்த நிலைமைக்கு, என்னைக் கொண்டுவந்து விட்ட வழிகளையும் மட்டும் குறிக்கிறேன். ஒரு ஆபத்து நேர்ந்தது; ஆனால் அதிலிருந்து ஒருவிதமான விளைவும் ஏற்படாததால், அதைப்பற்றி அதிகமாக விவரிக்காமல் விடுகிறேன். ஒரு சமயம் ஒரு சிறு பெண்ணுக்கு நான் இயற்றிய கொடுமையை ஒரு வழிப்போக்கர் கவனிக்க நேர்ந்துவிட்டது. அவர் உன்னுடைய உறவினன் என்று அன்று அறிந்தேன். டாக்டரும் குழந்தையின் தாய் தகப்பன்மாரும் சேர்ந்துகொண்டு என்மேல் பாய்ந்தார்கள். அப்பொழுது என்னுடைய உயிருக்கே ஆபத்து வந்துவிடுமோ என்றுகூடப் பயப்பட்டேன். கடைசியாக அவர்களுடைய நியாயமான கோபத்தைத் தணிப்பதற்காக, ஹைட், அவர்களை வீட்டிற்கு அழைத்துவந்து, நஷ்ட ஈடாகப் பணம் கொடுக்கவேண்டி ஏற்பட்டது. அதை ஜெகில்பேரில் ஒரு செக்காகக் கொடுத்தான். அதற்குப் பிறகு, ஹைட் பேரில் ஒரு தனிக் கணக்கு ஏற்படுத்தி, இந்தச் சங்கடத்தை நிவிர்த்தி செய்தேன். என் கையெழுத்தை இடது பக்கமாகச் சாய்த்து எழுதி

ஹைடுக்கு ஒரு கையெழுத்தையும் தயார்செய்து கொடுத்தேன். இப்படியெல்லாம் முன் ஜாக்கிரதைகள் செய்துகொண்டதால் இனிமேல் என்னை யாராலும் அசைக்க முடியாது என்று எண்ணினேன்.

ஸர் டான்வர்ஸின் கொலைக்குச் சுமார் இரண்டு மாதங்களுக்குமுன், ஒரு நாள், நான் வெளியே போயிருந்து வெகுநேரம் கழித்து வீட்டுக்குத் திரும்பி வந்தேன். மறுநாட்காலை படுக்கையிலிருந்து எழுந்திருக்கும் பொழுது உடம்பு என்னமோ போலிருந்தது. என்றைக்குமில்லாத சில உணர்ச்சிகள் ஏற்பட்டன. சுற்றுமுற்றும் பார்த்தேன்; ஒன்றும் விளங்கவில்லை. சாமான்களும் அறையும் என்னுடையவைதான், சந்தேகமில்லை; திரைகள், படுக்கை, எல்லாம் நன்ருக அடையாளம் தெரிந்தன; அப்படியிருந்தும் நான் இருந்த இடத்தில் இல்லை என்று தோன்றிற்று. என் அறையில் நான் இல்லையென்றும் ஹைடின் உருவத்தில் நான் வழக்கமாகத் தூங்கும் ஸோஹோ அறையில் இருந்ததாகவும் பட்டது. எனக்கே சிரிப்பு வந்தது; வழக்கம்போல, இந்த உணர்ச்சிக்கு என்ன காரணம் என்று மனேதத்துவ ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தேன். திடீரென்று என் கை என் கண்ணில் பட்டது. ஜெகிலின் கை, (நீ கவனித்திருப்பாயே!) பெரியது—நீளமாக நல்ல வெண்மையும் அழகும் கொண்டது. ஆனல் நான் அப்பொழுது அந்தக் காலை வெய்யிலின் வெளிச்சத்தில் பார்த்த கை மெலிந்ததாகவும்,

கரடு முரடானதாகவும், கறுத்ததாகவும், மயிர் நிறைந்ததாகவு மிருந்தது. அது ஹைடின் கை! பாதி படுக்கைத் துணிகளில் மறைந்து கிடந்தது. ஆச்சரியத்தில் மெய்மறந்து கையைப் பார்த்த படியே கொஞ்சநேரம் திகைத்துப்போய் உட்கார்ந் திருந்தேன். கொட்டு முழக்கின் ஒலிபோல, திடீரென்று மனத்தில் பீதி எழுந்தது. படுக்கையி லிருந்து குதித்தெழுந்து கண்ணாடியை நோக்கி ஓடினேன். நான் கண்ட காட்சி—என் ரத்தம் உறைந்து போய்விட்டது! ஆமாம், நான் ஜெகிலாக இரவு தூங்கச் சென்றேன்; ஹைடாக அன்று காலை படுக்கையைவிட்டு எழுந்திருக்கிறேன்! இது எப்படி ஏற்பட்டது? மனத்தில், திடீரென்று, மறுபடியும் பீதி பீறிட்டுக்கொண்டு கிளம்பிற்று. இதை எப்படி மாற்றுவது? நன்றாக விடிந்து வெயிலேறிவிட்டது. வேலைக்காரர்கள் எல்லோரும் எழுந்திருந்து நடமாட ஆரம்பித்துவிட்டார்கள். என் மருந்துகள் எல்லாம் என் மாடி அறையில் இருந்தன. இரண்டு மாடிப் படிகளைத் தாண்டிக்கொண்டு, வெளி முற்றத்தின் வழியாகப் போகவேண்டும். என் முகத்தை மூடிக் கொள்ளலாம்; ஆனால் அதில் என்ன பிரயோ ஜனம்? என் உருவத்தின் மாறுதலை எப்படி மறைக்க முடியும்? திடீரென்று உள்ளத்திற்கு ஒரு மகத்தான நிம்மதி ஏற்பட்டது. அப்பாட! ஹைட் அடிக்கடி வந்துபோவது என் வேலைக்காரர் களுக்குப் பழக்கமான விஷயம். ஆகையால்,

உடனே உடைகளைச் சரி செய்துகொண்டு உள்ளே சென்றேன். அந்நேரத்தில் ஹைட் அந்தக் கோலத்தில் உள்ளே போவதைக்கண்டு பிராட்ஷா, பிரமித்தான். பத்து நிமிஷங்களில் ஜெகில் தன் சுயரூபத்தை அடைந்து, காலை உணவை அருந்தும் தொழிலில் ஈடுபட்டிருந்தான்!

உணவு செல்லவில்லை. மேலே சொன்ன விபரீத சம்பவம், என்னுடைய முன் அநுபவத்திற்கு நேர் முரணாக இருந்தது. என்னுடைய முடிவைக் கிட்டச் செய்யும் பாதையில் அது முதல் மைல்கல் போலிருந்தது. ஆகவே, முன்னைக் காட்டிலும் அதிகமாக என்னுடைய இரட்டை வாழ்க்கையின் பிரச்னைகளையும் தொந்தரவுகளையும் பற்றி ஆலோசிக்கலானேன். நானாக உற்பத்தி செய்து வெளியேவிட்ட புது உருவம் கொஞ்ச காலத்தில் அபிவிருத்தியையும் வளர்ச்சியையும் அடைந்துவிட்டது. கொஞ்ச நாளாகவே ஹைடின் உருவத் தோற்றமே வளர்ந்திருந்ததுபோல எனக்குப் பட்டது. ரத்தத் திமிரும் தேகத் தெம்புமே அதில் அதிகமாகத் தென்பட்டது. இந்த வளர்ச்சியும் வலிமையும் நீடித்து ஓங்கினால், என் இயற்கையின் இரண்டு அம்சங்களிடையே கெட்டது (ஹைடின் அம்சம்) மேலோங்கி, நல்லதை (ஜெகிலை) அமுக்கிவிடுமோ என்று ஒரு அச்சம் அப்பொழுது என் உள்ளத்தில் உதித்தது. இஷ்டப்படி உருமாறிக் கொள்ளும் சக்தி அற்றுப்போய், ஹைடின் உருவ

மும் குணமும் எனக்கு நிரந்தரமாகிவிடுமோ என்ற பீதி திடீரென்று என்னைப் பற்றிக் கொண்டது.

மருந்தின் சக்தியோ எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருந்ததில்லை. ஆதியிலேயே, ஒருதடவை மருந்து வேலை செய்யத் தவறிவிட்டது. அதற்குப் பிறகு, அநேக சமயங்களில் மருந்தை இரண்டு மடங்காக உபயோகிக்க வேண்டியதாயிருந்தது; ஒருதரம் உயிருக்கே ஆபத்து விளையுமோ என்று அஞ்சும்படியாக மருந்தை மூன்று மடங்காகச் சாப்பிடவேண்டியதாயிற்று. இதுவரையில், எப்பொழுதாவது, இவைதான் எனக்குக் கொஞ்சம் கவலை கொடுத்துக் கொண்டிருந்தன; மற்ற விஷயங்களில் எனக்கு ஒருவிதமான அதிருப்தியும் இல்லை. இப்பொழுது, அன்று காலை நடந்த சம்பவத்திலிருந்து, ஒரு புது விஷயம் தெளிவாயிற்று. முதலில் ஜெகில் உருவத்தை மாற்றுவது சிரமமாக இருந்தது; இப்பொழுது, நேர் எதிரிடையாக, ஹைட் உருவை நீக்குவது சிரமமாகும்போல், கொஞ்சங் கொஞ்சமாக, ஆனால் நிச்சயமாக, நிலைமை மாறி விட்டது. எல்லாவற்றையும் கவனித்துப் பார்த்தபொழுது இது விசதமாயிற்று; கொஞ்சங் கொஞ்சமாக என் மூலப் பிரகிருதி, என் இயற்கையின் உயர்வான அம்சம், குறைந்து, தீய அம்சத்தில் அடங்கி மங்கி வந்தது; இது நன்றாகத் தெரிந்தது.

இவ்விரண்டு உருவங்களில் ஒன்றை மட்டும் நான் பொறுக்கி யெடுத்துக் கொள்ள வேண்டிய நிலைமை

வந்து விட்டது என்று கண்டேன். என் இரண்டு அம்சங்களுக்கும் ஞாபக சக்தி மட்டும் ஒன்றாக இருந்தது. மற்றெல்லாப் புலன்களும் பல ஏற்றத் தாழ்வுகளுடன் அவைகளிடையே பிரிவு கொண்டிருந்தன. ஜெகில் (மொத்தமாக) ஒருசமயம் மிகுந்த கவலையுடனும், மற்றொரு சமயம் மிகுந்த ஆவலுடனும், ஹைடின் இன்பங்களையும் செயல் விலாசங்களையும் கண்டு களிப்பதுண்டு. ஆனால் ஹைட் ஜெகிலைப்பற்றிக் கவலைப்படுவதேயில்லை; துரத்தி வருபவர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றும் ஒரு மலைக் குகையை வழிப்பறிக்காரன் எப்படிக் கருதுவானோ, அப்படித்தான் ஜெகிலைக் கருதினான் ஹைட். ஹைடினிடம் ஜெகிலுக்கு தகப்பனாரின் கவலையும் ஆதரவும் இருந்தது; ஹைடோ ஒரு பிள்ளையைக் காட்டிலும் அதிகமாக ஜெகிலிடம் அலட்சியங் கொண்டிருந்தான். நான் ஜெகிலுடன் சேர்ந்து விடலாமென்றால், வெகு நாளாக ரகசியமாக அநுபவித்த இன்பங்களையும் ஆசைகளையும் கைவிடுவதாகும். ஹைடுடன் சேர்ந்து விடுவதென்றாலோ, கணக்கற்ற ஆசைகளையும் பொறுப்புக்களையும் ஒரே அடியில் கைவிட்டு, நண்பர்களை இழந்து நாசமாகி விடுவதாகும். இந்த நிறுவையில் ஏற்றத்தாழ்வு இருப்பதாகத் தோன்றலாம். தட்டில் மற்றொரு எடையும் இருக்கிறது. ஹைடாக மாறாமல் சும்மா இருக்கும்பொழுது, ஜெகில் ரொம்ப சிரமப் பட்டுப் போவது வழக்கம்; ஆனால் ஹைட்

தான் இழந்த நற்குணத்தைப்பற்றி எண்ணுவது கூடக் கிடையாது; எத்தகையதை இழந்தான் என்பதே அவனுக்குத் தெறியாது. என்னுடைய நிலைமை விபரீதம்தான்; ஆனால் இந்த வாக்கு வாதத்தின் விஷயம், மனிதனைப் போலவே, அவ்வளவு புராதனமானது, சாதாரணமானது. தூண்டுதல் ஏற்பட்டு, தீச்செயல் செய்ய நடுங்கும் எவனையும் இதேமாதிரி எண்ணங்களும் பயங்களும் தான் பாதித்திருக்கின்றன. என்னுடைய சகோதரர்கள் பலருக்கு ஏற்படுவதுபோல எனக்கும் இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டது: நல்ல அம்சத்தையே ஆதரித்தேன், ஆனால் நிரந்தரமாக அதையே கைப்பற்றி நிற்க வலிமையற்றுப் போய் விட்டேன்.

ஆமாம். வயது சென்ற, நிம்மதியற்ற, டாக்டர் அம்சத்தையே மேலனக் கருதினேன். நண்பர்கள், நியாயமான ஆசைகள், பொறுப்புக்கள்! ஹைடின் உருவத்தில் அநுபவித்த சுதந்திரம், இளமை, நேர் நடை, துடித்தோடும் நாடிபலம், திருட்டு இன்பங்கள் இவைகளைத் திரஸ்கரித்தேன். இந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டபொழுதும், என்னையறியாமலே யே, அவ்வுருவைப்பெற்று உலவுவதற்கு வேண்டிய சில சாதனங்களை மட்டும் அப்படியே வைத்திருந் தேன். ஸோஹோ ஜாகையைக் காலி செய்யவில்லை; ஹைடின் உடைகளை விநியோகம் செய்துவிடவில்லை. அவை இன்னும் கைவசம்தான் இருந்தன. ஆனால்

இரண்டு மாதம் ரொம்பக்கடுமையாக என் தீர்மானத்தின்படி இருந்தேன்; அதற்கு முன் எப்பொழுதும் இருந்திராத வகையில் கண்டிப்பாக வாழ்க்கையை இரண்டு மாதம் நடத்தி, மனச்சாட்சியின் அங்கீகாரத்தையும் முற்றிலும் பெற்று நிம்மதி அடைந்தேன். ஆனல் நாட்கள் செல்லச் செல்ல என் பீதி மங்கிவிட்டது. மனச்சாட்சியின் ஸ்தோத்திரம் அவ்வளவு பிடிக்கவில்லை. ஹைட் உள்ளே விடுதலைக்குப் போராடுவது போல வேதனைகளும் ஆவல்களும் உதித்தன. கடைசியாக, திடம் தளர்ந்து மனம் கொஞ்சம் இடம் கொடுக்கவே, ஒரு நாள் மருந்தை மறுபடியும் கலந்து சாப்பிட்டேன்.

ஒரு குடிகாரன் தன் குடிப்பழக்கத்தைப்பற்றி யோசிக்கும்பொழுது எப்பொழுதாவது, அதனல் ஏற்படும் பிரக்ஞையற்றுப்போகும் நிலைமையையும் அதன் விளைவுகளையும் பற்றி யோசிக்கிருனு வென்பது சந்தேகம். அதுபோல, நானும், எத்தனை தரமோ, எவ்வளவோ காலம் யோசித்தும், ஹைடின் எல்லையற்ற ஒழுக்கத்தவறுகளையும், கோரமான தீமைக் குணத்தையும் அநுமதித்துத்தான் இருந்தேன். அவைகளாலேதான் நான் தண்டனையும் அடைந்தேன். என்னுள் இருந்த பிசாசு வெகுநாள் அடைபட்டுக் கிடந்ததல்லவா? மருந்து சாப்பிட்டதும், கொக்கரித்துக்கொண்டு வெளியே குதித்தது. மருந்து சாப்பிடும் பொழுதே, கட்டற்ற வகையில் தீங்கிழைக்க வேண்டுமென்ற ஒரு மனப்

போக்கு ஏற்பட்டது. நான் கொலை செய்த அந்தப் பேதை மனிதர் சொன்னதைக் கேட்டதும் எனக் கேற்பட்ட காரணமற்ற ரௌத்திராகாரப் புயலுக்கு இதுதான் ஒரு வேளை காரணமோ, என்னவோ! கடவுளுக்குப் பொதுவாக இதைமட்டும் நான் கூறுவேன். சித்தஸ்வாதீனமுள்ள எந்த மனித னுக்கும் அப்பேர்ப்பட்ட அற்பக் காரணத்தால் அவ்விதக் குற்றம் செய்யவேண்டு மென்று தோன்றியே யிருக்காது. உடம்பு வேதனைகொண்ட ஒரு குழந்தை எப்படி விளையாட்டுச் சாமானை உடைக்குமோ அதே அர்த்தமற்ற காரணத்துடன் ஹைட் அக் காரியத்தைச் செய்தானென்று சொல்லுவேன். ஆனால், பரம அயோக்கியர் களுக்கும் இருக்கும் ஒரு தராதர விவேசன சக்தி யைத்தான் நான் வேண்டுமென்றே களைந்து எறிந்துவிட்டு நின்றேனே! ஆகையால் நான் கொஞ்சம் தூண்டப்பட்டால் போதும், ஹதம்தான்.

அவ்வளவுதான். கொடுமை என்னுள் தலைவிரித் தாடிற்று. கோபம் தாண்டவமாடிற்று. குரூர மகிழ்ச்சியில் மெய்மறந்து, அசைவற்றுக் கிடந்த சரீரத்தைச் சின்ன பின்ன மாக்கினேன்; ஒவ்வொரு அடியிலும் மகிழ்ச்சியின் இனிப்பைச் சுவைத்தேன்; எனக்கே சிரமம் மேலிட்ட பிறகு தான், திடீரென்று, என் ஆவேசத்தின் உச்ச ஸ்தாயியில், திகில், அம்புபோல, ஹிருதயத்தில் பாய்ந்தது. மயக்கம் கலைந்தது. என் உயிர் என்

கைவசம் இல்லை என்பதை அறிந்தேன். அதிக்கிரமங்கள் நடந்த அவ்விடத்தைவிட்டு ஓடினேன். ஏக காலத்தில் வெற்றியும் கலக்கமும் என்னைப் பிடித்து உலுக்கின. தீமை இயற்றவேண்டுமென்ற என் ஆசை பூர்த்தியாகிப் பொங்கிற்று; என் உயிராசை உச்சி நிலையில் இருந்தது. ஸோஹோ வீட்டிற்கு ஓடி, என் தஸ்தாவேஜுகளையெல்லாம் நெருப்பில் போட்டு எரித்தேன். உடனே அங்கிருந்து புறப்பட்டு வெளியேறினேன். போகும் வழியில்கூட அந்த இரண்டு வகையான குழப்பந்தான்; குற்றம் செய்ததில் ஏற்பட்ட ரத்தக் களியோடு, மேலும் அநேகம் செய்வதற்கு யுக்திகள் செய்துகொண்டே போனேன்; அத்துடன் யாராவது பின் தொடருகிறார்களோ என்ற பயமும் இருந்தது; திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே துரிதமாகச் சென்றேன். மருந்து சேர்த்துக் குடிக்கும்பொழுது ஹைடின் கவலை நீங்கிற்று. உரு மாற்றத்தின் உக்கிர வேதனைகள் அடங்கி, ஜெகில் தோன்றினானே இல்லையோ, பாவம்! கண்ணீரும் கம்பலையுமாக விழுந்து விழுந்து, கடவுளைத் துதித்துக் கதறினான். பச்சாத்தாபம் பிடுங்கித் தின்றது; நல்ல வேளையாக ஹைடைத் தொலைத்து உயிர் தப்பினோமே என்று நன்றியுடன் கைகூப்பிக் கடவுளைப் போற்றினான். மிருக இச்சையின் சுயநலப் போர்வை நீங்கிய பிறகு, என் வாழ்க்கையின் உண்மையை ஆத்தியந்தமாகக்

கண்டேன். குழந்தையா யிருக்கும்பொழுது தகப்பனரின் கையைப் பிடித்துக்கொண்டு நடந்து சென்ற காலம் முதல், வைத்தியத் தொழிலின் பரோபகாரப் பணிகளின் மூலமாக, அன்றிரவு நடந்த மகா கோரமான நிகழ்ச்சிவரை—எது உண்மை, எது பொய் என்று விளங்காமல் திகைத்தேன். வாய் விட்டு அலறிவிடலா மென்றுகூட இருந்தது. என் மனத்தில் குமுறிவந்த கொடுங் காட்சிகளையும் சத்தங்களையும் கண்ணீராலும் பிரார்த்தனையாலும் அடக்க முயன்றேன். ஆனல், என் பிரார்த்தனைகளுக்கிடையே என் தீச் செயல்களின் கோர முகம் தலையை நீட்டி நின்றது. என்னுடைய பச்சாத்தாபத்தின் தீவிரம் கொஞ்சங்கொஞ்சமாக மங்கவே, ஒருவிதமான மகிழ்ச்சி உண்டாயிற்று. பிரச்னை ஒருவிதமாகத் தீர்மானம் ஆகிவிட்டதென்று கண்டேன். ஹைட் இனிமேல் தோன்றுவது கிடையாது. அது அசாத்தியமாகி விட்டதல்லவா? எனக் கிஷ்டமிருந்ததோ, இல்லையோ, இனிமேல் என் நல்ல அம்சம்தான் எனக்குக்கதி. ஆகா! அதை நினைக்கும்பொழுது நான் என்ன ஆனந்தமடைந்தேன்! மனப் பூர்வமான பணிவுடன் என் இயற்கை வாழ்வின் நிர்ப்பந்தங்களை ஏற்றுக்கொண்டேன். நான் அவ்வளவுநாளு உபயோகித்து வந்த அந்தக் கதவைப் பூட்டி, சாவியைக் காலின்கீழ் போட்டு மிதித்து ஒடித்தேன்—அச்செயலை, மனம் விட்டு, எப்பேர்பட்ட விரக்தியுடன் செய்தேன்!

அடுத்த நாள் கொலையைப்பற்றிச் செய்திகள் வந்தன. ஹைடின் குற்றம் உலகத்திற்கு வெட்ட வெளிச்சமாயிற்று. கொலை யுண்டவர் நல்ல ஜன மதிப்புப் பெற்றவர். கொலை ஒரு குற்றம் மட்டுமல்ல; ஒரு கோரமான முட்டாள்தனம் என்று ஜனங்கள் கூறினர். அதை அறிந்து நான் கொஞ்சம் நிம்மதி அடைந்தேன். என்னுடைய நல்லுணர்ச்சிக்கு தூக்குமேடையின் நினைவு இம்மாதிரி ஒரு பந்தோபஸ்தாகவும் பாதுகாப்பாகவும் இருந்ததைப்பற்றிக் கொஞ்சம் சந்தோஷம் கூட அடைந்தேன். இனிமேல் ஜெகில்தான் எனக்கு அபயமளிக்கும் கோட்டை, ஹைட் ஒரு விநாடி வெளியே தலை நீட்டினாலும் போச்சு. அவனை ஹதம்செய்ய ஜனங்கள் காத்திருந்தார்கள்.

பழைய வாழ்க்கையின் தீமையை இனிமேல் நடத்தப்போகும் வாழ்க்கையின் மூலம் பரிகாரம் செய்துவிடலாம் என்று மும்முரித்தேன். அதன்படி கொஞ்சம் பலன்கூட ஏற்பட்டதென்று நான் உண்மையாகவே கூறக்கூடும். சென்ற வருஷத்தின் இறுதியில் ஜனங்கள் துக்கத்தையும் பிணியையும் நீக்க நான் என்னபாடுபட்டேன் என்பது உனக்கே தெறியும். நான் பிறருக்கு என்ன செய்தேன் என்பதையும், என் வாழ்நாட்கள் எவ்வளவு அமைதியாகவும் சந்தோஷமாகவும் கழிந்தன என்பதையும் நீ அறிவாய். இந்தப்புனிதமான பரோபகார வாழ்க்கையில் எனக்குச் சலிப்பு ஏற்பட்டது என்று நான்

சொல்லமாட்டேன். சொல்லப்போனால் நாளுக்கு நாள் நான் அதில் ரொம்ப ஈடுபட்டுப் போனேன். ஆனால் அந்த நாசமாய்ப்போன இரட்டைச் சுபாவம் என்னைவிட்டு இன்னும் நீங்கவில்லை. என் பசசாத் தாபத்தின் முனை மழுங்கிற்று; காலம் செல்லச் செல்ல. நீடித்துச் சலுகை காட்டப்பட்டிருந்து திடீரென்று அடைபட்டுப்போயிருந்ததால், என் தீய அம்சம். உள்ளே உறும ஆரம்பித்தது. ஹைடை உயிர்ப்பிப்பது என்ற எண்ணம் கனவிலும் எனக்குக் கிடையாது. நினைத்தாலே நான் வெறி பிடித்தவன்போலாகி விடுவேன். என்னுடைய நல்ல அம்சத்திற்கே, நான் என் மனச்சாட்சியைக்கூடத் தட்டிக் கடத்தலாமென்ற தூண்டுதல் நாளா வட்டத்தில் ஏற்பட்டது. ஒரு சாதாரண, குற்றம் செய்பவன் போலத்தான் நான் மறுபடியும் தீய தூண்டுதல்களுக்கு ரகசியமாக மனத்தில் இடம் கொடுக்கலானேன்.

எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டல்லவா? எவ்வளவு பெரிய பாத்திரமும் நிரம்பித்தானே போகிறது? என் துஷ்டப்பிரகிருதிக்கு நான் மனத்தில் கொஞ்சம் இடம் கொடுத்தது ஆபத்தாகி விட்டது. என் ஆத்துமாவைச் சீரழித்துவிட்டது அது. ஆனால் நான் பயப்படவில்லை. ஏனெனில் அந்த வீழ்ச்சி, நான் அந்த மருந்தைக் கண்டு பிடிப்பதற்கு முன்னால் என் மனத்திலிருந்த நிலையைத் தான் ஒத்திருந்தது.

ஜனவரி மாதத்தில் மேகமற்ற ஒருநாள்: ரீஜண்ட்ஸ் பார்க்கில் பின்பனிக்காலத்தின் கலகலப்பும் இளவேனிலின் மணவினிமையும் நிறைந்திருந்தது. நான் வெயிலில் ஒரு பெஞ்சியின்மேல் உட்கார்ந்திருந்தேன். என்னுள் படுத்துக்கொண்டிருந்த துஷ்டமிருகம் நினைவின் மாமிசத் துண்டங்களை ஆசையுடன் நக்கிச் சுவைத்துக் கொண்டிருந்தது; ஆத்மீக அம்சம் அயர்ந்திருந்தது: தப்புச் செய்தால் பிறகுதான் ஈடு செய்தாகி விடுகிறதே என்ற தேறுதல் எண்ணம் தலையெடுத்துக்கொண்டிருந்தது. நானும் இதரமனிதர்கள் போலத்தானே என்ற எண்ணம் உதித்தது. அவர்களுடன் என்னை ஒத்துப் பார்த்துக்கொண்டேன். நான் எவ்வளவு ஊக்கத்துடன் நற்கருமங்கள் செய்திருக்கிறேன்? அவர்கள் எவ்வளவு கொடுமையாகக் கடமையைக் கவனிக்காமலிருக்கிறார்கள்? இந்தத் தற்பெருமை எண்ணம் உதித்த நிமிஷம் என் உடல் நடுக்கமெடுத்தது; கொடிய குமட்டல் ஏற்பட்டது; இவை மாறியதும் நான் மயக்கமாக உட்கார்ந்திருந்தேன். கொஞ்சம் மயக்கம் தெளிந்ததும், என் எண்ணங்களின் போக்கில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்ததாகக் கண்டேன். ஆபத்தைத் துச்சமாகக் கருதும் ஒரு துணிச்சலும், பொறுப்பை உதறித்தள்ளும்படியாக, கட்டுப்பாட்டிலிருந்து ஒரு விடுதலையும், ஏற்பட்டதுபோலத் தோன்றிற்று. குனிந்து பார்த்தேன். என் சூம்பிய அங்கங்களின்மேல் என் உடைகள்

உருவற்றுத் தொங்கிக் கொண்டிருந்தன. என் முழங்காலின் மேல் கிடந்த கை எலும்பெடுத்து ரோமம் நிறைந்ததாய் இருந்தது. நான் மறுபடியும் ஹைடாகி விட்டேன் ஒரு நிமிஷத்திற்கு முன்பு, நான் மனிதர்களின் மதிப்பிற்குரிய; செல்வந்தனை ஜெகில். வீட்டில் சாப்பாடு தயாராகிக் காத்திருந்தது! இப்பொழுது, நான் வீடற்ற திக்கற்ற ஒரு குற்ற வாளி. கொலைகாரன். தூக்கு மேடைக்கு உட்பட்ட வன். மனித வர்க்கமே வேட்டையாடித்துழாவும் ஒரு மிருகம்!

என் யோசனை சக்தி கொஞ்சம் தடுமாறிற்று; ஆனால் சுவாதீனமற்றுப் போகவில்லை. என்னுடைய இந்த இரண்டாவது உருவில் என்னுடைய புலன் களும் சக்திகளும் மிகவும் தீக்ஷண்யம்கொண்டு வேலை செய்ததை நான் அநேகம் தடவைகளில் கவனித்திருக்கிறேன். ஆகையால், இந்தச் சந்தர்ப் பத்தில் ஜெகில் தளர்ச்சி யடைந்தாலும் ஹைட் நிலைமையின் நெருக்கடியைச் சமாளிக்கத் தயாராகி விட்டான். என் மருந்தோ என் அறையில் ஒரு அலமாரியில் இருந்தது. அதை நான் எப்படி அடைவது? தலையைப் பிடித்துக்கொண்டு அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக வெகு தீவிரமாக யோசித்தேன். ஆராய்ச்சி சாலைக் கதவைத்தான் நிரந்தரமாகப் பூட்டிவிட்டேன். வீட்டின் வழியாகப் போக முயற்சி செய்தேனே, என் வேலைக்காரர்களே என்னை தூக்கு மேடைக்கு அனுப்பிவிடுவார்கள்.

ஆகையால் நான் வேறு யாரையாவது பிடிக்க வேண்டுமென்று தீர்மானித்தேன். டாக்டர்லான்யன் தான் சரியான ஆள். ஆனால் அவனிடம் எப்படி அண்டுவது? எப்படி அவனைத் தூண்டுவது? தெருக்களில் கைதியாகாமல் தப்புவதாக வைத்துக்கொண்டாலும், நான் லான்யனுக்கு முன் எப்படித் தோன்றிப் பேசுவது? என்னை அவனுக்கு முன்பின் தெரியாது; என்னைப் பார்த்தாலே வெறுப்பு ஏற்படும். எப்படி அந்தப் பிரபல வைத்தியனைச் சரிப்படுத்தி அவனுடைய நண்பர் ஜெகிலின் அறையைச் சோதனைப் போடச் சொல்வது? அப்பொழுது என்னுடைய பழைய ஸ்வபாவத்தின் ஒரு மாறாத பகுதி ஞாபகத்திற்கு வந்தது. நான் என் எழுத்திலேயே எழுதக்கூடு மல்லவா? பற்றி வைப்பதற்கு இந்தப் பொறி தோன்றியதுதான் தாமதம், நான் நடந்து கொள்ளவேண்டிய வழி பூராவும் முதலிலிருந்து கோடிவரையில் நன்கு தெரிந்து விட்டது.

உடனே உடைகளைக் கூடியவரையில் சரிப்படுத்திக்கொண்டு, ஒரு வண்டியை அமர்த்திக்கொண்டு, போர்ட்லாண்ட் தெருவிலிருந்த ஒரு ஹோட்டலுக்குப் போய்ச் சேர்ந்தேன். என் வேஷத்தைப் பார்த்து (என் உடைக்குள் இருந்தது பச்சை உண்மை எனினும் தோற்றம் கோமாளி மாதிரிதான் இருந்தது) வண்டிக்காரனுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. அசுர கோபத்துடன் பல்லை

நெற நெற வென்று கடித்துக்கொண்டு அவனைப் பார்த்தேன். அவன் சிரிப்பு பறந்துபோய் விட்டது நல்ல வேளையாக. இல்லாவிட்டால் மறு நிமிஷம், நிச்சயமாக, அவனை அவன் இடத்திலிருந்து இழுத்துக் கீழே தள்ளி யிருப்பேன். ஹோட்டலில் நான் நுழைந்ததும் பார்த்த கொடூரப் பார்வையில் பணியாட்கள் எல்லோரும் பயந்து போனார்கள். என் முன் அவர்கள் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. வணக்கத்துடன் நான் சொன்னதைச் செய்தார்கள். ஒரு தனியறைக்கு என்னை அழைத்துச் சென்றார்கள். நான் கேட்ட காகிதம், பேனா, மைக் கூட்டைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். உயிருக்குப் பயப்பட வேண்டிய நிலையிலிருந்த ஹைடை நான் அப்பொழுதுதான் முதன் முதலாகக் கண்டேன். அசாதாரணமான கோபத்தால் துடிதுடித்துக்கொண்டு, கொலை கூடச் செய்யத் தயாரான மன நிலையில் துன்பம் விளைவிக்க வேண்டு மென்ற வேட்கை கொண்டிருந்தான். ஆனால், அப்பொழுதும் மகா சாதுரியமான பிராணியாயிருந்தான். மகத்தான மனோதிடத்துடன் தன் கொடுங் கோபத்தை அடக்கிக்கொண்டான். லான்யனுக்கும் பூலுக்கும் கடிதங்கள் எழுதினான். அவைகள் தபாலில் சேர்ந்தன வென்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக ரிஜிஸ்டர் செய்து அனுப்பச்சொல்லிக் கொடுத்தனுப்பினான்

பிறகு, அந்தத் தனி அறையில் நாள் பூராவும்

கணப்பினருகே உட்கார்ந்துகொண்டு நகங்களைக் கடித்துக்கொண்டே பொழுது போக்கினான். அங்கேயே சாப்பிட்டான். அவனுடைய மனத்தில் எழுந்த பீதிகள்தான் அவனுக்குத் துணை. உணவு கொண்டுவந்த பணியாள் அவனைக் கண்டு நடுங்கினான். நன்றாக இருட்டினதும், ஒரு மூடிய வண்டியின் மூலையில் பதுங்கிக் கொண்டு, தெருத் தெருவாகப் போனான். அவன் என்கிறேன்—நான் என்று என்னால் சொல்லக்கூடவில்லை. அந்த அசுரனிடம் மனுஷ்யகுணம் கொஞ்சங் கூடக் கிடையாது. ஒரு பக்கம் கண்டுபிடிக்கப்பட்டு விடுவோமோ என்று பீதியும் மற்றொருபுரம் எல்லோரையும் கண்டால் ஒரு வெறுப்பும்தான் அவனிடம் இருந்தன. ஒருவேளை வண்டிக்காரனுக்கே சந்தேகம் ஏற்படுமோ என்று பயந்து, அவனுக்கு வாடகை கொடுத்தனுப்பிவிட்டு நடக்க ஆரம்பித்தான். உடலுக்குப் பொருந்தாத உடைகளுடன், எல்லோரும் கவனிக்கும்படியான நடையுடன், இராக்காலத்தில் ஜனங்கள் நடுவே அவன் போகும்பொழுது, அவன் மனத்தில் மேலே குறிப்பிட்ட இரண்டு உணர்ச்சிகள் தான், புயல் போலப் பொங்கிக் கொண்டிருந்தன. அவனுடைய பயங்களே அவனைத் துரத்திச் சென்றன. தனக்குத் தானே ஏதோ பேசிக்கொண்டு அதிகம் ஜனப் பழக்கம் இல்லாத தெருக்கள் வழியே வேகமாக நடந்தான். நள்ளிரவை எதிர்பார்த்தவண்ணம் இடையே

இருந்த நிமிஷங்களை எண்ணிக் கொண்டிருந்தான். ஓரிடத்தில் வழியில் ஒரு பெண்பிள்ளை அவனிடம் எதோ சொல்லி, ஒரு பெட்டியைக் கொடுக்க வந்தாள். அவன் அவளை ஓங்கி முகத்தில் அறைந்தான். அவள் பறந்தோடிவிட்டாள்.

லான்யனின் அறையில் நான் என் சுயரூபத்தை அடைந்தவுடன், என் நண்பன் கொண்ட திகிலும் பிரமிப்பும் எனக்குக் கொஞ்சம் வருத்தமாகத்தான் இருந்தது என்று நினைக்கிறேன்; ஆனல் அதற்கு முன் சென்ற சில நாழிகைகளின் சம்பவங்களை நினைத்தபொழுது எனக்கு ஏற்பட்ட அருவருப்பில் அது சமுத்திரத்தில் ஒரு துளி ஜலம்போல. நான் வேறொரு மாறுதல் அடைந்துவிட்டேன். தூக்கு மேடைக்குப் போய்விடுவோமோ என்ற பயம் போயிற்று; ஹைடாக இருக்கவேண்டிய திகிலே என்னை வாட்டிற்று. லான்யன் மொழிந்த கண்டனங்களையெல்லாம் கனவு காண்பவன் போலக் கேட்டேன். கனவில் இருப்பவன் போலவேயே வீட்டிற்குத் திரும்பிப் படுக்கைக்குச் சென்றேன். அன்றைய அலுப்பில் நன்ருகத் தூங்கினேன்; என் துர்ச்சொப்பனங்கள் கூட என்னை எழுப்பவில்லை. காலையில் எழுந்தபொழுது ரொம்பப் பலஹீனமாகிவிட்டேன்; ஆனல் கொஞ்சம் தெளிவு ஏற்பட்டிருந்தது. எனக்குள்ளேயே உறங்கிக்கொண்டிருந்த காட்டு மிருகத்தைப்பற்றி எண்ணவும் பயப்பட்டேன், வெறுத்தேன். முதல் நாள் நடந்த திடுக்கிடச்

செய்யும் ஆபத்துக்களையும் மறக்க முடியவில்லை. ஆனால், மறுபடியும், நல்ல வேளையாக, என் வீட்டில் என் மருந்துகளின் அருகில் இருந்தேன். நான் தப்பினதற்காக என்னுள் எழுந்த நன்றி உணர்ச்சி, இனிமேல் தொல்லையில்லை என்ற மகிழ்ச்சி போலவே காணப்பட்டது.

சாப்பாடானதும், சாவகாசமாக, முற்றத்தில், குளிர்காற்றின் இதத்தை அநுபவித்துக் கொண்டு நடந்து கொண்டிருந்தேன்; திடீரென்று மாறுத லுக்கு அறிகுறியான சின்னங்கள்தோன்றி என்னை அழிக்க ஆரம்பித்தன. அறைக்குள் ஓடி மறைவதற் குத்தான் பொழுதிருந்தது. மறுபடியும் ஹைடின் ஆக்ரோஷத்துடனும், கோபாவேசத்துடனும் துடி துடித்துக் கொண்டிருந்தேன். இந்தத் தடவை இரண்டு மடங்கு மருந்து சாப்பிட்டுத்தான் சுய ரூபத்தை அடைந்தேன். ஆனால், ஆறுமணி நேரத் திற்குப் பிறகு கணப்பில் கவனம் செலுத்தி உட்கார்ந்து கொண்டிருக்கையில், மறுபடியும் வேதனைகள் ஆரம்பித்தன; மறுபடியும் மருந்து சாப்பிட வேண்டியதாயிற்று. அதுமுதல், மொத் தத்தில், பெருத்த முயற்சியினாலோ அல்லது மருந்து சாப்பிடுவதினாலோ தான் நான் ஜெகில் உருவத்தில் இருக்க முடிந்தது என்று வெட்ட வெளிச்சமாகி விட்டது. இரவோ, பகலோ, எந்த நேரத்திலும், நிமிஷத்திலும், முன் கூட்டிவரும் நடுக்கம் ஏற்படும்; இன்னும் என்ன விசேஷம்,

தூங்கினாலும் சரி, கொஞ்சம் கண்ணயர்ந்தாலும் சரி, நிச்சயம், ஹைடாகத்தான் கண்திறந்தேன். இந்த ஆபத்து நேருவதைப்பற்றிய இடைவிடாக்கவலை யாலும், அதனால் நான் வேண்டுமென்றே தூங்காம லேயேஇருந்து விட்டதாலும், மனிதனுக்கு இப்படி யும் ஏற்படும் என்றுநான் எண்ணுதவகையில், நான் நோய் வாய்ப்பட்டு, மனத்திலும் சரீரத்திலும் ஒடுங்கி மலினமடைந்தேன். இந்த ஒரே எண்ணம் சதா சர்வ காலமும் என்னைப் பிடித்து வாட்டியது— என்னுடைய இரண்டாம் அம்சத்தைப் பற்றிய திகில். ஆனால் தூங்கும்போதோ அல்லது மருந்தின் வேகம் குறைந்து போன பொழுதோ, மாறுத லில்லாமலேயே (மாறுதல் காலத்து வேதனைகள் நாளடைவில் குறைந்து விட்டன) பயங்கரத் தோற்றங் கொண்ட மனோபாவமும், காரணமற்ற வெறுப்புகள் நிறைந்த மனமும், குமுறிய ஆவேச சக்திகளைத் தாங்க முடியாத தேகமும் கொண்டவன் போலாகிவிடுவேன். ஜெகில் அசௌக்கியம் அடைய அடைய ஹைடின் சக்திகள் விருத்தியடைந்தன போல் தோன்றிற்று. அவர்கள் இருவரும் ஒருவர் மேல் மற்றொருவர் கொண்டிருந்த வெறுப்பு சமமாகத்தான் இருந்தது. ஜெகிலின் வெறுப்பு அவருடைய உடன்பிறந்த இயற்கையுடன் சேர்ந் திருந்தது. சேதனையிலும் சாவிலும் மட்டும், சமவார்சாக, தன்னுடன் சேர்ந்து பாகம் கொண்ட அவனுடைய முழு வக்கிரமும் ஜெகிலுக்கு

இப்பொழுது புலப்பட்டது. இந்த இரண்டு விதமான இணைப்புக்களே மகா சங்கடமாக இருந்தன. ஹைட் ஒரு அசுரன். அதிலும் உறுப்பற்ற கொடுமை சொரூபம் என்பது ஜெகிலின் முடிவு. இதுதான் மிகவும் மோசமானதாயிருந்தது; படுகுழியின் சாக்கடைச் சேறு பேசுவது போல இருந்தது; கண்காணு ஆபாசம் கையையும் காலையும் ஆட்டி ஆர்ப்பாட்டம் செய்து தீமை இயற்றியது. உருவ மற்று இருந்த பொருள் உயிரின் வேலையைச் செய்தது; இன்னும் இந்தக் கோரச் சூழ்வு, தன்னுடன், மனைவியைக் காட்டிலும் நெருக்கமாக, கண்ணைக் காட்டிலும் நெருக்கமாக, தன்னுடன் பிணைக்கப்பட்டிருந்தது பெருங் கொடுமை! ஜெகிலின் சரீரத்தில் அடைபட்டுக் கிடந்தது, முணுமுணுப்பதும் விடுதலை யடையத் தத்தளிப்பதும் தெரிந்தது. மனத்தளர்ச்சியிலோ தூக்கத்திலோ ஜெகிலை மீறி அவரைக் கீழேதள்ளி விட்டு உயிர் ஆசனத்தில் உட்கார்ந்து கொள்ளுகிறது. ஹைட் ஜெகிலிடம் கொண்ட வெறுப்பு வேறு விதமானது. தூக்குமேடையின் நினைப்பும் திகிலும்தான் அவன் அடிக்கடி தற்கொலை செய்து கொள்ளச் சம்மதித்ததின் காரணம். ஆனல் தீராதென்றே, அதை வெறுத்துக் கொண்டேதான், தான் தனி ஆளாகவே இருப்பதைவிட்டு ஒரு அம்சமாக மாறுவதைப் பொறுத்துக் கொண்டிருந்தான்; ஆனல் ஜெகிலின் மனத்தளர்ச்சி அவனுக்குப் பிடிக்கவே இல்லை;

ஜெகில் தன்னை வெறுப்பதும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் அவன் என்னிடம் அநேக குரங்குச் சேஷ்டைகள் செய்தான். என் புத்தகங்களில் தாறுமாறாக வசைகளைக் கிறுக்குவான். சில கடிதங்களை எரித்துவிடுவான். என் தகப்பனாரின் படத்தைக் கிழித்தெறிந்து விட்டான். அவனுக்கு மரண பயம் என்பது ஒன்றில்லா விட்டால் இத்தனை நாளைக்குள் ஜெகிலை வீழ்த்துவதற்காகவே ஏதாவது சங்கடங்கள் ஏற்படுத்தியிருப்பான். அவன் தன் உயிரில் வைத்திருந்த அபிமானம் உண்டல்லவா? அது மிகவும் அற்புதம். நான் இன்னுங்கூட ஒன்று சொல்லுவேன். அவனைப்பற்றி நினைக்கும் பொழுதே என்க்கு அருவருப்பும் நடுக்கமும் ஏற்பட்ட போதிலும், அவனுடைய உயிராசையும், தற்கொலையால் நான் அவனை இல்லாமல் செய்துவிட முடியுமென்ற எண்ணமும் அவனை எவ்வளவு படிந்தும் பயந்தும் நடக்கச் செய்தன என்பதைக் காண்கிறபொழுது அவனிடம் எனக்குக் கொஞ்சம் இரக்கமேற்படுகிறது.

இவ்வரலாற்றை இன்னும் வளர்ப்பதில் உபயோகமில்லை; சாவகாசமும் இல்லை. என்னைப்போல ஒருவரும் இந்த மாதிரி வாதனைப்பட்டதில்லை என்று சொன்னால் போதுமானது. ஆனால் இந்த வேதனைகள் வழக்கத்தால் குறையவில்லை. அவசியம் ஏற்பட்டது, பட்டுத்தான் ஆகவேண்டும் என்ற திடம் ஏற்பட்டது. இந்த மாதிரித் தண்டனை எனக்கு இன்னும்

வருஷக் கணக்கில் இருந்துகொண்டே யிருக்கலாம். ஆனால் இப்பொழுது கடைசியாக ஒரு ஆபத்து நேர்ந்துவிட்டது; இதிலிருந்துநான் தப்பமுடியாது. இதன் மூலம் எனக்கும், என் சுபாவம் உருவம் இவைகளுக்கும் சம்பந்தமே இல்லாமல் போகப்போகிறது. என்னிடமிருந்த உப்பு செலவழிந்துபோய்க் குறைய ஆரம்பித்துவிட்டது. முதல் பரீட்சைக் காலமுதல் அதை நான் மறுபடியும் வாங்கவே இல்லை. புதிதாகக் கொஞ்சம் வரவழைத்துக் கலந்து பார்த்தேன். பொங்கி முதல் தடவை வர்ணமாறுதலும் ஏற்பட்டது. இரண்டாம் தடவை மாறுதல் ஏற்படவில்லை. அதைக் குடித்துப் பார்த்தேன். அது பயன்படவில்லை. பழைய உப்பைத் தேடி நான் லண்டனையே அலசிப் பார்த்து விட்டேன் என்று பூல் உனக்குச் சொல்லுவான். எங்கும் கிடைக்கவில்லை. எனக்கு முதலில் கிடைத்த 'ஸ்டாக்' அசுத்தமான உப்புப் போலிருக்கிறது. அந்த அசுத்தம் தான் மருந்தினுடைய வேகத்திற்குக் காரணமாயிருந்திருக்கவேண்டும்.

ஒரு வாரமாகிறது. உப்பில் கடைசியாக மிச்சமிருந்ததின் வேகத்தில் இந்த வரலாற்றை முடித்துக்கொண்டிருக்கிறேன். ஏதாவதொரு எதிர்பாராத விபரீதம் நேர்ந்தாலொழிய இதுதான் கடைசி முறையாக ஜெகில் தன் எண்ணங்களை எண்ணுவது, தன் முகத்தை கண்ணாடியில் பார்த்துக்கொள்வது (என்ன பரிதாபகரமான மாறுதல்!). இதை முடிப்பதில்

இன்னும் அதிகத் தாமதமும் செய்யக்கூடாது. இது வரையில் இதை ஹைட் ஒன்றும் செய்யாமல் வைத் திருக்கிறான் என்றால் அதற்குக் காரணம் நல்ல காலமும் முன் ஜாக்கிரதையும் தான். இதை எழுதிக் கொண்டிருக்கும் பொழுது உருமாற்றம் ஏற்பட்டால், நிச்சயம் ஹைட் இதைக் கிழித்தெறிந்து விடுவான்; இதை நான் எழுதி முடித்தபிறகு கொஞ்சம் நேரம் கழிந்துவிட்டால், அநேகமாக இதை அவன் ஒன்றும் செய்யாமலிருக்கலாம். சுயநலமும் சூக்ஷ்ம புத்தியும் சேர்ந்து நிலைமையை அவன் நன்றாக அறியுமாறு உதவலாம். சொல்லப் போனால் இதுவரையும் நெருங்கிக் கொண்டிருக்கும் விபத்து அவனைக் கொஞ்சம் மாற்றிக் குலைத்துவிட்டது. இன்னும் அரைமணிக்கெல்லாம் நான் நிரந்தரமாக அந்த நாசமாய்ப்போன உருவத்தை அடைந்து விடுவேன். என் நாற்காலியில் நடு நடுங்கிக் கதறிக் கொண் டிருப்பேன்; தவறினால் மிகவும் கவனமாகக் காலடிகளை உற்றுக் கேட்டுக்கொண்டு இந்த அறையில் அங்கும் இங்குமாக நடந்துகொண் டிருப்பேன். இந்த அறைதான் என் கடைசிச் சரணாகதிஸ்தலம். என்னைத் தேடிவரும் ஒவ்வொரு சத்தத்தையும் கவனித்துக் கொண்டிருப்பேன். ஹைட் தூக்கு மேடைக்குப் போய்த்தான் தீருவானோ அல்லது கடைசி நிமிஷத்தில் தன்னை விடுதலை செய்துகொள்ள அவனுக்கு மனோதைரியம் ஏற் படுமோ—கடவுளுக்குத்தான் தெரியும். அதைப்

பற்றி எனக்குக் கவலையில்லை. இதுதான் என்னுடைய உண்மையான மரணகாலம். இனிமேல் நடக்கப்போவது வேறொருவனுடைய விஷயம்; இங்கே, இந்த வரலாற்றை முடி[illegible]ப் பேனாவை கீழே வைத்து விடுகிறேன்; கவரை சீல்செய்து, துர்ப்பாக்கியவானான ஜெகிலின் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வருகிறேன்.

# ஸப்த நதிகள்

**காகா கலேல்கர்**

இந்தியாவின் ஏழு முக்கிய நதிகளின் வரலாற்றை ஆசிரியர் வர்ணித்திருக்கிறார்.

இதைத் திரு. கா. ஸ்ரீ. ஸ்ரீ. தமிழாக்கியிருக்கிறார்

**விலை ரூ. 1-4-0**

# இந்தியாவும் பொதுநல சமுதாயமும்

க. சந்தானம்

ஆசிரியர் க. சந்தானம் பொருளாதாரத்தில் நிபுணர். சுபிட்சமாக வாழவேண்டுமானால், மக்கள் சமத்துவமாக வாழவேண்டுமானால், எவ்வெவ் முறைகளை செயலளவில் கொண்டுவரவேண்டும் என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார். அரசியல் நிர்ணய சபை அங்கத்தினரும், ஹிந்துஸ்தான் [illegible] ஆசிரியருமான அவரைத் தமிழ்நாட்டார் ந[illegible]

1x8 கிரவுன் 176 பக்கங்கள் அழகிய [illegible]

விலை ரூ. 2-4-0

JACKET PRINTED AT THE B. N. K. PRESS, MADRAS, PAPER SUPPLIED BY PARTY